
ISSN 1888-1246

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

விழி: 05 செப்டெம்பர் 2008 பார்வை: 49 விலை: ரூபா 70/-



• பிரதிபலிப்பு கற்பித்தல் மாதிரி

• ஆசிரியர் - மாணவர் தொடர்பு...


• வளந்தோர் கல்விக் கோட்பாடுகள்

• பண்பாடும் சீர்மியமும்

* க. சுவர்ணராஜா * ஆர்.லோகேஸ்வரன் * சோ.சந்திரசேகரன் * கி. புண்ணியமூர்த்தி
* சபா ஜெயராசா * ஆ. நித்திலவர்ணன் * ம.நிரேஸ்குமார் * நிஷா * அ. பஞ்சலிங்கம்

# வெளிவந்துவிட்டது

# கூடம் - 9




**விலை: 100.00**

*தொடர்பு:*
*3, டொரிங்டன் அவனியூ*
*கொழும்பு 07*
தொலைபேசி: 011 250 6272
மின்னஞ்சல்: *koodam@viluthu.org*

ISSN 1888 - 1246

# அகவிழி

மாத இதழ்
ஆசிரியர்:
தெ. மதுசூதனன்
ஆசிரியர் குழு :
சாந்தி சச்சிதானந்தம்
ச. பாஸ்கரன்
காசுபதி நடராஜா
நிர்வாக ஆசிரியர் :
மனோ இராஜசிங்கம்
ஆலோசகர் குழு :
பேரா.கா.சிவத்தம்பி
(தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
கலாநிதி சபா.ஜெயராசா
(முன்னாள் பேராசிரியர் கல்வித்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
பேரா.சோ.சந்திரசேகரன்
(பீடாதிபதி, கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்)
கலாநிதி ஹூசைன் இஸ்மாயில்
(துணைவேந்தர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)
கலாநிதி ப.கா.பக்கீர் ஜ/பார்
(கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)
கலாநிதி மா.கருணாநிதி
(கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்)
பேராசிரியர் மா.செல்வராஜா
(கல்வித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்)
கலாநிதி உ.நவரட்ணம
(பணிப்பாளர், சமூகக்கற்கை, தேசிய கல்வி நிறுவகம்)
தை. தனராஜ்
(முதுநிலை விரிவுரையாளர், கல்விப்பீடம் இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)
மா.சின்னத்தம்பி
(முதுநிலை விரிவுரையாளர், கல்வித்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

அச்சு:
ரொக்னோ பிரின்ட், கொழும்பு - 06
தொலைபேசி: 0777-301920
வெளியீடு மற்றும் தொடர்புகட்கு:
AHAVILI
3, Torrington Avenue, Colombo - 07.
Tel 011-2506272
E-mail ahavili2004@gmail.com
ahavili2004@yahoo.com

## உள்ளே...

- பிரதிபலிப்பு கற்பித்தல் மாதிரி 03
- ஆசிரியர் - மாணவர் தொடர்பு எவ்வாறு அமைதல் வேண்டும் 09
- கல்வி ஒளியை வெற்றிகரமாக பரப்பி வரும் அகவிழி 13
- வளர்ந்தோர் கல்விக் கோட்பாடுகளும தேசிய கல்விக் கல்லூரிகளில் அவற்றின் பிரயோகங்களும் 15
- பண்பாடும் சீர்மியமும் 25
- இலங்கையில் ஆசிரிய பயிற்சிகளில எதிர்நோக்கப்படும் சவால்கள் 29
- கற்றல் கற்பித்தலில் செயல்முறைக கல்வியின் அவசியம் 33
- ஒரு அதிபரின் டயரியிலிருந்து.... 35
- விருந்தினர் பக்கம்.... 37
- நூலகம் 38

அகவிழியில் இடம் பெறும் கட்டுரைகளுக்கு அதன் ஆசிரியர்களே பொறுப்பு, கட்டுரைகளில் காணப்படும் கருத்துக்கள் "அகவிழி"யின் கருத்துக்கள் அல்ல.

# ஆசிரியரிடமிருந்து...

இன்று பரவலாக கல்வித்துறை மற்றும் ஆசிரியர் கல்வி தொடர்பாக பல்வேறு விமரிசனங்கள் பல நிலைகளில் பலவாறு முன்வைக்கப்பட்டு வருகின்றன. இதனால் கல்வியின் தரமேம்பாட்டுக்கான அணுகு முறைகளையும் உபாயங்களையும் முன்வைப்பதில் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

'தரமான கல்விக்கு தரமான ஆசிரியர்' என்ற சிந்தனை பன்னாட்டு அனுபவங்களிலிருந்து மேலெழுச்சி பெறும் சிந்தனையாகவும் செயல்வாதமாகவும் மற்றும் முழக்கமாகவும் வலியுறுத்தப்படுகின்றன. இலங்கையிலும் இந்தச் சிந்தனை முழக்கம் கேட்கத்தான் செய்கிறது. இதனால் பாட ஏற்பாட்டு சீர்திருத்தங்கள் கூட தரவிருத்தியை கருத்தில் கொண்டே முன்மொழியப்படுகின்றன. புதிய மாறுதல்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தும் நோக்கில் ஆசிரியரின் தரமேம்பாடு முக்கியமாகின்றது. ஆகவே ஆசிரியர் கல்வியும் ஆசிரியர் பயிற்சியும் முக்கியத்துவம் பெறுகின்றது. இத்தகைய முயற்சியிலே பல்வேறு நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன.

ஆயினும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கல்வியும், பயிற்சியும் வகுப்பறை செயற்பாடுகளில் முழுமையாக பயன்படுகின்றதா? என்னும் விடயம் மாணவர் பெற்றோர் மற்றும் சமூகத்தின் மத்தியில் பெரும் சந்தேகமாகவே உள்ளது.

பொதுவாக கல்வியின் தரவிருத்தி பற்றி சிந்திக்கும் பொழுது கல்வியின் தராதர வீழ்ச்சி பற்றிய பின்னோக்கிய பார்வையும் எமக்கு வேண்டும். இந்த மரபில் நின்று கொண்டு தான் ஆசிரியரின் தரமேம்பாடு பற்றிய தேடுகைக்கான மூலங்களை இனங்கான முடியும். குறிப்பாக ஆசிரியருக்கு இதுவரை வழங்கப்பட்ட கல்வியும் பயிற்சியும் ஆசிரியர் தர விருத்தியின் மற்றும் கல்வித் தரவிருத்தியின் பன்முகத் தன்மைகளை அடையாளம் காட்டும் அம்சங்கள் தனித்தனியாக ஆராயப்படவேண்டும். இவற்றை மையப்படுத்திய விவாதங்கள் விமரிசனங்கள் உடனடித்தேவையாகின்றன.

இன்று இதற்கு துணை செய்யும் வகையில் எம்மைச் சூழ பல்வேறு சம்பங்கள் கல்வித்துறையில் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. சமீபத்தில் இலஞ்சத் தடுப்பு ஆணைக்குழு அதிகாரிகளினால் சில பாடசாலை அதிபர்கள் கைது செய்யப்பட்ட சம்பவங்கள் வெளிச்சத்திற்கு வந்துள்ளன. இவர்கள் முறையற்ற வகையில் இலஞ்ச ஊழல்களில் சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்று தெரியவருகின்றது.

இதுவரை இலஞ்ச ஊழல் தலைவிரித்தாடும் துறையாக பொலிஸ்திணைக்களமே எப்போதும் அடையாளம் காணப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் இப்போது இலங்கைக் கல்வித் துறைக்குள் இலஞ்ச ஊழல் மிக மோசமாக பரவ ஆரம்பித்திருக்கின்றது. இதனை உறுதிப்படுத்தும் வகையிலேயே சம்பவங்கள் பெருகி வருகின்றன.

இன்று பிரபல நகர்ப்புறப் பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை அனுமதிப்பதில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. இதில் உயர் நீதிமன்றம் கூட தலையிடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. மாணவர்களை அனுமதிப்பதில் கடைப்பிடிக்கப்படும் விதிமுறைகளில் இருக்கக்கூடிய ஓட்டைகள் பல பெற்றோர்களை சுயநலம் சார்ந்து ஏமாற்றுக்களுடன் பொய்களுடன் மற்றும் கயமைத்தனங்களுடன் செயற்படுவதற்கான துணிவைக் கொடுக்கின்றது.

இதற்கு அதிபர் ஆசிரியர் சிலர் துணை போகின்றார்கள். மாணவர் அனுமதியில் பல தொகைகள் கை மாறப்படுவதாகவும் செய்திகள் உள்ளன. ஆக இலஞ்சமும் ஊழலும் படிப்படியாக கல்வித் துறைக்குள் பரவ ஆரம்பித்துள்ளது என்பது உண்மைதான். இதன் மூலம் அதிபர் ஆசிரியர் சிலர் தமது பொறுப்புக்கள் கடமைகள் ஆகியவற்றில் இருந்து விலகி நடக்கின்றார்கள். இவர்கள் பெற்ற கல்வியும் பயிற்சியும் கூட இவர்களை மாற்றவில்லை. மத்திய தர வர்க்கத்தின் சுயநலம் கல்வித்துறைக்குள் முறையற்ற செயல்களை தூண்டி வருகின்றது. இதன் நீட்சியாகவே இலஞ்ச ஊழல் மோடிகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று ஆசிரியர் நியமனங்கள் பதவி உயர்வுகளில் கூட முறைகேடுகள் உள்ளன. தகுதி அற்றவர்களுக்கு பதவிகளை வழங்குவதற்கு இலஞ்சம் கொடுக்கப்படுவதாகவும் செய்திகள் உள்ளன. இவ்வாறு பணியில் இணைந்து கொண்டவர்கள் கல்வித் தரவிருத்திக்கு எந்தளவிற்கு பாடுபடுவார்கள் என்பது சந்தேகம்தான்.

இன்றைய போட்டிமிக்க சமூக நிலவரங்கள் பரீட்சைகளின் முக்கியத்துவத்தை மேலும் மேலும் அதிகரிக்கச் செய்கின்றன. இதனால் மாணவரது ஆளுமை வளர்ச்சிக்குரிய நடவடிக்கைகள் பின்தள்ளப்பட்டு பரீட்சைக்குத் தயாரிக்கும் நடவடிக்கைகள் மாத்திரமே பாடசாலைகளில் மேலோங்கி வருகின்றன. இந்த எதார்த்தத்தை மற்றும் இந்த நடைமுறைகளை கட்டிக்காக்கும் பாதுகாக்கும் அதிபர் ஆசிரியர் சிலர் பாடசாலைகளில் எதேச்சதிகாரிகளாகவே செயற்படுகின்றார்கள். இதனால் மாணவர்கள் மிக மோசமான எதிர்விளைவுகளை சந்திக்கிறார்கள். இவை பற்றியெல்லாம் நாம் விரிவாக நடைமுறை சம்பங்களுடன் அலசி ஆராயவேண்டும். அகவிழி இதற்கான களங்களை திறந்துவிடுகின்றது. வாருங்கள் அவையாவற்றையும் பகிர்ந்துகொள்வோம்.

தெ. மதுசூதனன்



# பிரதிபலிப்பு கற்பித்தல் மாதிரி



**க. சுவர்ணராஜா,**
ஆசிரிய கல்வியியலாளர்,
தேசிய கல்வியற் கல்லூரி, வவுனியா.

## அறிமுகம்

பிரதிபலிப்பு கற்பித்தல் என்பது விசாரணைகளின் ஊடாக தகவல்களை பகுப்பாய்வு செய்து அதன் முடிவினை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் ஒரு கட்டுருவாக்க கற்பித்தல் முறையாகும்

பிரதிபலிப்பு கற்பித்தல் என்பது விசாரணைகளின் (Inquiry) ஊடாக தகவல்களை பகுப்பாய்வு செய்து அதன் முடிவினை அடிப்படையாகக்கொண்டு செயற்படும் ஒரு கட்டுருவாக்க கற்பித்தல் முறையாகும் (Henderson 1996). பன்முக அடிப்படையில் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதன் ஊடாக ஒரு ஆக்கத் திறன் முயற்சியாக பிரதிபலிப்பு கற்பித்தல் அமைகின்றது எனலாம்.

பிரதிபலிப்பு கற்பித்தல் மாதிரி ஐந்து வினாக்களை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றது.

- கற்பித்தலுக்கான தேடுதல் - என்னால் கற்பிக்க முடியுமா.
- கற்பித்தலுக்கான கல்விசார் ஆயத்தநிலை - எதனை நான் கற்பிக்கப் போகின்றேன்.
- கற்போரை விளங்கிக் கொள்ளல் - மாணவர்கள் எவ்வாறு கற்கின்றனர்.
- கற்பித்தலுக்கான ஒழுங்கமைப்பு - எவ்வாறு நான் கற்பிக்கப் போகின்றேன்.
- பாடசாலைக்கு வருதலும் கலாசார உள்ளடக்கமும் - ஏன் நான் கற்பித்தலில் ஈடுபடுகின்றேன்.

(Sparks Langer 1992)

தொடர்ச்சியான ஆசிரியர் விசாரணைகளின் அடிப்படையிலேயே பிரதிபலிப்பு கற்பித்தல் கட்டியெழுப்பப்படுகின்றது.

Keogh அவர்களும் Walker அவர்களும் (1988) பிரதிபலிப்பு கற்பித்தல் பின்வரும் கட்டங்களின் ஊடாக இடம்பெறுவதாக கூறுகின்றனர்.

- அனுபவங்களுக்கு மீளுதல் (என்ன நடந்தது)
- உணர்வுகளை தரிசித்தல் (எப்படி என் உணர்வுகள் நான் ஏன் இப்படி நடந்து கொண்டேன் அல்லது நான் இப்படி நடந்து கொள்ளவில்லை)
- அனுபவங்களை மீள மதிப்பீடு செய்தல் (இந்த நடத்தைகளின் அர்த்தம் யாது, நன்றாக நடந்தவை எவை, நன்றாக நடக்காதவை எவை) என்பனவாகும்.

Dr.Irene Hencey Prue Anderson and Dorthy Schick பிரதிபலிப்பு கற்பித்தலானது பின்வரும் தொடர்ச்சியான விசாரணைகளின் ஊடாக நடைபெறுவதாக குறிப்பிடுகின்றனர்.


- என்ன நடந்தது.
- நான் என்ன செய்தேன்.
- நான் அதனை எவ்வாறு செய்தேன்.
- எனது செயற்பாடுகளை நான் எவ்வாறு உணருகின்றேன்.
- நான் இந்த அனுபவங்களிலிருந்து எதனைக் கற்றுக்கொண்டேன்.
- எனது கற்றலின் அர்த்தம் யாது.
- நான் எதனை வித்தியாசமாக செய்தேன்.
- அடுத்தமுறை நான் என்ன செய்யப்போகின்றேன்.
- எவ்வெவ் விடயங்களில் என்னை நான் விசேடமாக விருத்தியாக்க வேண்டியுள்ளது.
- எவ்விதமான காரணிகள் எனக்கு வெற்றி பெற்று தரலாம்.
- எவ்விதமான காரணிகள் நான் வெற்றி பெறுவதில் தடையாக அமையலாம்.
- நான் எவ்வெவ் விடயங்களில் மேலும் பரிசோதனை செய்ய வேண்டியுள்ளது.
- நான் இப்போது பெற்றுக் கொண்டுள்ள அறிவும் அனுபவங்களும் எனது எதிர்கால கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு எவ்வாறு பொருந்தும் என்பதாக அமைகின்றது.

ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த Donald Schor என்பவர் பிரதிபலிப்பு கற்பித்தல் தொடர்பாக பின்வரும் மூன்று விடயங்களை முன்வைக்கின்றார்.

- கற்பித்தல் அல்லது கற்றல் அனுபவம் ஒன்றை மீட்டு அதுதொடர்பான வாண்மைக்கற்கை நெறியைப் புரிந்து கொண்டு அதிலிருந்து ஈட்டிக்கொண்ட அறிவின் அடிப்படையில் அவ்வனுபவத்தை மதிப்பீடு செய்தல்
- குறித்த சில சூழ்நிலைகளில் ஆசிரியர்கள் எவ்வாறு செயற்படுகிறார்கள் என்பது தொடர்பான எடுத்துக்காட்டுகளைக் கூறி விமர்சித்து அவற்றை சொந்த அனுபவங்களுடன் ஒப்பிட்டுக் காட்டல்.
- ஆசிரியர்களின் வகுப்பறைப் பயிற்சியிலே வாண்மைக் கற்கை நெறியொன்றில் மேற்கொள்ளப்பட்ட பிரயோகத்தன்மையை மதிப்பீடு செய்தல்.
- தற்போதைய கல்வி பிரச்சினையின் பரப்பு ஒன்றிலே அவர்களின் தத்துவம், அபிப்பிராயங்கள் கருத்துக்கள் என்பவற்றின் பொருத்தத்தை மீள் நோக்குதல்.

மேற்கண்ட செயற்பாடுகளை ஆசிரியர்களுடன் இணைந்து நடைமுறைப்படுத்துவதன் மூலம் அவர்களின் கற்றல்-கற்பித்தல் செயற்கிரமங்கள் சிக்கலான முறையில் மீளநோக்கப்படலாம். அத்துடன் அவர்களின் வகுப்பறை நடைமுறைகளை அபிவிருத்தி செய்து ஊக்குவிக்கலாம். இவ்வாறு பங்குபற்றும் ஆசிரியர்களின் அனுபவங்கள் பற்றிய கூட்டுக்கலந்துரையாடல்களை ஒழுங்கபடுத்துவதன் மூலம் அச்செயற்கிரமங்கள் செம்மையாக்கபடலாம். பரிமாற்றம் செய்யபடலாம். மீள்நோக்கப்படலாம்.

பிரதிபலிப்பு முறையில் எமது அனுபவங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட புரிந்துணர்வுகள் எதிர்காலச்சந்தர்ப்பங்களில் எமது தொழிற்பாட்டை வழிநடத்தும் கோட்பாடுகளாகவும் கொள்கைகளாகவும் உருமாற்றம் அடைகின்றன. மறுபக்கத்தில் புதிய நிலைமைகளில் நிகழும் எமது நடத்தைகளின் ஊடாகவும் மேலும் அதிகளவில் பிரதிபலிப்பு புரிந்துணர்வுக்கு இட்டுசெல்கின்றது.



நிலை:-01 பிரதிபலிப்பின் ஆரம்பம் இது எமது சொந்த திட்பமான தனிப்பட்ட அனுபவங்களுடன் ஆரம்பிக்கின்றது நனவு-நிலை அனுபவங்கள் இங்கு சுயமாக விமர்ச்சிக்கப்படுகின்றது.

நிலை:-02 இந்நிலை எமது நிலைமைகளையும் உணர்ச்சிகளையும் செயல்களையும் பாதிக்கும் பிரதான காரணிகளை இனங்காண்பதற்கு முயற்சி செய்து எமது சொந்த அனுபவங்களைப் பகுப்பாய்வு செய்வதில் நாம் ஈடுபடும் மீள்செயல் முறைப்பற்றியதாகும்.

நிலை:-03 இது மேலும் ஒரு பண்பியல் ரீதியில் என்ன நடக்கின்றது என்பது பற்றிய எமது புரிந்துணர்வு பற்றியது இந்நிலையில் நாம்பற்றிக்கொள்ளும் வழமையான எண்ணக்கருக்களின் அல்லது கோட்பாடுகளின் உருவில் எமது பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்டு பொதுமைப்படுத்தலைச் செய்ய ஆரம்பிக்கின்றோம்.

நிலை:-04 இது மாற்றங்கள் செய்யப்பட்டால் என்ன நடக்கக்கூடும் என்னும் கொள்கை பற்றியது. அக்கொள்கையை உருவாக்குவதற்காக நிலை 3 இல் அபிவிருத்தி செய்யப்பட்ட கோட்பாடுகளையும் எண்ணக்கருக்களையும் பயன்படுத்துகின்றோம்.

### பிரதிபலிப்பு கற்பித்தலின் மூன்று நிலைகள்

பிரதிபலிப்பு கற்பித்தல் மூன்று நிலைகளை உள்ளடக்கியதாகும் (Knowles - 1978) அவையாவன

◆ செயலில் பிரதிபலிப்பு:-

வகுப்பறை நிலைமையில் கற்பித்தல் - கற்றல் செயன்முறை நிகழும் போது பிரதிபலிப்பில் ஈடுபடல்

◆ செயல்மீது பிரதிபலிப்பு:-

கற்பித்தல் - கற்றல் செயற்பாட்டினை நிறைவேற்றிய பின் பிரதிலிப்பில் ஈடுபடல்.

◆ செயலுக்கான பிரதிபலிப்பு:-

திட்டமிடப்பட்ட கற்றல் - கற்றலில் எதிர்கால நடைமுறைக்காக பிரதிபலிப்பில் ஈடுபடல்.

பிரதிபலிப்பை ஒருவரின் சுய கற்பித்தலின் ஒரு மாறு நிலையான கணிப்பீடாக நோக்கலாம். பிரதிபலிப்பு கற்பித்தலுக்கு தன்னம்பிக்கை மிகவும் அவசியமானது. கட்டமைக்கப்பட்ட பிரதிபலிப்பு கற்பித்தலின் ஒப்பந்த நிலைகள் ஆகும்.(Stuctured Reflection Protocol).

**அனுபவங்களின் இயல்பு நிலை:**

- அனுபவங்களின் அடிப்படை.
- வெற்றியளிக்காத செயற்பாடுகளின் காரணிகள்.
- உறவுநிலை பாதிப்புக் காரணிகள்.
- உடனடி விளைவுகள், எதிர்கால விளைவுகள்.

**தனிப்பட்ட காரணிகள்:**

- சுயபங்களிப்பின் தன்மை.
- அடைய முயற்சித்தவை.
- முன்வைத்த இலக்குகள்.
- அடுத்தவரின் எதிர்பார்ப்புக்கள்.
- சமூக பொருளாதா நிலைமைகள்.

பிரதிபலிப்பை ஒருவரின் சுய கற்பித்தலின் ஒரு மாறு நிலையான கணிப்பீடாக நோக்கலாம். பிரதிபலிப்பு கற்பித்தலுக்கு தன்னம்பிக்கை மிகவும் அவசியமானது. கட்டமைக்கப்பட்ட பிரதிபலிப்பு கற்பித்தலின் ஒப்பந்த நிலைகள் ஆகும்.

**பெறுபேறுகளை/தோல்விகளை உருவாக்கிய காரணிகள்:**

- உள்ளார்ந்த காரணிகள்.
- வெளியார்ந்த காரணிகள்.
- வரலாற்று/தொடரும் காரணிகள்

**மாற்றுச் செயற்பாடுகள்:**

- மாற்றுத் தெரிவுகள்.
- சந்தர்ப்ப மாற்றங்கள்.

**கற்றலும் விருத்தியும்:**

- அச்சூழலை எவ்வாறு உணர்ந்தேன்.
- அதிலிருந்து கற்றுக் கொண்டவை.
- நான் எப்படி மாற்றமடைந்தேன்.
- மாற்றம் தெளிவானதா குழப்பமானதா.
- தேவையான தகவல்கள் (Edward De Bono - 2005)

**பிரதிபலிப்பு கற்பித்தலின் செய்முறைகள்:**

பிரதிபலிப்பு கற்பித்தலின் செய்முறை தொடர்பாக (Rolt 1998) பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்.

- திறந்த மனதுடன் செயற்படல் என்ன, எப்படி, எவ்வாறு, ஏன் என நோக்குதல்
- எல்லாவிடயங்களிலும் விழிப்புணர்வுடன் செயற்படல்.

- தொடர்ச்சியான விசாரணை.
- இயலுமானவற்றை முன்வைக்கும், பரிசோதித்துப் பார்க்கும் ஆர்வத்துடன் இருத்தல்.
- பெறுபேறுகளை முடிவுகளை தொகுத்துப்பார்த்தலும் பகுப்பாய்வு செய்தலும்.
- நடத்தைகளை கோட்பாட்டு ரீதியாக விளங்கிக் கொள்ளல்.
- பின்னூட்டல்களை பெறமுனைதல்.
- பிரச்சினைகளை சுயமாக தீர்ப்பதில் ஆர்வம் என்பனவாகும்.

பிரதிபலிப்பு சுற்றுவட்டம் (The Reflective Cycle)


Haigh (1996) பிரதிபலிப்பு கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்கள் பின்வரும் உள்ளடக்கத்தை கொண்டு மாணவர்களின் கற்றலை சாத்தியப்படுத்த முனைவார்கள் எனக் குறிப்பிடுகின்றார்.

- திறமையான வழங்கல் திறன்/செயலில் காட்டக்கூடிய கற்பித்தல் முறைகளை கையாளுவர்.
- திறன்களைக் கொண்டிருப்பார்.
- உணர்வு ரீதியான பங்காளியாக இருப்பார்.
- சூழலை கட்டுப்படுத்தும் திறன்களைக் கொண்டிருப்பார்.
- கற்பித்தல் செயல்களில் விழிப்புணர்வு எப்போதும் கொண்டிருப்பார்.

Haigh (1996) பிரதிபலிப்பு கற்பித்தலின் சுற்றுவட்டத்தில் அடங்கும் வினாக்களை பின்வருமாறு முன்வைக்கிறார்.

- விபரித்தல்.
- செல்வாக்கிற்குட்படல்/உணர்வுகளை ஏற்றல்
- மதிப்பிடுதல்.
- பகுப்பாய்வு செய்தல்.
- முடிவுக்கு வருதல்.
- செயற்பாட்டு திட்டத்தை முன்வைத்தல் என்பனவாகும்.

## அனுபவத்திலிருந்து கற்றலும் பிரதிபலிப்பும்



### பிரதிபலிப்பு கற்பித்தலின் பண்புகள்

டூயி பிரதிபலிப்பு கற்பித்தலின் ஆறு பண்புகளை பின்வருமாறு குறிப்பிடுகின்றார்

1. பிரதிபலிக்கும் கற்பித்தலானது குறிக்கோள் முடிவு. தொழில்சார் வினைத்திறன் என்பவற்றில் முழுமனத்துடன் செயலுக்கான முறையில் ஈடுபடுதலாகும். இது வகுப்பறைச் செயற்பாடுகளின் குறிக்கோள், அடைவு என்பவற்றில் ஆசிரியரது பொறுப்புணர்வுடன் தொடர்புபட்டது.
2. பிரதிபலிக்கும் கற்பித்தலானது ஆசிரியர் தனது கற்பித்தலையும் திறனையும் வட்டங்களாகவும் சுற்றுகளாகவும் கண்காணித்து மதிப்பிட்டு மீட்பதாகும். ஆசிரியர் மாணவரது எண்ணங்களையும், செயல்களையும், உணர்வுகளையும் திட்டமிட்டு அவதானித்து சேகரிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றார். அத்தரவுகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் ஆசிரியருக்குத் தன் கற்பித்தல் செயற்கிரமத்தை சீர் செய்ய முடிகிறது. இச் செயற்கிரமம் சக்திவாய்ந்தது உயர்ந்த பண்புகளைக் கொண்டது. வெற்றிகரமான சுற்றுகளுக்கும் இட்டுச் செல்வது.
3. பிரதிபலிக்கும் கற்பித்தலில் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்கு வகுப்பறை ஆய்வுமுறைகள் தேவைபபடுகிறது. வகுப்பறை அல்லது பாடசாலையில் என்ன நடைபெறுகிறது என்பதை அறிந்துகொள்ள ஆசிரியருக்கு அனுபவ தேர்ச்சி இருக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேர்ச்சியும் தீர்மானங்களும். முடிவுகள் எடுப்பதற்கும் மதிப்பீடு தொடர்பான தேர்ச்சியும் தேவைப்படுகின்றது.
4. பிரதிபலிக்கும் கற்பித்தலுக்கு மனப்பாங்கு, திறந்த மனப்பான்மை, பொறுப்புணர்ச்சி, முழுமனதுடனான நாட்டம் என்பன தேவைப்படுகின்றது. டூயி கூறுவது "திறந்த மனப்பான்மையானது ஒரு பக்கத்தை விட பல பக்கங்களையும் செவிமடுப்பதற்கும் மாற்றீடுகளுக்கும் முழுமையாக கவனம் செலுத்துவதற்கும் செயலூக்கமுள்ள நாட்டத்தை உருவாக்குகின்றது. "மேலும் மனப்பாங்கு, திறந்த மனப்பான்மை புத்திக் கூர்மையான பொறுப்புணர்வு, முழுச்சம்மதம் என்பன ஆட்பொருள்களாகும்.
5. பிரதிபலிக்கும் கற்பித்தலானது ஆசிரியர் எடுக்கும் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டது. இது சுய பிரதிபலிப்பையும் கல்வி ஒழுகலாறுகளின் பூரண அறிவையும் உள்ளடக்கியது. ஆசிரியத்துவத்தை பிரதிபலிக்கும் ஆசிரியர் மாற்றமடையும் கற்றல் சவால்களையும் நிலைமைகளையும் எதிர்நோக்கக்கூடிய கற்பித்தல் முறைகளை மாற்றியமைத்து தீர்மானங்களை எடுத்து மாணவருக்கு முன்வைப்பர்.
6. சகபாடிகளுடன் கூட்டு சேர்வதாலும் உரையாடுவதாலும் பிரதிபலிக்கும் கற்பித்தலில் தொழில்சார் கற்றலும் தொழில் திருப்தியும் கிடைக்கிறது. கலந்துரையாடல்களும் ஒன்றாக செயல்களில் ஈடுபடுதலும் கூட்டு முயற்சிகளுக்கு வழிவகுக்கின்றன. ஆசிரியத்துவத்தை பிரதிபலிக்கும் ஆசிரியர்கள் சகபாடிகளுடன் வேலை செய்தல், பரிசோதித்தல் பேசுதல் மூலம் பயனடைகின்றனர்.

### பிரதிபலிப்பு நாளேட்டின் முக்கியத்துவம்

வேறு பல ஆய்வாளர்களால் நடத்தப்பட்டுள்ள ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி தமது கற்றல் கற்பித்தல்

> பிரதிபலிக்கும் கற்பித்தலானது
> ஆசிரியர் எடுக்கும் தீர்மானத்தை
> அடிப்படையாகக் கொண்டது.
> இது சுய பிரதிபலிப்பையும்
> கல்வி ஒழுகலாறுகளின்
> பூரண அறிவையும் உள்ளடக்கியது.

செயன்முறையின் போது தோன்றும் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் ஆசிரியர்கட்குக் கிடைக்கக்கூடும்.

எனினும் இது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வெற்றியளிக்கும் எனகருதமுடியாது. ஒவ்வொரு வகுப்பறையும் தனிச்சிறப்புடையதாகக் காணப்படுவதே இதற்கான காரணமாகும். பல்வேறு சமூக பொருளாதார நிபந்தனைகள் கற்றற் பழக்கங்கள், பல்வேறு நடத்தக்கோலங்கள் போன்றவற்றைக் கொண்ட பிள்ளைகள் அடங்கிய ஒரு வகுப்பின் ஆசிரியர் பிரச்சினைக்கட்குப் பிரயோகிக்கும் தீர்வுகளைப் பிரிதோர் ஆசிரியர் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகப் பிரயோகிக்கும் திறன்கள் பெரும்பாலும் அத்தியாவசியமாகலாம். தமது சான்றுகளையே அடிப்படையாகக் கொண்டு தீர்வு வழிகளைக் கண்டறிய வேண்டிய நிலைக்கு ஆசிரியர்கள் உள்ளாகின்றனர்.

இந்நிலையில் ஆசிரிய விருத்திக்கு பயன்படக்கூடிய ஒரு முக்கியமான மூலாதாரமாக பிரதிபலிப்பு நாளேடு அமைகின்றது.

தேசியகல்வி நிறுவக கல்வி ஆய்வுத்துறையினால் நெறிப்படுத்தப்பட்ட ஆய்வாளராக ஆசிரியர் என்னும் ஆய்வு செயற்றிட்டத்தின் கீழ் நந்தசீல பதிவினருக்கே இன்றும் விஞ்ஞான ஆசிரியை (1997) அவரது பிரதிபலிப்பு நாளேட்டின் அடிப்படையாகக்

கொண்டு தயாரித்த "தீபத்தினால் தீபமேற்றல்" எனும் (சிங்கள மொழி) ஆய்வு அறிக்கையின் ஒரு பகுதி வருமாறு.

"கற்பித்தல் தொடர்பான பிரதிபலிப்பு நாளேடு முன்னர் பேணிவரப்படவில்லையாதலால் மாணவர் எதிர்நோக்கும் பிரச்சனைகளுள் ஒரு சிலவற்றை மட்டும் நினைவில் வைத்திருக்க முடிந்தது. எனினும் நாளேட்டில் குறிப்புக்களை எழுதத் தொடங்கிய பின்னர் என்னையறியாமலே பிள்ளைகளின் ஆர்வம், முன்னேற்றம் போன்ற விபரங்கள் அதில் பதிவு செய்யப்பட்டிருப்பதை உணர்ந்தேன் அக்குறிப்புக்கள் அன்றாடம் எனக்கும் பயன்பட்டன. (கல்வி NIE 2001 ஜனவரி)

மேற்கண்ட கூற்றானது பிரதிபலிப்பு நாளேட்டின் பயன்பாடு ஒரு ஆசிரியரின் கற்றல் கற்பித்தலில் ஏற்படுத்தும் செல்வாக்கு யாதென்பது புலனாகிறது. பிரதிபலிப்பு நாளேடும் ஆசிரியர் திறன் விருத்தியும் ஒரு ஆசிரியர் பிரதிபலிப்பு நாளேட்டினை தொடர்ச்சியாக பேணுவதால் பின்வரும் ஆசிரிய விருத்திக்கான நோக்கங்கள் அடையப்பட ஏதுவாகின்றன என McGill and Brockbank (1998) குறிப்பிடுகின்றனர்.

- நிகழ்வுகளை பதிவு செய்யும் அனுபவம்.
- அனுபவங்களில் இருந்து கற்றல்.
- மேலதிக விளக்கம்.
- தர்க்க ரீதியான சிந்தனை விருத்தி.
- அறிகை மேம்பாடு.
- சுயவழிப்படுத்தப்பட்ட கற்றல்.
- மதிப்பிடும் ஆற்றல் விருத்தி.
- பிரச்சினை தீர்க்கும் ஆற்றல்.
- வலுப்படுத்தல்.
- உணர்வுகளுக்கும் நடத்தைகளுக்கும் விளக்கமளிக்கும் திறன்.
- ஆக்கத்திறன் விருத்தி.
- எழுத்தாக்க விருத்தி.
- தொடர்பாடல் திறன் விருத்தி.
- கிடைத்தொடர்பு விருத்தி.
- செயற்றிட்ட விருத்தி.
- செயல்தொடர் ஆய்வு விருத்தி

என்பனவாகும்.

### பிரதிபலிப்பு திறன்களை விருத்தி செய்வதற்கான வழிமுறைகள்

பிரதிபலிப்புதிறன்களை விருத்தி செய்தல் தொடர்பாக (Keogh and walkr 1988) பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்.

* பிரதிபலிப்பு நாளேட்டினை பயன்படுத்துமாறு அறிவுறுத்தல். கற்பித்தலுக்கு பிரதிபலிப்பின் அவசியத்தை எடுத்துக்காட்டல்.
* சில மாதிரி பிரதிபலிப்புக்களை வழங்குதல். அதனையொத்த பிரதிபலிப்புக்கள் சிலவற்றை இனங்கண்டு எழுதத் தூண்டுதல். உதாரணமாக முதல் நாள் வகுப்பில் இடம் பெற்ற செயற்பாடுகள் தொடர்பாக வினவ தூண்டுதல்.


- மாணவர் என்னென்ன செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.
- அவர்கள் எதனைக் கற்றுக் கொண்டனர்.
- அவர்களின் கற்றல் எந்தளவுக்கு பெறுமதியானது.
- அவர்களின் கற்றலுக்கு நான் யாது செய்தேன்.
- நான் அவர்களிடமிருந்து எதனைக் கற்றுக்கொண்டேன்.
- அவர்களின் நடத்தை மாற்றத்திற்கான ஆதாரங்கள் எவை
- இனி நான் யாது செய்தல் வேண்டும்.

போன்ற வினாக்களின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொள்ளலாம்.

(ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒரு சில விடயங்களின் மீது மட்டும் ஆரம்பத்தில் கவனஞ்செலுத்துதல் போதுமானது)

- பிரதிபலிப்பு நாளேட்டு குறிப்புக்களுக்கு அமைவாக அடுத்த நாள் பாடத்தை திட்டமிடுதல்
- மீண்டும் பிரதிபலிப்பு பெறல்
- அனுபவபகிர்வு/ஆலோசனை நாடல்
- தீர்வுகளை மதிப்பிடுதல்

என்றவாறு அமையும். ஆக பிரதிபலிப்பு கற்பித்தல் ஆரோக்கியமான வகுப்பறைச் செயற்பாட்டுக்கு துணை செய்கின்றது. பன்முக அடிப்படையில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணபதற்கான ஆக்கத் திறன்களை வெளிப்படுத்துவதற்குரிய சூழ்நிலைமையை உத்தரவாதம் செய்கிறது.



# ஆசிரியர்-மாணவர் தொடர்பு எவ்வாறு அமைதல் வேண்டும்



**ஆர். லோகேஸ்வரன்,**
ஆசிரிய கல்வியியலாளர்,
ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரி.

தொடர்பாடல்

ஆசிரியர் - மாணவர் தொடர்பு என்னும் போது ஆசிரியரின் கருத்துக்களை மாணவர் கேட்பதும், அவர்களது மாணவர் கூறும் கருத்துக்களை ஆசிரியர் கேட்பதும், அவர்களது கருத்துக்களை ஆராய்ந்து தனது அணுகுமுறையில் தேவையான மாற்றங்களை செய்வதும் அடங்கும்.

ஆரம்பகால கல்வி முறையானது ஆசிரியரை மையமாக கொண்டு அவரது முழுமையான ஆதிக்கத்துக்குட்பட்டே இருந்தது. அக்காலத்தில் ஆசிரியர்களது வகுப்பறை நடவடிக்கைகள் எதேச்சதிகாரப் போக்கினையே கொண்டிருந்தது. பாட எண்ணக்கருக்கள் மாணவர்களின் மனதில் திணிக்கப்பட்டன. ஆனால் நவீன கல்வி முறையானது மாணவரை மையமாக கொண்டிருப்பதுடன் மாணவரது தேவை, விருப்பு, இயல்பு என்பவற்றின் அடிப்படையில் அமைய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறு மாணவரை அடிப்படையாக கொண்டு கல்விமுறை அமைந்திருப்பதால் அதற்கேற்ப ஆசிரியர் பணியினுடைய பொறுப்புக்களும் விரிவடைந்துள்ளன. இதில் மாணவரை கற்றலுக்கு ஆயத்தப்படுத்தல், கற்றலில் ஊக்குவித்தல், பாட எண்ணக்கருவை தெளிவாக முன்வைத்தல், கற்றலில் எதிர்நோக்கும் இடர்களை கண்டறிந்து அகற்றுதல், மாணவர்களின் முன்னேற்றத்தை அளவிடல், வகுப்பறை முகாமையில் கவனம் செலுத்துதல் போன்றவை மிக முக்கியமானவையாகும். இவ்வாறான பணிகளை திறம்பட நிறைவேற்றவதோடு "நல்ல சமூக பன்முக ஆளுமை உடைய மாணவர்களை" உருவாக்க வேண்டிய பணியும் அவர்களை சார்ந்தேயுள்ளது. மேற்குறிப்பிட்ட தனது உயர் பணியின் பொறுப்புக்களை நிறைவேற்ற கற்பித்தல் நடவடிக்கைகளில்

- ஆசிரியர் - மாணவர்
- ஆசிரியர் - ஆசிரியர்
- ஆசிரியர் - அதிபர், உயர் கல்வி அதிகாரிகள்
- ஆசிரியர் - பெற்றோர்
- ஆசிரியர் - சமூக உறுப்பினர்கள்

போன்றவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு செயலாற்ற வேண்டியுள்ளது. இத்தொடர்புகளில் ஆசிரியர் மாணவர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்பே மிக இன்றியமையாததாகும். இதில் ஆசிரியர் - மாணவர் தொடர்பு என்னும் போது ஆசிரியரின் கருத்துக்களை மாணவர் கேட்பதும், அவர்களது மாணவர் கூறும் கருத்துக்களை ஆசிரியர் கேட்பதும், அவர்களது கருத்துக்களை ஆராய்ந்து தனது அணுகுமுறையில் தேவையான மாற்றங்களை செய்வதும் அடங்கும். இதன்படி ஆசிரியர் - மாணவர்

தொடர்பானது இருமுனைப்பட்டதாக (Reciprocal) அமைதல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொடர்பு எவ்வகையில் அமைந்தாலும் ஆசிரியர் என்ற நிலையை அடிப்படையாக கொண்டே ஏற்படுத்திக் கொள்ளப்பட வேண்டும் என்பது மிக பிரதானமானதாகும். இவ் ஆசிரியர்-மாணவர் தொடர்பு எவ்வடிப்படையில் அமைதல் வேண்டும் என்பது பற்றி இங்கு ஆராய்வோமாயின்,

1- மாணவரின் தேவை, பருவம், தனியாள் வேறுபாடு என்பவற்றின் அடிப்படையில் அமைதல்.

ஆசிரியர் - மாணவர் தொடர்புகளின் அடிப்படை மாணவர்களின் தேவைகளை விளங்கி அவர்களின் விருத்திக்கு உதவுவதாகும். இதற்கு ஆசிரியர், மாணவர்களது விருப்பு, தேவை, எண்ணங்கள், மனப்பான்மை, கவர்ச்சி, ஊக்கல் போன்றவற்றிற்கு இடமளிக்கும் வகையில் நல்ல தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகும். அதேபோல் மாணவர்களின் வயது, பருவம் என்பனவற்றிலும் ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டும். அதாவது ஆரம்ப வகுப்பு மாணவர்களாயின் அவர்கள் பிள்ளைப் பருவத்துக்குரியவர்களாக இருப்பதால் அம்மாணவர்களுடனான தொடர்பு தந்தை, தாய் என்ற அடிப்படையில் அமைதல் வேண்டும். சிறு பிள்ளைகளுடன் பெற்றோர் எவ்வாறு பழகுவார்களோ (நெருக்கமான தொடர்பு) அதே போல் ஆசிரியரும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதேவேளை இடைநிலை வகுப்பு/உயர் வகுப்பு மாணவர்களாயின் அவர்கள் கட்டிளமை பருவத்தவர்களாக இருப்பதால் அம்மாணவர்களுடன் ஒரு நண்பனாக/நண்பியாக வரம்பு மீறாத வகையில் தொடர்புகளை பேண வேண்டும். அத்தோடு இப்பருவ மாணவர்களுக்கு ஆசிரியர் தான் ஒரு முன்மாதிரியாக இருந்து நல்வழிகாட்டும் வகையில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதே சிறந்தது.

மேற்கூறியவராக தேவை, பருவம் என்பவற்றின் அடிப்படையில் ஆசிரியர் மாணவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டாலும் விசேடமாக அவர்களிடம் காணப்படும் தனியாள் வேறுபாடுகளில் (Individual Differences) கவனம் செலுத்தப்பட வேண்டியதும் இன்றியமையாததாகும். இதற்கு காரணம் எல்லா மாணவர்களுடனும் ஆசிரியர் ஒரே விதமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியாமையாகும். ஏனெனில் அவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகவே காணப்படுவர். சிலர் எதையும் முன்வந்து பயமின்றி கேட்பர், சிலர் எதையும் கேட்பதில் தயக்கம் காட்டுவர், சிலர் வகுப்பறையில் அமைதியாக இருப்பர், சிலர் எப்போதும் அச்ச உணர்வோடு இருப்பர், சிலர் முரட்டுத்தனமாக செயற்படுவர். இவ்வாறு ஒவ்வொருவரும் தமது திறமை, ஆற்றல், மனப்பாங்கு, சமூகத்திறன் என்பவற்றுக்கேற்ப தமது நடத்தைகளில் பல்வகையிலும் வேறுபட்டவர்களாகவே காணப்படுவர். அவர்களை மிக சரியாக அறிந்து அவர்களின் தேவைகளை உணர்ந்து அதற்கேற்ப தனது தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதே நல்லது..

2. வகுப்பறை கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் அடிப்படையில் அமைதல் -

பாடசாலையில் ஆசிரியர் மாணவர் தொடர்பில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடானது மிக பிரதானமானதாகும். ஆரம்பகால கல்வி முறையில் கற்றல் - கற்பித்தல் என்பது ஆசிரியர் தமக்கு தெரிந்த அறிவை அப்படியே மாணவர்களுக்கு வழங்குவதாகவும் மாணவர்கள் எவ்வித விமர்சனமுமின்றி அவற்றை அப்படியே உள்வாங்கி கொள்வதாகவும் காணப்பட்டது. அக்கால ஆசிரியர் - மாணவர் தொடர்பானது ஒருவழி தொடர்பாக மட்டுமே காணப்பட்டது. ஆசிரியர் - மாணவர் தொடர்பையே கல்வியியலாளரான போலோ பிறேரி "ஒடுக்கப்படுவோர், ஒடுக்கப்பட்டோர் என்பவர்களுக்கிடையிலான தொடர்பு" என்ற எண்ணக்கருவின் மூலம் சுட்டிக்காட்டினர். ஆயினும் அதற்கு மாறாக இன்று மாணவர்களே கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் முக்கியமானவர்களாக கருதப்படுகின்றனர். ஆசிரியர் - மாணவர்களுக்கிடையிலான தொடர்பாடல் மூலமே கற்றல் இடம்பெற வேண்டியுள்ளது. பாட எண்ணக்கருவை அறிமுகம் செய்தல், முன்னறிவை சோதித்தல், விடயங்களை தேடியறிய உதவுதல், தேடியறிந்தவற்றை முன்வைக்க செய்தல், அவற்றை உரிய இடத்தில் திருத்துதல், உறுதிப்படுத்தல், மேலதிக தகவல்களை முன்வைத்தல், இறுதியில் மதிப்பீட்டின் ஊடாக தேர்ச்சி மட்டத்தை கணிப்பிடல் என (5E கட்டுருவாக்கத்தில்) பல நிலைகளிலும் (கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில்) ஆசிரியர் மாணவர் உடனும், மாணவர் ஆசிரியர் உடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. எனவே இன்று கற்றல் - கற்பித்தல் செயலில் ஆசிரியர் - மாணவர் தொடர்பு பிரதானமானதாக கொள்ளப்படுகிறது. ஆயினும் இத்தொடர்பு ஒழுங்கமைக்கப்பட்ட முறையான வகுப்பறை செயற்பாட்டின் மூலம் அமைய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

3. ஊக்குவித்தல், தண்டனை வழங்குதல் என்பவற்றின் அடிப்படையில் அமைதல் -

கற்றல் நடவடிக்கையின் போது மாணவர்களை ஊக்குவிப்பது ஆசிரியர் - மாணவர் உறவில் முக்கிய பங்கு வகிக்கிறது. மாணவர் குறுகியகால நோக்கங்களை படிப்படியாக அடைவதற்கு சகல முக்கிய கட்டங்களிலும் ஊக்குவிப்புக்களை வழங்குதல் அவசியமாகும். இதனையே உளவியலாளர் ஹெப் (Hebb) என்பவர் "உயிர்களைச் செயற்பட தூண்டும் நிகழ்ச்சிகளாக ஊக்கிகளை" காண்பதோடு அது கற்றலின் அடைவை அதிகரிக்க செய்வதுடன்,

ஆசிரியர் - மாணவர் உறவையும் வலுப்படுத்தும் என்கிறார். எனவே மாணவரின் ஒவ்வொரு வெற்றிக்கும்/முன்னேற்றத்துக்கும் ஊக்குவிப்பை வழங்குவதன் மூலம் ஆசிரியர் - மாணவர் தொடர்பு வலுவடையும். ஊக்குவிப்பை போல் மறுமுனையில் மாணவர்களுக்கு தண்டனை வழங்கும் போது ஆசிரியர் மிக அவதானமாக செயல்பட வேண்டும். அல்லாவிடின் மாணவரிடம் வெறுப்பை சம்பாதிக்கும் நிலை உருவாகி ஆசிரியர் - மாணவர் உறவை அது பாதிக்க செய்யும். இதில் மாணவர்களுக்கு மனிதாபிமானமற்ற முறையில் தண்டனைகளை வழங்குதல், ஏனைய மாணவர்களுக்கு மத்தியில் மனதை பாதிக்கும் வகையில் வார்த்தைகளை பிரயோகித்தல் என்பவற்றின் போது ஆசிரியர் மிக அவதானமாக செயற்பட வேண்டும். ஏசுதல், சாடை காட்டல், சுடுசொற்களை பிரயோகித்தல் என்பன சில சந்தர்ப்பங்களில் ஆசிரியர் - மாணவர் தொடர்புகளை சிதைக்கும். மாணவர்களுக்கு கடுமையான தண்டனைகளை வழங்கும் போது மாணவர் தமது கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்தமாட்டார்கள். இதனால் ஆசிரியர் - மாணவர்களுக்கிடையிலான தொடர்பு பாதிப்படையும்.

எனவே மாணவர்களுக்கு ஊக்குவித்தலை தாராளமாக வழங்குவதுடன், தண்டனைகளை நிதானமாக வழங்குவதன் ஊடாக மாணவர்களுடன் நல்ல தொடர்புகளை ஆசிரியர் ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

4. மகிழ்சிகரமான கற்றல் சூழலை தோற்றுவிப்பதன் அடிப்படையில் அமைதல்-

வகுப்பறைச் சூழல் நட்பு, மகிழ்ச்சி நிரம்பியதாக இருப்பின் கற்றல் விரைவுபடும். இவ்வகையான வகுப்பு சூழ்நிலையை உருவாக்கும் திறமை ஆசிரியருக்கு இருத்தல் வேண்டும். இதற்கு ஆசிரியர் தம் மாணவருடன் நல்ல தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகும். இதில் ஆசிரியர் வகுப்பறையில் முகமகிழ்ச்சியுடன் செயலில் ஈடுபடுவதுடன், தேவைப்படும் சந்தர்ப்பங்களில் கண்டிப்பாக இருப்பதும் நல்லது. அதாவது சந்தர்ப்பத்துக்கு ஏற்ப கண்டிப்பும், அன்பும் செலுத்துதல் வேண்டும். இவ்வாறான மகிழ்ச்சிகரமான கற்றல் சூழல் காணப்படுமாயின் அது ஜனநாயக தன்மை கொண்டதாக இருக்கும். இதில் மாணவர் தமது எண்ணங்கள், தேவைகள் என்பவற்றை வெளிப்படுத்த சந்தர்ப்பம் கிடைக்கும். அத்துடன் கற்றலில் எழும் பிரச்சினைகளை ஆசிரியரிடம் கூறி அதற்கு தீர்வுகாணவும் முடியும்.

வகுப்பறையில் கற்றலின் அளவு, வகுப்பறையில் நிலவும் சூழ்நிலையின் தன்மையை பொறுத்தது என்றும் இதனை நிர்ணயிப்பதில் அவ்வகுப்பறையில் நிலவும் ஆசிரியர் - மாணவர் தொடர்பை அல்லது இடைவினை (Interaction) தொடர்பை பகுப்பாய்வு செய்தால்

1. வகுப்பின் நிலைமை எந்த அளவு கற்றலுக்கு உதவும் என்பதும்

2. ஆசிரியரின் கற்றல் நடை

பற்றியும் முடிவெடுக்களாம் என்பது பிளாண்டரஸ் என்பவரது கருத்தாகும். இவ்வகையான பகுப்பாய்வு முறையில் பிளாண்டரஸ் என்பவரது பகுப்பு முறை மிக பிரபலமானதாகும். ஆசிரியர் - மாணவரிடையே நிகழும் மொழிகள் இடைவினையின் தன்மையை அவர் 10 வகையாக வகுத்துள்ளார்.

1-4 ஆசிரியரது மறைமுகச் செல்வாக்கினை குறிப்பன

- மாணவர்களது உணர்ச்சிகளை ஏற்பது
- அவர்களை பாராட்டி உற்சாகப்படுத்துவது
- அவர்களின் கருத்துக்களை ஏற்பது
- வினா கேட்பது

5-7, ஆசிரியரது நேரடி செல்வாக்கினை குறிப்பது

- விரிவுரையாற்றுவது
- கட்டளையிடுவது
- குறை காண்பது/தனது ஆதிக்க செயல்களுக்குக் காரணம் கற்பிப்பது

8-10 மாணவர்களது இடைவினைச் செயல்களை குறிப்பது

- ஆசிரியரது வினாக்களுக்கு மாணவர் விடையளிப்பது
- வகுப்பில் மாணவர் தாமே பேச தொடங்குவது
- சத்தமின்மை/குழப்பம்

இதில் ஆசிரியர் நடத்தையில் முதல் நான்கும் வகுப்பறையில் மாணவர்களது சுதந்திரத்திற்கு இடமளித்து அவர்களது கற்றலை ஊக்குவிப்பதாக அமையும் என்கின்றார். இவ்வாறான தொடர்புகளை ஆசிரியர் எந்தளவு பயன்படுத்துகின்றாரோ அந்தளவுக்கு அவரது கற்பித்தல் மாணவர்களுக்கு பயன்படுவதாக அமைவதோடு ஆசிரியர் - மாணவர் உறவு சிறப்புறும் என்கின்றார். இவ்வகையான வகுப்பறையிலேயே மாணவர்கள் மகிழ்ச்சியுடனும், சுதந்திரத்துடனும் கற்கின்றனர் என்று பிளாண்டர்ஸ் குறிப்பிடுகிறார்.

எனவே வகுப்பறையில் மாணவர்களின் சுதந்திரத்துக்கு இடமளிக்கக்கூடிய வகையில், நட்பும், மகிழ்ச்சியும் நிரம்பிய ஒரு சூழ்நிலை தோற்றுவிக்கப்பட வேண்டுமாயின் ஆசிரியர் மாணவருடன்

பொருத்தமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும். பிளாண்டரஸ்சின் பகுப்பாராய்வும் இதனையே வலியுறுத்துகிறது.

5. இணைபாடவிதான செயற்பாட்டின் அடிப்படையில் அமைதல்-

வகுப்பறையில் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டிற்கு அப்பால் மாணவரின் ஆளுமை விருத்தியை அதிகரிக்கும் வகையில் இணைப்பாடவிதான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது அவசியம். இதில் பாடசாலைக்குள் அல்லது பாடசாலை சூழலில் இடம்பெறும் சிரமதானம், விழாக்கள், நிகழ்ச்சிகள் என்பனவும் கல்விச் சுற்றுலாக்கள் என்பவற்றையும் குறிப்பிடலாம். இவ்வாறாக மாணவர் ஏதேனும். இணைப்பாட செயல்களில் ஈடுபடும் போது மாணவர்களின் குடும்பம், பிரதேசம் தொடர்பாக பாடவிடயங்களுக்கு அப்பால் ஆசிரியர் கலந்துரையாடும் போது அது ஆசிரியர் - மாணவர்களுக்கு இடையிலான தொடர்பை மேலும் விரிவாக்குவதுடன் அவர்களுக்கிடையிலான நெருக்கத்தையும் அதிகரிக்க செய்யும். எனவே இவ்வாறான சூழ்நிலைகளில் ஆசிரியர் முடிந்தவரை மாணவர்களுடன் நல்ல தொடர்புகளை வளர்த்துக் கொள்வது இன்றியமையாததாகும்.

6. வழிகாட்டல்/ஆலோசனை கூறல் சேவையின் அடிப்படையில் அமைதல் -

ஆசிரியர் வெறுமனே வகுப்பறை கற்றல் - கற்பித்தல் நடவடிக்கையுடன் மட்டும் மாணவர்களுடனான தொடர்புகளை நிறுத்திவிடாமல் அவர்களின் பல்வேறு தேவைகளுக்கு அல்லது பிரச்சினைகளுக்கு வழிகாட்ட வேண்டியவராகவும் உள்ளார். அவ்வகையில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு வழிகாட்டல், பொருத்தமான பாடதேர்வுக்கு வழிகாட்டல், தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ற வேலைக்கு வழிகாட்டல், தனிப்பட்ட பிரச்சினைகளுக்கு வழிகாட்டல் எனபல பணிகளை ஆற்றவேண்டியுள்ளது. இதில் விசேடமாக இடைநிலை வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் கற்பித்தலை மட்டும் நோக்கமாக கொண்டிராது மாணவர்களின் மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கும் வழிகாட்ட வேண்டியது மிக அவசியமாகும். இதன் போது

- பிரச்சினை கொண்ட மாணவர்களை புரிந்து கொண்டு அவர்களை அழைத்து பேசவைத்தல் (தம் பிரச்சினைகளை)
- அவர்கள் பேசுவதை நன்கு செவிமடுத்தல்
- அவர்கள் பிரச்சினையில் இருந்து கரையேற வழிகாட்டல்

போன்ற நடவடிக்கைகள் மூலம் மாணவர்களின் துன்பங்கள்/பிரச்சினைகளை போக்க உதவுவதும் ஆசிரியரின் கடமையாகும். அதிலும் மாணவர்களுடன் அவர்களின் பிரச்சினைகளை கலந்துரையாடும் போது அவர்களை மதிக்கின்ற வகையில் நல்ல தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதும் மிக அவசியமாகும்.

மேற்குறிப்பிட்ட விடயங்களின் அடிப்படையில் ஆசிரியர் மாணவர்களுடன் உருவாக்கிக் கொள்ளும் உறவுகள் மூலமாக நல்ல தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறான நல்ல (சுமுகமான) தொடர்புகள் இருந்தால் மட்டுமே மாணவர்களும் தமது எண்ணங்களை வெளிப்படையாக தெரிவிப்பர். அது ஆசிரியரின் மாணவர் தொடர்பான சகல பணிகளுக்கும் சாதகமாக அமையும். மேலும் ஆசிரியர் மாணவருடன் அன்னியோன்னியமான தொடர்புகளை ஏற்படுத்தி செயற்பட்டாலும் தான் ஆசிரியர் என்ற நிலையில் தனது பதவிக்குரிய கௌரவத்தை பாதுகாத்துக் கொள்ளும் விதத்தில் தொடர்புகளை வைத்துக் கொள்ளுதல் மிக அவசியமாகும். தவறும் பட்சத்தில் அது ஒழுக்க சீர்கேடுகளை உருவாக்கி சிலவேளைகளில் ஆசிரியர் - மாணவர் உறவை பாதிப்படையவும் செய்யும். எனவே ஆசிரியர் மாணவர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்பு சுமூகமானதாகவும் அதேவேளை அவதானத்துடன் அமைய வேண்டியது இன்றியமையாததாகும்.

குழந்தை மொழியை முழுக்க முழுக்க தான் பிறக்கும் சமுதாயச் சூழலில் பெறுகிறது. அது தான் பெறும் அனுபவம் மூலம் கற்கிறது. குழந்தையைச் சார்ந்த சமூகம் குழந்தைக்கு வேண்டிய மொழித் தரவுகளைத் தருகிறது போலச் செய்தல், திரும்பக் கூறல், மாதிரியாக்கம் (Anology) போன்றவற்றின் அடிப்படையில் தான் சார்ந்த சமூகத்தின் மொழியைக் கற்கிறது. மேலும் மொழி கற்றல் என்பது பல்வேறு பழக்கங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. பழக்கம் என்பது தூண்டல் எதிர்வினை (Stimulus - Response) ஆகியவற்றின் தொடர்ச்சியால் உருவாக்கப்படுவது. மொழி கற்றல் என்பதும் தூண்டல் எதிர்வினை ஆகியவற்றின் விளைவாகப் பார்க்கப்படுகின்றது.

முனைவர் கி. அரங்கன்

# கல்வி ஒளியை வெற்றிகரமாக பரப்பி வரும் அகவிழி




**சோ. சந்திரசேகரன்**
பீடாதிபதி, கல்விப்பீடம்,
கொழும்பு பல்கலைக்கழகம்.


**வாழ்த்துக்கள்**

யாரேனும்
ஆய்வு மாணவர்கள்
அகவிழியில் வெளிவந்த
சகல கட்டுரைகளையும்
துறைவகைப்படி
தொகுத்து வகைப்படுத்தலும்
அவற்றில் பொதித்து
காணப்படும்
புதிய சிந்தனைகளை
இனங்கண்டு தொகுப்பதும்
ஒரு சிறந்த
பகுப்பாய்வுப்
பணியாகவும் அமையலாம்.



ஐம்பதாவது இதழை நெருங்கிக் கொண்டிருக்கும் அகவிழி சஞ்சிகையின் ஆசிரியருக்கும் அதன் வெளியீட்டாளர்களுக்கும் எமது வாழ்த்துக்களும் பாராட்டுகளும் உரித்தாகுக. அகவிழியின் கடந்தகால சாதனைகளுக்குக் காரணமாக இருந்து அதன் பின்புலத்திலிருந்து பணிபுரிந்த இவர்கள் தமிழ் கூறும் ஆசிரியர் உலகின் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர்கள்.

இந்நாட்டில் வழங்கி வரும் ஏனைய இரு மொழிகளிலும் இடம் பெறாத இம்முயற்சி பற்றி நாம் பெருமிதப்பட முடியும். தமிழ் மொழிமூல ஆசிரியர்களின் தொழில்தகைமை மேம்பாட்டையும் அவர்களை வலுப்படுத்துவதையும் இலக்காகக் கொண்டு, பொருள் மற்றும் நேர இழப்புகளைக் கருத்திற் கொள்ளாது, தொடர்ச்சியாக, பெருமளவுக்குக் காலந்தவறாது அகவிழி வெளியிடப்பட்டு வருவது பெரு மகிழ்ச்சிக்குரிய விடயம்.

கட்டுரைகளைச் சேகரித்து, செம்மைப்படுத்தி, அச்சிட்டு விநியோகப் பணியில் ஈடுபடுவதோடு நில்லாது, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மலையகம் மற்றும் முஸ்லிம் பிரதேசங்கள் எனக் களப்பணியில் ஈடுபட்டு, அகவிழியின் இலக்குகளை ஆசிரியர் சமூகத்துக்கு உணர்த்தும் வகையில் கடுமையாக உழைத்தவர் ஆசிரியர் மதுசூதனன் அவர்கள்; இக்களப்பணியில் யாமும் அவரோடு இணைந்து செயற்பட்டோம் எனக் கூறுவதில் மகிழ்வடைகின்றோம்.

பல்கலைக்கழகங்களிலும் கல்வியியல் கல்லூரிகளிலும் கல்வியியல் பயிலும் ஆசிரியர் பயிலுனர்களுக்கு உதவும் சிறந்த உசாத்துணைச் சஞ்சிகையாகவும், பணியில் அமர்ந்துள்ள ஆசிரியர்களின் கல்வியியல் அறிவை இற்றைப்படுத்தும் வகையில் கல்வியியலின் பல்வேறு துறைசார்ந்த சமகாலச் சிந்தனைகளைக் கட்டுரை வடிவில்தந்தும் அகவிழி கல்வி உலகில் ஒரு நிரந்தரமான இடத்தைப் பெற்று விட்டது. குறைந்த பட்சம் இதுவரை வெளிவந்த கட்டுரைகளின் தொகை 250 எனக் கொண்டால், அவை அனைத்தும் தமிழுக்குப் புதுவரவு எனக் கொள்ள முடியும்.

யாரேனும் ஆய்வு மாணவர்கள் அகவிழியில் வெளிவந்த சகல கட்டுரைகளையும் துறைவகைப்படி (உளவியல், கற்பித்தலியல், சமகாலக் கல்வி முறைகள், மதிப்பீட்டியல்...) தொகுத்து வகைப்படுத்தலும் அவற்றில் பொதித்து காணப்படும் புதிய

சிந்தனைகளை இனங்கண்டு தொகுப்பதும் ஒரு சிறந்த பகுப்பாய்வுப் பணியாகவும் அமையலாம். எவ்வாறாயினும் அனைத்துக் கட்டுரைகளையும் துறைவகைப்படிப் பட்டியலிடுவதால், எத்துறைகளில் போதாமையுண்டு என்பதைக் கண்டறிய முடியும். சஞ்சிகை ஆசிரியர் இவ்வாலோசனையைக் கருத்திற் கொள்வார் என நம்புகின்றோம். அவ்வாறே கட்டுரையாளர்கள் இதுவரை தமிழ் மொழிவழியாசிரியர்களுக்குப் பரீட்சயமற்ற பயனுள்ள புதிய கல்விச் செல்நெறிகளை இனங்கண்டு அவற்றை அகவிழியினூடாக ஆசிரியர் மத்தியில் பரப்பும் வகை செய்தல் வேண்டும்.

பாடசாலையில் இடம் பெறும் கல்விப் பணியினூடாகவே புதிய தலைமுறையினர் புதிய நூற்றாண்டின் சவால்களை எதிர் கொள்ள ஆயத்தப்படுத்தப்படுகின்றனர். பாடசாலைக் கல்வி மற்றும் பல்கலைக்கழகக் கல்வியின் பின்னரும் இளந்தலை முறையினர் வாழ்நாள் முழுவதும் கல்வி முயற்சியில் ஈடுபடல் வேண்டும் என்பது புதிய நூற்றாண்டுக்கான ஒரு நியதி. இவ்வாறான உளப்பாங்குகளை உடைய புதிய தலைமுறையினரை உருவாக்கும் பொறுப்புடைய ஆசிரியர்களும் தொடர்ச்சியாக அறிவு ரீதியாக வலுப்படுத்தப்படல் வேண்டும். இதில் அகவிழி ஒரு பிரதான பங்கை வகித்து வருகின்றது என்பது மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம்.

சகல அகவிழி இதழ்களையும் படித்து உள்வாங்கும் போது சில பிரதான செல்நெறிகளை அவதானிக்க முடிகின்றது:

ஆரம்பத்தில் உயர்கல்வி நிலையில் கல்வியியல் கற்பிக்கும் பேராசிரியர்கள், ஆய்வாளர்களின் கட்டுரைகள்; பின்னர் படிப்படியாக, கல்வியியல் கல்லூரி விரிவுகரையாளர்கள், கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரியர்கள் எனக்கட்டுரை எழுதுவோரின் களம் விரிவடைந்து கல்வியியல் பயிலும் ஆசிரியர்களும் கட்டுரைகளை வழங்கும் நிலை; சுருங்கக் கூறின் அகவிழியானது, கல்வியியல் பற்றிக் காத்திரமாக சிந்திப்போரின் வட்டத்தை நன்கு விரிவுபடுத்தியிருப்பது அதன் பணியின் ஒரு பிரதான பக்க விளைவு. கல்வியியல் என்பது ஒரு சிலரின் ஏகபோகம் என்ற நிலைமைக்கு முடிவு கட்டியது அகவிழி என்பது ஒரு ஆரோக்கியமான வளர்ச்சியும் விளைவும் என்பது எமது கருத்து.

மேலும், பிரதான கல்விப் பிரச்சினைகளில் கருத்துப் பரிமாற்றம், பரவலாகப் பல்வேறு இடங்களில் காணப்படும் தனித்துவமான கல்விப் பிரச்சினைகள் இவைபற்றிக் கலந்துரையாடுவதற்கான ஒரு கருத்துத்தள்த்தை வழங்கியதிலும் அகவிழிக்கு ஒரு பிரதான பங்குண்டு.

இன்று வரை எமது பெரும்பாலான ஆசிரியர்கள் தமிழில்தான் அதிகமாக புதிய விடயங்களை புத்தாக்கச் சிந்தனைகளை தேடுகின்றார்கள். இவர்களுக்கு அகவிழி ஒரு பிரதான கற்றல் துணைச் சாதனமாக விளங்குகின்றது. வாசிப்பு மட்டம், கற்கும் திறன், தேடல், ஆய்வு போன்ற அம்சங்கள் விரிவு பெறுவதற்கும் அகவிழி பங்காற்றி வருகின்றது.

இவ்வாறு ஆசிரியர் கல்வி மற்றும் ஆசிரியர் தொழில் தகைமை யாவற்றுக்கும் 'அகவிழி' வகிக்கின்ற பாத்திரம் மெச்சத்தக்கது, பாராட்டத்தக்கது. கடந்த சில ஆண்டுகளாக அகவிழி ஆசிரியர் மட்டங்களில் ஏற்படுத்தி வரும் சலனங்களை அறிந்து கொள்ள முடிகின்றது. இது போல் அனைத்து ஆசிரியர்கள் மட்டத்திலும் அகவிழி பெரும் தாக்கம் செலுத்த வேண்டும். ஆகவே அகவிழியை இன்னும் பரவலாக ஆசிரியர்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டிய பொறுப்பு எமக்குண்டு.

எம்மைப் பற்றி எமக்காகச் சிந்திக்கவும் குரல் கொடுக்கவும் மற்றும் புத்தாக்கச் சிந்தனைகளைக் கொண்டு வந்து எம்மை வளப்படுத்தவும் அகவிழி எடுத்துவரும் முயற்சிகளுக்கு நாம் துணை நிற்க வேண்டும்.

மீண்டும் அகவிழியின் ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்கள் யாவருக்கும் எமது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

---

குழந்தைகளின் வயது வளர்ச்சியுடன் இணைந்த செயற் பணிகளை வழங்கிய பியாசே அறிகை விருத்திப் படிநிலைகளைப் பின்வருமாறு விளக்கலானார்

1. புலன் இயக்கப்பருவம் - பிறப்பிலிருந்து இரண்டு வயது.
2. தூல சிந்தனைக்கு முற்பட்ட பருவம் - இரண்டு வயது தொடக்கம் ஏழுவயது வரை.
3. தூல சிந்தனைப்பருவம் - ஏழுவயது தொடக்கம் பதினொரு வயது வரை.
4. நியம சிந்தனைப் பருவம் - பதினொரு வயதைத் தொடர்ந்து நிகழ்வது.

முனைவர் சபா ஜெயராசா






கி. புண்ணியமூர்த்தி
ஆசிரிய கல்வியலாளர்,
தேசிய கல்விக் கல்லூரி,
மட்டக்களப்பு


அறிமுகம்

கல்வி என்பது கருவறை முதல் கல்லறை வரை தொடரக்கூடியதாகும். இன்ன வயதில்தான் ஒருவர் கற்க வேண்டுமென்பதை எவராலும் வரையறுத்துக் கூற முடியாது. அதேபோல் மனித விருத்தியில் வளந்தோர் பருவத்தை இன்ன பருவம் என வரையறுத்துக் கூறுவதும் கடினமானதாகும்.

# வளந்தோர் கல்விக் கோட்பாடுகளும் தேசிய கல்விக் கல்லூரிகளில் அவற்றின பிரயோகங்களும்

ஒருவரை வளந்தவர் என எவ்வாறு அடையாளப்படுத்துவது? சாதாரணமாக ஒருவரை வளந்தவரா? அல்லது இளையவரா? என இனங்காண்பது அவரது வயதைக் கொண்டேயாகும். சிக்கெனிங்கும் ஹவிங்கேஸ்ற்றும் (Chickening and Havigherst-1981) பின்வரும் அட்டவணையிலுள்ளவாறு வளந்தோர் பருவத்தைப் பாகுபடுத்துகின்றனர்

| வயது | விருத்திச் சந்தர்ப்பங்கள் |
|---|---|
| 16 - 23 வயதுபின் | கட்டிளமைப் பருவம் (இளைஞர்) |
| 23 - 35 வயது | முன் வளந்தோர் பருவம் |
| 35 - 45 வயது | நடு மாறுநிலைப் பருவம் (Middle Transition) |
| 45 - 57 வயது | நடு வளந்தோர் பருவம் |
| 57 - 65 வயது | பின் வளந்தோர் மாறுநிலைப் பருவம் |
| 65க்கு மேல் | பின் வளந்தோர் பருவம் |

ஆதாரம்: சிக்கெனிங்கும் ஹவிங்கேஸ்ற்றும் 1981 (Chickening and Havigherst)

கல்வி என்பது கருவறை முதல் கல்லறை வரை தொடரக்கூடியதாகும். இன்ன வயதில்தான் ஒருவர் கற்க வேண்டுமென்பதை எவராலும் வரையறுத்துக் கூற முடியாது. அதேபோல் மனித விருத்தியில் வளந்தோர் பருவத்தை இன்ன பருவம் என வரையறுத்துக் கூறுவதும் கடினமானதாகும். ஒருவர் வளந்தோர் பருவத்துக்குள் உள் நுழையும் வயது எது என்பதில் பல்வேறு நாடுகளில் பல்வேறு அடிப்படைகள் பின்பற்றப்படுகின்றன. இது அவ்வவ் நாடுகளின் சமூக, கலாசார, பொருளாதார, அரசியல், அடிப்படைகளை மையமாகக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது. எனினும் 16-21 வயதளவைப் பொதுவாக வளந்தோருக்கான அடிப்படை வயதெல்லையாகக் கொள்ள முடியும். இது மாற்றமடைந்து செல்லும். மனித வாழ்க்கைச் சக்கரத்தில் வளந்தோர் பருவத்தைத் தீர்மானிக்கும் புறக் காரணிகளாக,

- பதிவுத் திருமணம் செய்யும் வயது.
- தேர்தலில் வாக்களிக்கும் உரிமையைப் பெறும் வயதெல்லை.
- தொழிலுக்கு ஆட்சேர்ப்பதற்கான அடிப்படை வயதெல்லை.

போன்றவை காணப்படுகின்றன. அதேவேளை வளந்தோர் பருவத்தைத் தீர்மானிக்கும் உளவியல் காரணிகளும் காணப்படுகின்றன.

* வளந்தோர் பருவத்தைத் தீர்மானிக்கும் உளவியல் காரணிகள்

வளந்தோர் பருவத்தைத் தீர்மானிக்கும் முக்கிய உளவியல் காரணியாக விளங்குவது சுய எண்ணக்கரு விருத்தியாகும். இவ்வாறான சுய எண்ணக்கரு விருத்தியால் குறிப்பிட்ட ஒரு நபர் சுயமாகத் தீர்மானமெடுக்கும் திறனை விருத்தி செய்து கொள்கிறார். அது மாத்திரமல்லாமல் அத் தீர்மானத்துக்கு வகைகூறும் தன்மையையும் அவர் விருத்தி செய்து கொள்கிறார். ஒருவர் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு சுய எண்ணக்கரு விருத்தி, தீர்மானமெடுக்கும் திறன், அத் தீர்மானத்துக்கு வகைகூறும் தன்மை போன்றவை இன்றியமையாதவைகளாகும்.

இளம் சிறுவர்கள் சுய எண்ணக்கரு விருத்தியை அடையாதவர்களாக அல்லது விருத்தியடைந்து கொண்டிருப்பவர்களாக இருப்பார்கள். அவர்கள் சுய தீர்மானமெடுப்பதில் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குவார்கள். அது மாத்திரமல்லாமல் அவர்களது சுய செயற்பாடுகளுக்குத் தனித்துத் தாமாகவே வகைகூற முடியாதவர்களாக இருப்பார்கள். அதிகமாகத் தங்கள் பெற்றோர்களிலேயே தங்கியிருப்பார்கள். ஆனால் வளந்தவர்கள் முதிர்ச்சியடைந்தவர்களாகவும் மனவெழுச்சிச் சமநிலையடைந்தவர்களாகவும் சுய எண்ணக்கரு விருத்தி பெற்றவர்களாகவும் இருப்பார்கள். இவை அவர்கள் பிள்ளைப் பருவத்திலும் கட்டிளமைப்பருவத்திலும் பெற்றுக்கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் உருவாகிய பண்புகளாகும். ஆனால் இவ் முதிர்ச்சியையும் மனவெழுச்சிச் சமநிலையையும், சுய எண்ணக்கரு விருத்தியையும் சரியாக அளவிடுவது முடியாத காரியமாகும். ஆனால் காலக்கிரமத்தில் வயது செல்லச் செல்ல அப் பண்புகள் விருத்தியடைவதை அவதானிக்க முடியும்.

* கற்றலில் ஈடுபடும் வளந்தோர்

கற்றல் ஒரு வாழ்க்கை நீடித்த செயன்முறையாகும். புத்திசுவாதீனமற்றவர்கள், உளப்பாதிப்புக்குட்பட்டவர்கள் ஆகியோரைத் தவிர ஏனைய அனைத்து வளந்தோரும் கல்வி கற்கக் கூடியவர்களாகவேயுள்ளனர். முறையில் கல்வி வளந்தோருக்குக் கல்வி அளிப்பதில் அவர்களின் வாழ்நாள் முழுவதும் தொடர்ச்சியான பங்கு வகிக்கிறது. வாழ்நாள் முழுவதும் ஏற்படும் சம்பவங்கள், நிகழ்வுகள் போன்றன இவ் வகைக் கற்றலுக்குச் சாதகமான பங்களிப்பை வழங்குகின்றன. அது தவிர வளந்தோர் கல்வியில் முறைசார் கல்வியும் முறைசாராக் கல்வியும் பங்கு வகிக்கின்றன. அவற்றில் முறைசார் கல்வியை விட முறைசாராக் கல்வி பெருமளவு பங்கு வகிக்கிறது எனலாம். உலகின் பல நாடுகளில் பல்வேறு வயது மட்டங்களைக் கொண்ட வளந்தோருக்குப் பல்வேறு கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள நடைமுறைப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளில் இவ் நிகழ்ச்சித்திட்டங்கள் பெருமளவில் விருத்தி பெற்றுக் காணப்படுகின்றன.

இவ்வகை வளந்தோர் கற்றலில் ஈடுபடுபவர்களில் அதிகமானோர் முறைசார் கல்வியிலிருந்து முன்கூட்டியே இடைவிலகியவர்களாவர். அவர்கள் தாம் இடையில் விட்ட குறிப்பிட்ட அறிவு, திறன்களை மீளவும் தொடர்ச்சியாகப் பெறுவதற்காக இவ் வகை வளந்தோர் கற்றலில் ஈடுபடுகிறார்கள். இதற்காக முறைசார் அடிப்படையில் பல்கலைக்கழகங்களையும், கல்லூரிகளையும், தொழில்சார் கல்வி நிறுவனங்களையும் பயன்படுத்துகிறார்கள். இவர்கள் ஒரு உயர் குறிக்கோளை மையமாக வைத்துக் கற்றலில் ஈடுபடுகிறார்கள். உதாரணமாக பட்டப்பின்படிப்புக் கல்வி, அல்லது தொழில் பயிற்சி போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவர்கள் அனைவரும் வயது அடிப்படையிலேயே வளந்தோர்களாகக் கருதப்படுகிறார்கள் என்பது குறிப்பிட்டுக் கூறக்கூடிய அம்சமாகும்.

எனவே வளந்தோர் கற்றல் எனப் பொருள் கொள்ளப்படுவது என்னவென்றால் "தனி நபர்கள் அவர்களது அறிவை வளப்படுத்துவது அல்லது மாற்றியமைப்பதினூடாக அவர்களது அறிவு, விழுமியம், மனப்பாங்கு, திறன் அல்லது நுட்பங்கள் என்பவற்றை விருத்தி செய்வதற்கு எடுக்கும் ஊக்கலுடன்கூடிய செயற்பாடுகளாகும்". இச் செயற்பாடுகளின் பிரதிபலனாகத் தனிநபர்கள் தமக்கென அறிவு விழுமியம், மனப்பாங்கு, திறன், நுட்பங்கள் போன்றவற்றையும் விசாலமான அனுபவங்களையும் உரிமையாக்கிக் கொள்வர்.

* வளந்தோர் தொடர்பான கோட்பாடுகள்

1. அறிவு விருத்தி தொடர்பாகப் பியாஜேயின் கோட்பாட்டின்படி கற்கும் வளந்தோர் அறிவு விருத்தியின் இறுதிக் கட்டத்தைப் பூர்த்தி செய்திருப்பார்கள். அவர்கள் முறைப்படியான செயல் சார் சிந்தனை விருத்தியையும், பண்பு சார் சிந்தனை விருத்தியையும் கொண்டவர்களாகத் திகழ்வார்கள். பியாஜே 11-16 வயதுப் பருவமே அறிவு விருத்தியின் மிக உச்ச பருவம் என்கிறார் இதனை அவர் நியம சிந்தனைப் பருவம் என வரையறுக்கிறார்.

2. பியாஜேயின் அறிவு விருத்தி தொடர்பான கோட்பாடு பற்றிப் பல உளவியலாளர்கள் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். அவர்களில் ரீஜல் (Reigel) முக்கியமானவராவார். அவர் பியாஜேயின் "நியம சிந்தனை" எனும் எண்ணக்கருவை உறுதிப்படுத்துமுகமாக மேலும்

ஒரு விருத்திக் கட்டத்தினை வெளிப்படுத்துகிறார். அதனைத் "தர்க்க நியாய செயற்பாட்டுச் சிந்தனைப் பருவம்" (Stage Dialectical Operations) என அவர் வரையறுக்கிறார். பியாஜே இம் மட்டத்தை இனங்காணவில்லை எனவும் றீஜல் விமர்சிக்கிறார்.

றீஜல் சிந்தனையின் இயல்பு தொடர்பாகவே வலியுறுத்துகிறார். சாதாரணமாக ஒருவரின் நியம சிந்தனை 16 வயதையடையும் போது உச்ச மட்டத்தை அடையும். ஆனால் கற்றலிலிருந்து சிந்தனையைப் பிரிக்க முடியாது. எனவே கற்றல் தொடரும்போது சிந்தனையும் தடங்கலின்றி விருத்தியடையும் என்பதே றீஜலின் கருத்தாகவுள்ளது. றீஜல் இனங்காணும் தர்க்க நியாய செயற்பாட்டுச் சிந்தனையில் ஆக்கத்திறன், விசாரணை, புதுமையாக்கம் போன்ற அம்சங்கள் உள்ளடங்கியுள்ளன. வளந்தவர்கள் சுதந்திரமானதும் ஆக்கரீதியானதுமான சிந்தனையையுடையவர்களாக விருப்பதால் அவர்கள் ஆக்கரீதியான சிந்தனை, விசாரணை, புதுமையாக்கம் போன்றவற்றைப் பயன்படுத்தி தர்க்க நியாய செயற்பாட்டுச் சிந்தனையை விருத்தியடையச் செய்வதாக றீஜல் குறிப்பிடுகிறார்.

3. பியாஜே தொடர்பாகக் கருத்து வெளிப்படுத்தும் மற்றொருவரான ஜொவ்ரி ஸ்கயர்ஸ் (Geoffry Squires-1993) தர்க்க உளவியல் (Dialectical Psychology) செயலும், மாற்றமும் தொடர்பாக ஆய்வு செய்வதில் பெரும் பங்காற்றியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். ஸ்கயரிசின் கருத்துப்படி வளந்தோருக்கு அவர்களது வாழ்க்கைக் காலம் முழுவதும் பல்வேறு மாற்றங்களுக்கு முகம் கொடுத்துச் செயலாற்றும் சந்தர்ப்பங்கள் ஏற்படும் அதேவேளை பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். இதன் காரணமாக அவர்கள் சிந்திப்பதற்கும் பிரச்சினை தீர்ப்பதற்கும் உபாயங்களை வகுக்க வேண்டிய தேவையும் ஏற்படலாம்.

4. வளந்தவர்கள் கற்கும் தன்மையே அவர்களின் வளர்ந்த தன்மையைத் தீர்மானிக்கிறது. ஜொவ்ரி ஸ்கயர்ஸ் வளந்தோரைத் தீர்மானிப்பது வயதுதான் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்கிறார். அதாவது வளந்தோரைத் தீர்மானிக்கும் பண்புகளில் வயதையும் ஒரு காரணியாகக் கொள்ளலாமே தவிர அதுதான் முக்கிய காரணி எனக் கொள்ள முடியாது என்கிறார். வளந்தோர் தொடர்பாக வோல்ற்ஸ் (Boltes, 1980) முன்வைத்த மாதிரியை இவரும் முன்வைக்கிறார். அதில் வளந்தோர் தொடர்பாகச் செல்வாக்குச் செலுத்தும் 3 முக்கிய காரணிகள் உள்ளடங்கியுள்ளன. அவையாவன:

1. உயிரியல் வயது (Biological Aging)
2. குறிப்பிட்ட ஒரு பரம்பரையின் அல்லது சமூகக் குழுவின் அங்கத்தவன் என்ற வகையில் பெற்றுக் கொள்ளும் சமூக அனுபவங்கள்.
3. தனிப்பட்ட வாழ்க்கைச் சம்பவங்கள்.
4. இவ் விடயங்கள் ஒருவரது வாழ்க்கைக் காலம் முழுவதும் பல்வேறு அடிப்படைகளில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவற்றில் இரண்டாவது காரணியான சமூக அங்கத்துவக் காரணி பின் வளந்தோர் பருவத்தில் அதிகம் செல்வாக்குச் செலுத்துவதாக உள்ளது.

5. வளந்தோர் கற்றல் துறை தொடர்பாக அவதானம் செலுத்தியவர்களான ரெனன்ற் (Tennant), ஜாரிஸ் (Jarris), நொக்ஸ்(knox), வுறொக்பீல்ட்(Brookfield) போன்றவர்கள் வளந்தோர், கற்பதனூடாகப் பின்வரும் ஆற்றல்களை விருத்தி செய்து கொள்வர் என இனங்கண்டுள்ளனர். அவையாவன:

- கற்கும் ஆர்வத்தை விருத்தி செய்வதனூடாகச் சிந்தனையை விருத்தி செய்யும் ஆற்றல்.
- விசாரணையின் அடிப்படையில் அல்லது ஆராய்ச்சியின் அடிப்படையில் விடைகளை அல்லது தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையிலான வினாக்களை அல்லது பிரச்சினைகளை (உய்த்தறி, தொகுத்தறி நியாயங்களைப் பயன்படுத்தி) உருவாக்கும் ஆற்றல்.
- பல்வேறு வகையான வினாக்களுக்கு விடை காண்பதற்குத் தேவையான தரவுகளை இனங்காணும் ஆற்றல்.
- பொருத்தமானதும், நம்பகமானதுமான மூலாதாரங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய மார்க்கங்களைக் கண்டறியும் ஆற்றல்.
- கண்டறிந்த மார்க்கங்களிலிருந்து தேவையான தரவுகளைச் சேகரிப்பதற்கு வினைத்திறன்மிகு முறையியல்களைத் தெரிவு செய்யும் ஆற்றல்.
- சேகரிக்கப்பட்ட தரவுகளை ஒழுங்கமைப்பதற்கான, பகுப்பாய்வு செய்வதற்கான, மதிப்பீடு செய்வதற்கான ஆற்றல்.
- உருவாக்கிய வினாக்களுக்கு அல்லது பிரச்சினைகளுக்குப் பொருத்தமான பதில்களை அல்லது தீர்வுகளை பொதுமைப்படுத்துதல், பயன்படுத்துதல், தொடர்புபடுத்துதல் தொடர்பான ஆற்றல்.

ஒரு சுய ஊக்கலால் வழிப்படுத்தப்பட்ட கற்குனரிடம் வேறொருவரிடம் தங்கியிருக்காமல் தனது கற்றல் நடவடிக்கைகளைத் தானாகவே ஆரம்பித்து இடைவிடாமல் செயற்படுத்திச்

செல்வதற்கேற்ற ஆற்றல் காணப்படும். அவர் தாமாகவே சுய ஊக்கலால் உந்தப்பட்டுத் தனது திட்டமிடலுக்கு அமைவாக முறையியல்களை விருத்தி செய்வதற்கு அல்லது மாற்றியமைப்பதற்குத் தேவையான ஆற்றல்களை வளர்த்துக் கொள்வார்.

இதன்படி பார்த்தால் சுய ஊக்கலுடன் கற்கும் ஒருவருக்கு கற்றல் தொடர்பான வழிகாட்டல்களும் வசதிகளும் தேவையற்றது எனும் கருத்தைக் கொள்ள முடியாது. இங்கு அவர் கற்பது தொடர்பாக மிகவும் சுதந்திரமாகவும் எவ்வித கட்டுப்படுத்தல்களுமின்றிச் செயற்பட முடியும் என்ற கருத்தே முன்வைக்கப்படுகிறது. அத்துடன் இவ்வகைக் கற்றல் செயற்பாடு மிகவும் விளைதிறனுள்ளதாக அமையும் என்ற கருத்தும் உள்ளடங்கியுள்ளது.

கற்றல் தொடர்பாக வெளிவாரிக் கட்டுப்படுத்தல்கள் அவசியமல்ல. அதேவேளை வளந்தோர்கள் வெளி உலகத்துடன் கொள்ளும் இடைத்தாக்கங்களின் மூலம் பெற்றுக் கொள்ளும் அனுபவங்கள் அவர்களது கற்றலில் நிரந்தரமானதும் அர்த்தமுள்ளதுமான அடிப்படையை உருவாக்கும் எனும் கருத்தை இவர்கள் தெரிவித்துள்ளனர். குறிப்பாக வுறொக்பீல்ட் (Brookfield.S) இதனை சமுத்திரத்தினுள் அமிழ்ந்திருக்கும் பனி மலைக்கு (Iceberg) ஒப்பிடுகிறார். அதாவது கடலுக்கு வெளியே தெரியும் சிறிய பகுதி கற்கின்ற விடயங்களையும் நீருக்கு அடியிலுள்ள மிகப் பெரும்பகுதி பெற்றுக் கொள்ளப்பட்ட விசாலமான அனுபவ அறிவையும் குறிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

6. ஹால் ரொஜர்ஸ் (Carl Rogers) ஒரு மானிடவியல் உளவியலாளராவார். இவர் வளந்தோர் கல்வி தொடர்பாக முன்வைக்கும் எண்ணக்கருக்களாவன சுய ஈடுபாடு, தேவை நோக்கித் திசைமுகப்படல், (Need Orientation) அனுபவக் கற்றல் போன்றவையாகும். வளந்தோர் கற்றல் தொடர்பாக இவர் முற்றுமுழுதாக ஆசிரியரின் கற்பித்தலை நிராகரிக்கவில்லை. ஆனால் நேரடிக் கற்பித்தலை விட கற்றலுக்கு வசதியளிப்பதை வலியுறுத்துகிறார். இவர் வளந்தோருக்கு அனுபவக் கற்றலே மிகச் சிறந்தது என்கிறார். இதற்காக அவர் முன்வைக்கும் காரணங்களாவன:

- மனித வர்க்கத்துக்கு இயற்கையாகவே கற்பதற்குரிய உள்ளார்ந்த ஆற்றல் காணப்படுகிறது.
- கற்பதற்குரிய பாட விடயங்களுக்குப் பொருத்தமானவை கற்றலில் ஈடுபடுபவரால் இனங்காணப்பட்டுக் கற்றல் இடம்பெறும்.
- சுய புலக்காட்சி, சுய ஒழுங்கமைப்பு என்பன கற்றலின்போது மாற்றத்துக்குட்படும்.
- வெளி அச்சுறுத்தல்கள் (External Threats) குறைவாக இருக்கும் போது சுய புலக்காட்சி மிக இலகுவாக ஏற்படும்.
- சுயாதீனத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படாதபோதுதான் கற்றல் இடம்பெறும்.
- செயற்பாடுகளின் மூலம்தான் மிகவும் அர்த்தமுள்ள கற்றல் இடம்பெறும்.
- கற்றல் செயற்பாடுகளில் பொறுப்புணர்ச்சியுடன் ஈடுபடும் போதுதான் கற்றல் இலகுவாக இடம்பெறும்.
- தாமாகவே ஆரம்பிக்கும் கற்றலில்தான் கற்குனர் முழு மனதுடன் ஈடுபடக்கூடியதாகவிருக்கும்.
- சுய விமர்சனமும், சுய மதிப்பீடும் அடிப்படையாக அமையும் போதுதான் சுதந்திரம், ஆக்கம், சுய நம்பிக்கை என்பன இலகுவாக விருத்தி பெறும்.
- சமூக அடிப்படையில் மிகவும் விளைதிறனுள்ள கற்றலாகக் கருதப்படுவது கற்றல் செயற்பாடுகள் கற்றல் அனுபவங்களுக்காகத் திறந்திருக்கும்போது ஆகும். அவ்வாறு திறந்திருக்கும்போதுதான் மாற்றுச் செயன்முறைகள் கற்பவருள்ளே ஏற்படும்.

7. வளந்தோர் கற்றல் தொடர்பாக போலோ பிரேர் (Paulo Frere) கருத்துத் தெரிவிக்கையில். அனுபவங்களின் மூலம் கற்கும் கற்றலே விளைதிறன்மிக்கது என்கிறார். வளர்ந்த ஒருவர் தனது சமூக கலாசாரச் சுற்றாடலில் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் நடைமுறையிலுள்ள கலாசாரத்தை மாற்றியமைக்கும் சக்தியைப் பெறுகிறார். அத்துடன் அவர் தனது வகிபாகத்தை உருவாக்கிக் கொள்ளும் ஆற்றலையும் பெறுகிறார். ஆசிரியருக்கும் மாணவனுக்கும் இடையிலான உரையாடலுக்கு முக்கியத்துவமளிக்கும் போலோ பிரேர் ஆசிரியர், மாணவன் தொடர்பாக மிகுந்த அவதானத்துடன் செயற்படுபவராகவும், மனிதத்துவத்தை அதிகம் பேணுபவராவும், வளந்தோர் கற்றலை இலகுபடுத்துபவராகவும் இருத்தல் வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

8. வளந்தவர்களின் கற்றல் தொடர்பாகத் தர்க்க ரீதியான கருத்துக்களை வெளியிட்டவர்களில் மல்கம் நோலிஸ் (Malcolm knowleds - 1970) முன்னிலை வகிக்கிறார். இவர் ஆங்கில மொழியில் "Andragogy" என அறிமுகப்படுத்தும் பதத்தை "வளந்தவர்களுக்குக் கற்பிக்கும் விஞ்ஞானம்" எனவும் "Pedagogy" என்னும் பெயரில் அறிமுகப்படுத்தும் பதத்தை "பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் விஞ்ஞானம்" எனவும் பொருள் கொள்ளலாம்.

- மல்கம் நோலிஸின் தர்க்க ரீதியான கருத்துக்கள்

1. சுயகற்றலினூடாக சுய எண்ணக்கருவினை விருத்தி செய்து கொள்ளல்.

2. பெற்றுக் கொள்ளப்படும் அனுபவங்கள் கற்றலுக்கான சிறந்த வளமாகக் காணப்படுதல்.

3. சமூக வகிபாகத்தைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான வகையில் கற்றலுக்கு ஆயத்தமாதல்.

4. வளந்தோருக்குக் கற்றலில் பிரச்சினையை மையமாகக் கொண்ட திசைமுகம் காணப்படுதல்.

5. வளந்தோரிடம் சுய ஊக்கல் காணப்படுதல்.

கற்றலுக்கான ஆயத்தம் வளந்தவர்களுக்கு மாத்திரம் சிறப்பான ஒரு அம்சம் அல்ல சிறுவர்களுக்குக் கூட கற்றலுக்கான ஆயத்தம் உரித்துடையதாகும். ஆனால் நோலிஸ் சிறுவர்களுக்கு ஏற்படும் கற்றலுக்கான ஆயத்தம் உயிரியல் விருத்தியினால் ஏற்படும் விருத்திச் செயற்பாட்டால் உருவாவது என்கிறார். இவ் ஆயத்தம் மற்றவர்களினால் ஏற்படுத்தப்படும் கட்டுப்படுத்தல்களினதும், அழுத்தங்களினதும் பிரதிபலனாக ஏற்படுவதாகும் என்கிறார். ஆனால் வளந்தோரிடம் உருவாகும் கற்றலுக்கான ஆயத்தம் கற்பதற்கான தேவை காரணமாக உருவாகுவதாகும் எனவும் குறிப்பிடுகிறார்

வளந்தோர்கள் தனிப்பட்ட வாழ்விலும், சமூக வாழ்விலும் பல்வேறு வகிபாகங்களை ஏற்க வேண்டியுள்ளதால் அவர்களுக்குக் கற்றலுக்கான ஆயத்தம் அவசியமாகின்றது என நோலிஸ் குறிப்பிடுகிறார். வளந்தோர்கள் பெரும்பாலும் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் தமது வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவுமே கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். குறிப்பாகக் கூறுவதானால் தொழில் ஒன்றைத் தேடுவதற்காக, பதவியுயர்வைப் பெறுவதற்காக, மேலதிக தொழில் பயிற்சியைப் பெறுவதற்காக என்ற அடிப்படைகளிலேயே கற்கிறார்கள் எனக் கொள்ள முடியும். அவர்கள் கற்பதற்காகக் கற்றலில் ஈடுபடுதல் மிகவும் அரிதாக இடம்பெறும் ஒரு அம்சமாகும் என்பதே நோலிஸின் கருத்தாகும்.

பிள்ளைகள் தமது கற்றல் தொடர்பாகப் பெற்றோர்களையும், ஆசிரியர்களையும், வளந்தோர்களையும் நாடுவார்கள். ஆனால் வளந்தோர் தாமாகவே கற்றலில் ஈடுபடுவர். மற்றவர்களின் கருத்துக்களில் தங்கியிருக்காமல் தமது கற்றல் செயற்பாடுகளைத் தாமாகவே முகாமை செய்து கொள்வார்கள்.

கற்றல் தொடர்பாக சிறுவர்களுக்கும் வளந்தோருக்கும் இடையில் காணப்படும் முக்கிய வேறுபாடு சுய ஊக்கலாகும் என நோலிஸ் குறிப்பிடுகிறார். இக் கருத்து பல்வேறு விமர்சனங்களுக்கும் வாதப் பிரதிவாதங்களுக்கும் உட்பட்டதாகும். அதாவது வளந்தோருக்கு மாத்திரமல்லாமல் சிறுவர்களிடமும் சுய ஊக்கல் காணப்படுகிறது. பிள்ளைகள் சிலர் பிறப்பிலேயே கற்றலில் ஊக்கலுள்ளவர்களாக இருக்கிறார்கள். அத்துடன் வயதில் கூடிய வளந்தவர்களும் வெளிக் காரணிகளின் காரணமாக ஊக்கலுக்குட்படும் சந்தர்ப்பங்களையும் காணக்கூடியதாகவுள்ளது என விமர்சிப்பவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

மேலும் நோலிஸ் குறிப்பிடுவது போல் வளர்ந்தவர்களின் கற்றல் பிரச்சினையை மையமாகக் கொண்டதென்றால் அல்லது அவர்களது கற்றல் இலக்கு சமூக வகிபாகத்தை விருத்தி செய்வதென்றால் ஊக்கலும் அதை மையமாக் கொண்டதாகவேயிருத்தல் வேண்டும். ஆனால் பிரச்சினையும், சமூக வகிபாகமும் வெளிவாரியான காரணிகள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது என ரெனன்ற் (Tennant 1988), ஜாவிஸ் (Javis) போன்றவர்கள் விமர்சிக்கின்றனர்.

பிள்ளைகள் தமது கற்றல் தொடர்பாகப் பெற்றோர்களையும், ஆசிரியர்களையும், வளந்தோர்களையும் நாடுவார்கள். ஆனால் வளந்தோர் தாமாகவே கற்றலில் ஈடுபடுவர். மற்றவர்களின் கருத்துக்களில் தங்கியிருக்காமல் தமது கற்றல் செயற்பாடுகளைத் தாமாகவே முகாமை செய்து கொள்வார்கள்.

வளந்தோரின் கற்றல் தொடர்பான அடிப்படை விடயமாகக் கருதப்படுவது அவர்கள் பிள்ளைகளைப் போல் பெற்றோரினதும், வளந்தோரினதும் வழிகாட்டலுக்கும், அழுத்தங்களுக்கும், கட்டுப்படுத்தல்களுக்கும் உட்படுவதில்லை என்பதாகும் என நோலிஸ் குறிப்பிடுகிறார். ஆனால் பின் கட்டிளமைப் பருவத்திலுள்ள பிள்ளைகளுக்குக் கூட பெற்றோரும், ஆசிரியர்களும் பல்வேறு கட்டுப்பாடுகளையும் அழுத்தங்களையும் பிரயோகிப்பதைக் காணமுடிகிறது என அவரை விமர்சிப்பவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

வளந்தோரினதும் இளையோரினதும் கற்கும் தன்மையை ஒப்பிட்டாராய்ந்தே மல்கம் நோலிஸ் தனது கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தார். வளந்தோர் கல்வி பற்றி அதிகமான அறிஞர்கள் கருத்துக்களைத் தெரிவித்திருந்த போதும் மல்கம் நோலிஸ் (Malcolm knowleds) முன்வைத்த கோட்பாடே (Anddragogy) பலராலும் வரவேற்கத்தக்கதாகவுள்ளது.

- இலங்கையில் ஆசிரிய கல்வியை வழங்கும் நிறுவனங்கள்

இலங்கையைப் பொறுத்த வரையில் ஆசிரிய சேவைக்கான முன் பயிற்சியைக் கல்விக் கல்லூரிகளும் சேவைக் காலப் பயிற்சியை ஆசிரிய பயற்சிக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் போன்றனவும்

வழங்குகின்றன. இவற்றில் கொழும்பு, பேராதனை, மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்கள் விசேட துறைகளில் ஆசிரியர்களின் அறிவைப் பெருக்குதற் பொருட்டு உயர் பட்டக் கற்கை நெறிகளை ஒழுங்கு- செய்து நடாத்துகின்றன.

கல்விமாணி (B.Ed), கல்வியில் முதுகலைமாணி (M.A in Ed), கல்வி முதுமாணி (M.Ed), விஞ்ஞானக் கல்வியில் முது விஞ்ஞானமாணி (MSc in Sc Ed) மற்றும் கல்வியில் தத்துவ மாணி (M.phil) கலாநிதி (PHD) என்பன போன்ற பட்டப் படிப்புகள் இவற்றில் அடங்குகின்றன.

திறந்த பல்கலைக்கழகம் ஆசிரிய கல்வியில் முதுகலைமாணிப் (M.A in T.Ed) பட்ட நெறியையும் நடாத்துவது குறிப்பிடத்தக்கது. அதே வேளை தேசிய கல்வி நிறுவகம் கல்விமாணி (B.Ed) கல்வியியல் முது மாணிப் பட்ட நெறிகளையும், கல்வியில் தத்துவ மாணிப் பட்ட நெறியையும் நடாத்துகிறது. கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் கல்வி முதுமாணிப் பட்டப் படிப்பு ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

பெரும்பாலும் ஆசிரிய சேவையிலிருக்கும் போதே இந் நிறுவனங்களில் ஆசிரியர்கள் இணைந்து கற்றுத் தமது உயர் பட்டங்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளிலும் தராதரப் பத்திரம் பெறாத ஆசிரியர்கள் சேவையிலிருக்கும்போதே இணைந்து ஆசிரிய பயிற்சியைப் பெற்றுத் தராதரப் பத்திரம் பெற்ற பயிற்சி ஆசிரியர்களாக வெளியேறு- கிறார்கள்.

கல்விக் கல்லூரிகளில் க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றவர்கள் இணைந்து "தேசிய கற்பித்தல் டிப்ளோமா" என்ற மூன்று வருட சேவை முன் ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தைப் பூர்த்தி செய்து கற்பித்தலில் தேசிய டிப்ளோமாச் சான்றி- தழுடன் ஆசிரிய தொகுதியினுள் இணைந்து கொள்- கிறார்கள். மேலும் தேசிய கல்விக் கல்லூரிகளில் உள் நுழையும் மாணவர்கள் பெரும்பாலும் 18-21க்கு இடைப்பட்ட வயதுத் தொகுதியையுடையவர்களாக- விருப்பார்கள் அவர்கள் தமது கற்கை நெறியைப் பூர்த்தி செய்து வெளியேறும்போது 21-24 வயதுக்கு இடைப்- பட்டவர்களாகவிருப்பார்கள்.

இவை அனைத்தும் வளந்தோர் கல்வியை வழங்கும் நிறுவனங்கள் என்பதால் இவை நிச்சயமாக வளந்- தோர் கல்விக் கோட்பாடுகளைப் பின்பற்ற வேண்டி- ஏது அவசியமானதாகும். ஆனால் இலங்கையில் பெருமளவு ஆசிரிய கல்வியை வழங்கும் நிறுவனங்- களில் பெரும்பாலும் வளந்தோர் கல்விக் கோட்பாடு- களைக் கவனத்திலெடுத்துத் தமது கற்றல் செயன்- முறைகளை நடாத்திச் செல்லும் தன்மை குறைவாக- வே அவதானிக்கப்படுகிறது. சிறப்பாக நாம் தேசிய கல்விக் கல்லூரிகளின் கற்றல் கற்பித்தல் செயன்- முறைகளை எடுத்து நோக்குவோம்.

- தேசிய கல்விக் கல்லூரிகள்

இந்த அடிப்படையில் கல்விக் கல்லூரிகளில் இடம்பெறும் கற்றல் கற்பித்தல் செயன்முறைகள் எந்தளவுக்கு வளந்தோர் கல்விக் கோட்பாடுகளைக் கருத்தில் கொள்கின்றன? என்பதை முதலில் நீஜல் முன்வைக்கும் கருத்துக்களின் அடிப்படையில் பார்த்தால் நீஜல் இனங்காணும் "தர்க்க நியாய செயற்பாட்டுச் சிந்தனை"ப் பருவத்தைக் கொண்ட- வர்களாகவே ஆசிரிய மாணவர்கள் உள்ளனர். இவர்- களிடம் ஆக்கத்திறன், விசாரணை, புதுமையாக்கம் போன்ற அம்சங்கள் உள்ளடங்கியுள்ளன. இவற்றை மேலும் விருத்தி செய்வதாகக் கல்விக் கல்லூரிகளின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இருந்த போதும் அவை போதுமானளவு அமைந்துள்ளன எனக் கொள்ள முடியாது.

பொதுவாக ஆசிரிய கல்வியை வழங்கும் நிறுவனங்- களில் பிரதான கற்பித்தல் முறையாக விரிவுரை முறையே காணப்படுகிறது. கற்பிப்பவர்கள் கூட விரிவுரையாளர்கள் என்றே அழைக்கப்படுகின்றனர். கல்விக் கல்லூரிகளைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு பாடநெறியிலும் பரந்த பாடப்பரப்புக்கள் காணப்படுகின்றன. இவற்றை வரையறுக்கப்பட்ட காலப்பகுதியினுள் பூர்த்தி செய்வதானால் கல்வியிய- லாளர்களுக்கு விரிவுரை நிகழ்த்துவதைத் தவிர வேறு மார்க்கங்கள் சிக்கல் நிறைந்ததாகவிருக்கும். ஆனால் கல்விக் கல்லூரிகளில் கல்வியியலாளர்கள் நிகழ்த்தும் விரிவுரை முறை ஆசிரிய மாணவர்களிடம் நீஜல் குறிப்பிடும் ஆக்கத்திறன், விசாரணை, புதுமையாக்- கம் போன்ற பண்புகளை விருத்தி செய்யப் போது- மானதாக இல்லை என்றே கூறுதல் வேண்டும். எனவே அவற்றை விருத்தி செய்யத் தக்க வகையிலான களச் செயற்பாடுகள், கண்காட்சி, கல்விச்சுற்றுலா போன்ற விடயங்களுக்குக் கல்வியியலாளர்கள் மேலும் கூடியளவு முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும்.

அடுத்ததாக ஸ்கயர்சின் கருத்துப்படி பார்த்தால்கூட ஆசிரிய மாணவர்கள் அவர்களது கல்லூரிக் காலத்தில் பல்வேறு மாற்றங்களுக்கு முகம் கொடுத்துச் செயலாற்றும் சந்தர்ப்பங்கள் ஏற்படும். அதேவேளை பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். இதன் காரணமாக அவர்கள் சிந்திப்பதற்கும் பிரச்சினை தீர்ப்பதற்கும் உபாயங்களை வகுக்க வேண்டிய தேவையும் ஏற்படும்.

கல்விக் கல்லூரிகளில் ஆசிரிய மாணவர்களுக்கு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் போது ஒப்படை, செயற்றிட்டம், தனியாள் ஆய்வு, என்பவற்றினூடாகப் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் அவர்களுக்கு சிந்திப்பதற்கும் பிரச்சினை

தீர்ப்பதற்கும் உபாயங்களை வகுப்பதற்கும் சந்தர்ப்பங்கள் கிட்டுகின்றன. ஆசிரிய மாணவர்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயற்சிக்கும் இச் சந்தர்ப்பங்களில் கல்வியியலாளர்கள் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளைத் தாமே முன்வைக்காமல் அவர்களையே சுயமாகத் தீர்க்கச் செய்வதற்கு ஊக்குவிக்கும் செயற்பாடுகளை மேலும் அதிகமாகச் செய்தல் வேண்டும்.

ஆசிரிய மாணவர்களை சுதந்திரமாகவும் எவ்வித கட்டுப்படுத்தல்களுமின்றிக் கற்பதற்கு ஊக்குவிக்க வேண்டும். இதன் மூலம் அவர்களை சுயமாகப் பிரச்சினைகளை இனங்காணச் செய்து அது தொடர்பான தகவல்களைச் சரியான தகவல் சேகரிப்பு முறைகளைப் பயன்படுத்திச் சேகரிக்கச் செய்து, அவற்றை முறைப்படி பகுப்பாய்வுக்குட்படுத்திப் பெற்றுக் கொண்ட தீர்வினைப் பயன்படுத்தும் அல்லது பொதுமைப்படுத்தும் திறனைப் பெற்றுக் கொள்ளச் செய்யலாம் என ரெனன்ற், ஜாரிஸ், நொக்ஸ், வுறொக்பீல்ட் போன்றவர்கள் குறிப்பிடுகின்றனர்.

கல்விக் கல்லூரிகளில் இவ்வாறான திறன்களைப் பெறுவதற்குரிய சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன. குறிப்பாகக் கட்டுறு பயில்வின்போது ஆசிரிய மாணவர்கள் செயல்சார் ஆய்வில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். ஆனால் செயல்நிலை ஆய்வு தொடர்பாக ஆய்வு மேற்கொள்வதிலும் அறிக்கை எழுதுவதிலும் கல்லூரிகளுக்கிடையில் பல முரண்பாடுகள் காணப்படுகின்றன. எனவே இவ் முரண்பாடுகள் தீர்க்கப்பட்டு செயல்நிலை ஆய்வு தொடர்பான போதுமான விளக்கங்கள் மாணவர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும். அதுவும் செய்நிலை ஆய்வினை மேற்கொள்ளக் கட்டுறு பயில்வு வரை காத்திராமல் கல்லூரியில் கற்கும் முதல் இரு வருடங்களிலும் கூட செயல்நிலை ஆய்வில் பரிச்சயத்தை ஏற்படுத்தலாம். அதேபோல் ரெனன்ற், ஜாரிஸ், நொக்ஸ், வுறொக்பீல்ட் போன்றவர்கள் குறிப்பிடுவதுபோல் ஆசிரிய மாணவர்களைச் சுதந்திரமாகவும் எவ்வித கட்டுப்படுத்தல்களுமின்றிக் கற்பதற்கு மேலும் ஊக்குவித்தல் வேண்டும். அது தவிர அவர்கள் குறிப்பிடுவதுபோல் மாணவர்களையே சுயமாகப் பிரச்சினைகளை இனங்காணச் செய்து அது தொடர்பான தகவல்களைச் சரியான தகவல் சேகரிப்பு முறைகளைப் பயன்படுத்திச் சேகரிக்கச் செய்து, அவற்றை முறைப்படி பகுப்பாய்வுக்குட்படுத்திப் பெற்றுக் கொண்ட தீர்வினைப் பயன்படுத்த அல்லது பொதுமைப்படுத்தச் செய்வதில் மேலும் கூடிய அக்கறை காட்டுதல் வேண்டும்.

அடுத்ததாக ஹால் ரொஜர்ஸ் குறிப்பிடுவது போல் ஆசிரிய மாணவர்களைச் சுய ஈடுபாட்டுடன் இயங்கச் செய்வதற்குரிய சந்தர்ப்பங்கள் கல்விக் கல்லூரிகளில் வழங்கப்படுகின்றன. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் போதும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் போதும் இச் சந்தர்ப்பங்கள் அதிகம் வழங்கப்படுகின்றன. உடற்பயிற்சி, காலைக்கூட்டம், சமய அனுஸ்டானங்கள், விளையாட்டு நிகழ்ச்சிகள், கலைநிகழ்ச்சிகள், சரஸ்வதிப்பூசை, ஒளிவிழா, மீலாத்விழா போன்ற சமய விழாக்கள், கல்லூரி தின விழா, சஞ்சிகை வெளியீடுகள் போன்றவற்றில் அவர்களுக்குத் தலைமைத்துவச் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டு அவர்களே சுய ஈடுபாட்டுடன் நிகழ்வுகளை ஒழுங்கமைத்துச் செயற்படுத்தச் சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன.

இது தவிர கல்வியியலாளர்கள் அவர்களுக்கு நூலறிவை விட அனுபவக் கற்றலுக்குக் கூடுதலான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். இதற்காக கற்பித்தல் பயிற்சிக் காலத்தைச் சிறப்பாகப் பயன்படுத்த முடியும். கற்பித்தல் பயிற்சியின் போது

ஆசிரிய மாணவர்களை சுதந்திரமாகவும் எவ்வித கட்டுப்படுத்தல்களுமின்றிக் கற்பதற்கு ஊக்குவிக்க வேண்டும். இதன் மூலம் அவர்களை சுயமாகப் பிரச்சினைகளை இனங்காணச் செய்து அது தொடர்பான தகவல்களைச் சரியான தகவல் சேகரிப்பு முறைகளைப் பயன்படுத்திச் சேகரிக்கச் செய்தல்.

ஆசிரிய மாணவர்களைக் கூடுதலாகப் பாடத்திட்டங்களினுள்ளும், பாடக்குறிப்புகளினுள்ளும் கட்டுப்படுத்தாமல் வகுப்பறையிலுள்ள மாணவர்களின் பலம், பலவீனமறிந்து அவர்களிடையேயான தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு அதற்கேற்ப சுய புலக்காட்சி பெற்று அப் புலக்காட்சிக்கேற்ப பாடவிடயங்களைச் சுயமாக ஒழுங்கமைத்துக் கற்பிப்பதற்குக் கூடியளவு சந்தர்ப்பம் வழங்குதல் வேண்டும். அப்போதுதான் ஹால் ரொஜர்ஸ் குறிப்பிடும் அனுபவக் கற்றல் ஆசிரிய மாணவனுள்ளே ஏற்பட இடமுண்டு. கல்வியியலாளர்கள் கூடுமானவரை தமது திணிப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். மேற்பார்வையையும் பிழை பிடிப்பது என்பதற்கப்பால் உதவி செய்யும் வகையில் அல்லது வசதி செய்யும் வகையில் மேற்கொள்ளுதல் வேண்டும். ஆசிரிய மாணவனுக்கு மேற்பார்வையாளர் தொடர்பாக அச்சம் ஏற்படாவிட்டால்தான் ஹால் ரொஜர்ஸ் குறிப்பிடுவது போல் அவன் சுயாதீனமாகக் கற்றுக் கொள்ளச் சந்தர்ப்பம் ஏற்படும். அத்துடன் அவன் கற்பித்து முடித்தவுடன் அவனது கற்பித்தல் தொடர்பாக அவனுக்குச் சுய விமர்சனத்திற்கும், சுய மதிப்பீட்டிற்கும் சந்தர்ப்பம் வழங்குதல் வேண்டும். அப்போதுதான் அவனுள் சுதந்திரம், ஆக்கம், சுய நம்பிக்கை என்பன இலகுவாக விருத்தி பெறும்.

மல்கம் நோலிஸ் தொடர்பாக எத்தகைய விமர்சனங்கள் இருந்தாலும் அவர் வளந்தோர் கல்வி தொடர்பாக வெளிப்படுத்திய கருத்துக்கள் பெறுமதிமிக்கவையாகும். ஏனெனில் அவர் வளந்தோர் கல்வி தொடர்பாக மிக முக்கியமான உளவியல் காரணிகளை இனங்கண்டுள்ளார் குறிப்பாக அனுப்வங்கள், திசைமுகம், ஆயத்தம், ஊக்கல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இக் கருத்துக்கள் எந்தளவிற்குக் கல்விக் கல்லூரிகளின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கு உதவுகின்றன என சற்று விரிவாகப் பார்ப்போம்

- சுயகற்றலினூடாக சுய எண்ணக்கருவினை விருத்தி செய்து கொள்ளல்.

சுயகற்றலினூடாக சுய எண்ணக்கருவினை விருத்தி செய்து கொள்ளல் என்பது ஒரே தடவையிலோ அல்லது இலகுவாகவோ இடம்பெறக்கூடிய ஒரு விடயமன்று. விசேடமாக இலங்கையிலுள்ள ஆசிரிய மாணவர்களை எடுத்தாராய்ந்தால் இது மிகவும் சிரமமான ஒரு செயன்முறையாக அமைவதை அவதானிக்க முடிகிறது.

உதாரணமாகக் கல்விக் கல்லூரிகளுக்கு நுழையும் மாணவர்கள் க.பொத உயர்தரத்தில் ஆகக் குறைந்தது இரண்டு வருடங்கள் மிகுந்த மன அழுத்தங்களுக்குட்பட்டு க.பொ.த உயரத்தரப் பரீட்சையில் நன்கு சித்தியடைந்த பின்னரேயே கல்விக் கல்லூரிகளுக்கு நுழைகிறார்கள். அதாவது பாடசாலைகளிலும், பிரத்தியேக வகுப்புக்களிலும் கற்று மிகுந்த போட்டிக்கு மத்தியிலேலேயே பரீட்சையில் சித்தியடைகின்றனர்.

பெற்றோர்கள், வளந்தவர்களின் அழுத்தங்களும், வற்புறுத்தல்களும், கட்டுப்பாடுகளும், எதிர்பார்ப்புகளும் இவர்களைப் பல்வேறு மன அழுத்தங்களுக்கு உட்படுத்தியிருக்கும். இவை அவர்களது சுய எண்ணக்கரு விருத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளாகும். அதாவது பல்வேறு மன அழுத்தங்களுக்குட்பட்டே இத்தகைய மாணவர்கள் கல்விக் கல்லூரிகளுக்குள் நுழைகிறார்கள்.

குறிப்பாகக் கல்விக் கல்லூரிகளில் ஆசிரிய மாணவர்கள் தொழில் சார் பாடங்களையும், சிறப்புப் பாடங்களையும் மனனம் செய்து பரீட்சைகளில் சித்தியடைவதையே நோக்காகக் கொண்டுள்ளனர். அந் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் ஆசிரிய கல்வியியலாளர்களும் விரிவுரைகளை நிகழ்த்துகிறார்கள். ஆனால் இவ் விரிவுரைகளால் அவர்களது மன அழுத்தங்கள் குறைவடையும் என்று கூற முடியாது. எனவே ஆசிரிய மாணவர்களுள் சுய எண்ணக்கரு விருத்தியினை ஏற்படுத்துவதானால் ஆசிரிய கல்வியியலாளர்கள் தமது கற்பித்தல் முறைகளில் நவீனத்தைப் புகுத்துதல் அவசியமானதாகும். கற்பித்தல் அணுகுமுறைகளையும் கற்பித்தல் முறையியல்களையும் கற்றலை இலகுபடுத்துதல்களுக்காகவும், சாத்தியப்படுத்துதல்களுக்காகவும், உதவியளிப்பதற்காகவும் மாற்றியமைத்தல் வேண்டும். உதாரணமாக விரிவுரை நிழ்த்தும்போது கூடுமானவரை பல்லூடக எறிவை, கணினி, போன்ற நவீன சாதனங்களையும் இணையம் போன்ற வசதிகளையும் பயன்படுத்தலாம். அல்லது கல்லூரி நூல் நிலையம், பொது நூல் நிலையம், நூதனசாலை, போன்றவற்றில் மேலும் அதிகளவில் அவர்களைக் குறிப்பிட்ட தலைப்புகளின் கீழ் தேடும்படி ஊக்குவிக்கலாம்.

இதன் மூலம் அவர்களது சுய எண்ணக்கரு, விருத்தி பெற அதிக வாய்ப்புக் கிட்டும். அது தவிர அருகிலுள்ள பாடசாலை மாணவர்களைக் கல்லூரிக்கு அழைத்து வந்து மேற்கொள்ளும் மாதிரி வகுப்புகளை அடிக்கடி மேற்கொள்ளச் செய்து சுய அனுபவங்களையும், சுய ஈடுபாட்டையும் அதன் மூலம் சுய எண்ணக்கரு விருத்தியையும் ஏற்படுத்தலாம்.

அத்துடன் இச் செயற்பாடுகள் மூலம் கல்விக் கல்லூரிகளுக்கு ஆசிரிய மாணவர்களை உள்வாங்குவதில் பாரிய மாற்றங்களை எதிர்நோக்கும் இக் கால கட்டத்தில்கூட கல்விக் கல்லூரிகளில் விரிவுரை சார்ந்த பழைய கற்பித்தல் முறைமைகளே பின்பற்றப்படுகின்றன என்ற கல்வி சார் ஆய்வாளர்களால் தெரிவிக்கப்படும் விமர்சனம் சார்ந்த குற்றச்சாட்டுக்களையும் தவிர்த்துக் கொள்ள முடியும்.

2. பெற்றுக் கொள்ளப்படும் அனுபவங்கள் கற்றலுக்கான சிறந்த வளமாகக்காணப்படுதல்

பாடசாலைத் தொகுதியில் 12-13 வருடங்கள் பெற்ற அனுபவத் தொகுப்பு ஆசிரிய மாணவர்களிடம் காணப்படும். அவர்கள் பல பாடசாலைகளில் பல்வேறு ஆளுமையையும், குணப்பண்புகளையும் கொண்ட ஆசிரியர்களிடம் அனுபவங்களைப் பெற்றிருப்பார்கள். ஒரு புறம் ஆசிரியர் தொடர்பாக மிகவும் உயர்ந்த எண்ணமும், அதிக விருப்பமும் , தொடர்ச்சியான உறவும் கொண்டிருப்பர். அதே வேளை சில ஆசிரியர்கள் தொடர்பாக விருப்பமின்மையையும், எதிரான மனப்பான்மையையும் கொண்டிருப்பர். சிலரை எப்போதும் நினைவில் வைத்திருப்பர். சிலரை மறக்க முயற்சிப்பர் சிலரை முன்மாதிரியாகக் கொண்டு தமது நடத்தைகளை அவரது நடத்தைகளைப் போல் மாற்றியமைக்க முயற்சிப்பர்.

எனவே மாணவர்களுக்கு பல்வேறு கற்றல் அனுபவங்கள், பல்வேறு கற்றல் சூழல், கற்றல் அடைவுகளில் சாதக, பாதக சந்தர்ப்பங்கள் அமைந்திருக்கும். இவ் அனுபவங்கள் அவர்களின் தற்காலக் கற்றலுக்கான சிறந்த வளமாகக் காணப்படும். இதனை ஆசிரிய கல்வியியலாளர்கள் கவனத்திலெடுத்து அவர்களது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேலும் சாத்தியப்படுத்துதல் வேண்டும். இதற்காக அவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட முடியும். வினாக்கொத்-

துக்கள், செவ்விகாணல் என்பவற்றினூடாக அவர்களது அனுபவம் சார்ந்த தகவல்களைப் பெற்று அவற்றைக் கோவைப்படுத்தி அதற்கேற்ப கற்பித்தலைத் திட்டமிட முடியும். ஏனெனில் அனைத்து ஆசிரிய மாணவர்களும் தமது பாடசாலைக் காலங்களில் ஒரே விதமான அனுபவங்களைப் பெற்றிருக்க மாட்டார்கள்.

வகுப்பறையில் நிகழும் பல்வேறு செயற்பாடுகளின் போது முன்வருதல், சுய நம்பிக்கையுடன் செயற்படுதல், ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடுதல், மொழிசார் தொடர்பாடல்களில் சுயமாகப் பங்குபற்றுதல் போன்றவை அவர்கள் பாடசாலைக் காலங்களில் பெற்ற அனுபவங்களின் அடிப்படைகளிலேயே அமைந்ததாகவிருக்கும். இதற்காக ஆசிரிய கல்வியியலாளர்கள் செயல்நிலை ஆய்வுகளை மேற்கொள்ளல் அதிகவிளைதிறன்மிக்கதாக அமையும்.

கல்விக் கல்லூரிகளில் நுழையும் ஆசிரிய மாணவர்கள் பின் கட்டிளமைப் பருவத்தைக் கடந்தவர்களாவர். அவர்களது அறிவு, ஆற்றல்கள் உயர்மட்டத்தில் இருக்கும். அறிவைத் தேடும் ஆர்வமும் அவர்களிடம் உள்ளடங்கிக் காணப்படும். அவர்களது கற்றலுக்கான ஆயத்தநிலை மிகுந்த உயர்மட்டத்திலிருக்கும். அதேவேளை விடுதியுடன் கூடிய கற்றலில் அவர்கள் ஈடுபட்டிருப்பதால் அவர்களின் பிரதான செயற்பாடு கற்றலைத் தவிர வேறொன்றாக இருக்க முடியாது. இதனால் மேலும் மேலும் புதிய, புதிய விடயங்களைக் கற்றுக் கொள்வது அவர்களுக்கு முன்னுள்ள சவாலாகும். அதற்கேற்ப புதிய, புதிய விடயங்களை வழங்குவதற்குக் கல்விக் கல்லூரி தயாராக இருத்தல் வேண்டும்.

கல்விக் கல்லூரிகளிலுள்ள பெரும்பாலான மாணவர்களுக்குக் கற்றல் தொடர்பான ஆர்வமும் ஊக்கலும் காணப்படும் அதேவேளை அவர்களில் ஒரு சிலர் தமது எதிர்காலத் தொழிலாக ஆசிரியத் தொழிலைத் தெரிவு செய்யாதவர்களாக இருக்கலாம். வேறு மார்க்கங்கள் இல்லாததால் இதனைத் தெரிந்தவர்களாகவும் இருக்கலாம். ஆனால் ஆசிரிய கல்வியியலாளர்களின் கடமையாவது அவர்களை ஆசிரியத் தொழிலின்பால் ஊக்குவிப்பதுடன் அத் தொழிலுக்குத் தேவையான அறிவு ஆற்றல்களைத் தேடுவதற்குரிய ஊக்கலை ஏற்படுத்தத்தக்க கற்றல் சூழ்நிலைகளை ஒழுங்கு செய்து வழங்குவதுமாக இருத்தல் வேண்டும்.

3. சமூக வகிபாகத்தைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான வகையில் கற்றலுக்கு ஆயத்தமாதல்

கல்விக் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் எதிர்கால ஆசிரியத் தொழிலுக்குத் தங்களை உட்படுத்துபவர்களாவர். தமது பாடநெறிகளைத் திருப்தியாகப் பூர்த்தி செய்த பின்னர் உறுதியாக அவர்களுக்கு ஆசிரியத் தொழில் கிடைக்கும். அதேவேளை பல்வேறு சமூக, கல்வி, பொதுசன வகிபாகங்களை அவர்கள் ஏற்கவுள்ளனர் இவ் எதிர்கால எதிர்பார்ப்புகள் அவர்களது கற்றலுக்கான ஆயத்தத்தை வழங்குகின்றன. அவர்களது கற்கைக் காலம் முழுவதும் தொடர்ச்சியாக இவ் ஆர்வத்தையும் ஆயத்தத்தையும் ஆசிரிய கல்வியியலாளர்கள் ஊக்கப்படுத்துதல் வேண்டும்.

ஆசிரிய மாணவர்கள் தொடர்பாக வகைகூறக்கூடியவர்களிலும், நிறுவன உட்கட்டமைப்பிலும் தடுமாற்றம், தரம் குறைதல், எதிர்பார்ப்பை நிறைவேற்றாமல் ஏமாற்றும் தன்மை, ஒழுக்கச் சீர்கேடு போன்றவை காணப்பட்டால் அவை ஆசிரிய மாணவர்களின் ஊக்கலில் பாதிப்பை ஏற்படுத்தும்.

4. வளந்தோருக்குக் கற்றலில் பிரச்சினையை மையமாகக் கொண்ட திசைமுகம் காணப்படுதல்

வளந்தவர்கள் கற்றலில் ஈடுபடும் போது இளையவர்-

> கல்விக் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் எதிர்கால ஆசிரியத் தொழிலுக்குத் தங்களை உட்படுத்துபவர்களாவர். தமது பாடநெறிகளைத் திருப்தியாகப் பூர்த்தி செய்த பின்னர் உறுதியாக அவர்களுக்கு ஆசிரியத் தொழில் கிடைக்கும்.

களை விட அதிகமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். முன் வளந்தோர் பருவத்தைச் சார்ந்த இவ் ஆசிரிய மாணவர்களைப் பிரச்சினையினூடாகக் கற்றலில் ஈடுபடும் குழுவினர் என இனங்காணமுடியும். அது தவிர இவர்களுக்குக் கற்றலில் சவாலை ஏற்படுத்தக்கூடிய பல்வேறு பிரச்சினைகளைக் கல்வியியலாளர்கள் வழங்குதல் வேண்டும். அப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமுகமாக அவர்களைத் தனியாகவும் குழுவாகவும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல் வேண்டும். பல தனியாள், குழு ஆய்வுக்குரிய பிரச்சினைகளை வழங்குவதன் மூலம் இதனை இலகுவாகச் சாத்தியப்படுத்தலாம்.

5. வளந்தோரிடம் சுய ஊக்கல் காணப்படுதல்

தேசிய கல்விக் கல்லூரிகளில் கல்வி கற்கும் மாணவர்கள் வளந்தோரில் உட்படுத்தக்கூடியவர்களாவர். அவர்கள் பாடசாலைக் கல்வியை முடித்து வயது அடிப்படையில் வளந்தோர் வயதெல்லையில் உள்ளடங்குபவர்களாகவுள்ளனர். அவர்கள் கட்டிளமைப் பருவத்தைக் கடந்தவர்களாவர். பாடசாலைக் கல்வியைச் சிறப்பாக முடித்த அவர்கள் ஆசிரியத் தொழிலுக்குத் தம்மைத் தயார்ப்படுத்துவதற்காகக் கற்றலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது நோக்கம் எதிர்காலத்தில் ஆசிரியத் தொழிலைப்

பெற்றுக் கொள்வதாகும். அவர்கள் ஓரிரு புள்ளிகளால் பல்கலைக்கழக வாய்ப்பை இழந்தவர்களாவர்.

கல்விக் கல்லூரிக்கு நுழைவதற்காக அவர்கள் எடுத்த தீர்மானம் தேவை கருதி எடுக்கப்பட்டதாகும். அவர்களுக்குக் கல்வி தொடர்பான அகவூக்கல் காணப்படுகிறது. இவ்வகவூக்கல் வெளிவாரியான அழுத்தங்களால் ஏற்பட்டிருக்க முடியாது. இது உள்ளார்ந்த ரீதியாகவே ஏற்பட்டிருக்கும். இல்லையேல் அவர்கள் ஆசிரிய சேவையை இலக்காகக் கொண்டு மூன்று வருட காலங்கள் கற்றலிலும் பயிற்சியில் ஈடுபடுவதற்கு உடன்பட்டிருக்கமாட்டார்கள்.

இத்தகைய ஆசிரிய மாணவர்கள் கல்விக் கல்லூரிக்கு நுழையும் முதலாவது தினம் அல்லது முதல் ஓரிரு வாரங்கள் அவர்களது கற்றல் செயற்பாடுகளில் பாதிப்புக்கள் ஏற்படலாம். ஏனெனில்,

- வீட்டிலிருந்த பிரிந்து வந்தமை.
- மனவியாகூலம்,
- வேறு மனவெழுச்சித் தாக்கங்கள்.
- புதிய சமூக பௌதீக சுற்றாடலை இயைபாக்கிக் கொள்வதில் சிரமம்.

என்பன போன்ற காரணங்களால் கற்பதற்கான கவனம் கலைய அல்லது ஆர்வம் குறைய இடமுண்டு. இச் சந்தர்ப்பங்களில் ஆசிரிய கல்வியியலாளர்கள் இவ்வாறான முன் வளந்தோர் வயதிலுள்ள மாணவர்களைப் பாதுகாத்து அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி அவர்களது கற்றலை இலகுவாக்க மேற்கொள்ள வேண்டிய அனைத்தையும் செய்தல் வேண்டும். அப்போதுதான் அவர்கள் யதார்த்த சூழ்நிலைக்குத் தம்மை இயைபாக்கிக் கொள்வார்கள்.

ஆசிரிய பயிலுனர்கள் நிரந்தரமான விடுதியுடன்கூடிய கற்கை நெறியைப் பின்பற்றுபவர்களாக இருப்பதால் அவர்களில் சிலர் பெற்றோருடனும், வீட்டிலுள்ள வளந்தோருடனும் சகோதர சகோதரிகளுடனும் நெருக்கமான பிணைப்புக் கொண்டவர்களாகவிருப்பார்கள். அனேகமான சந்தர்ப்பங்களில் குறிப்பாக வார இறுதி நாட்களில் இவர்கள் வீட்டுக்குச் செல்வதற்கு அனுமதி கேட்டு நிற்பார்கள். எனினும் இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டு அவர்கள் வீடு சென்று வந்தாலும் அது அவர்களின் கற்றலில் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தாது. ஏனெனில் அவர்கள் இயல்பாகவே கற்றலில் ஊக்கலுள்ளவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.


நீண்ட நாட்கள் தமது உறவினர்களைச் சந்திக்க வாய்ப்புக் கிட்டாத மாணவர்கள் மன அழுத்தங்களுக்குட்படும் சந்தர்ப்பங்களும் ஏற்படலாம். இச் சந்தர்ப்பங்களில் கல்வியியலாளர்களால் அவர்களுக்குத் தேவையான அன்பும், பாதுகாப்பும், வழிகாட்டல் ஆலோசனைகளும் வழங்கப்படுதல் வேண்டும். கல்விச் சுற்றுலா, கல்லூரிச் சுற்றாடலில் வெளிக்களப் பயணம், விளையாட்டு, கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றை ஏற்பாடு செய்வதன் மூலம் அவர்களது மன அழுத்தத்தைக் குறைக்க முடியும்.

கல்விக் கல்லூரிகளில் கல்வி கற்கும் வளந்தோர் பகுதியினுள் அடங்கும் ஆசிரிய மாணவர்கள் சமூக, அரசியல், பொதுசன நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்கு அதிகம் விரும்புவர். கல்லூரிக்கு உள்ளேயும் வெளியேயும் ஏனையவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளவும் விரும்புவர். அத்துடன் பால் கவர்ச்சிக்குட்பட்டுத் தமக்குரிய துணையைத் தெரிவு செய்யவும் தங்களிடையிலான தனிப்பட்ட உறவுகளை வளர்த்துக் கொள்ளவும் தூண்டப்படுவர். எனினும் முழுநேர விடுதியுடன் கூடிய கற்றல் முறைமையினுள் உள்ளடங்கியுள்ள இவர்களின் சுதந்திரம் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகும்.

கடுமையான கல்லூரிச் சட்டதிட்டங்களுக்கும், ஒழுக்கக்கோவைக்கும் ஆட்பட்டு நடக்க வேண்டிய கட்டாய தேவை இவர்களுக்குண்டு. எனினும் இவர்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுக்கும் தார்மீகக் கடமைகளை ஆசிரிய கல்வியியலாளர்களும், கல்லூரி நிர்வாகமும் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். இதனைப் பாடவிதானத்தினூடாகவும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளினூடாகவும், வழிகாட்டல் ஆலோசனைகளினூடாகவும் சாத்தியப்படுத்த முடியும். கற்றல் கற்பித்தலுக்காகக் குழுச் செயற்பாடுகளையும் ஏற்பாடு செய்து கொடுத்தலும் நன்மை பயக்கும்.

சுருக்கமாகப் பார்த்தால் கல்விக் கல்லூரிகளில் வளந்தோர் கல்விக் கோட்பாடுகள் பின்பற்றப்பட்டாலும் கடுமையான கல்லூரிச் சட்டதிட்டங்களும், ஒழுக்கக்கோவைகளும் மாணவர்களின் சுய ஊக்கலையும், சுய ஈடுபாட்டையும், சுய எண்ணக்கரு விருத்தியையும் வளர்ப்பதில் பல்வேறு தடைகளை ஏற்படுத்துகின்றன என்றே கூறுதல் வேண்டும் . எனவே அச் சட்டதிட்டங்களையும் ஒழுக்கக் கோவைகளையும் வளந்தோர் கல்விக் கோட்பாடுகளுக்கமைவாக நெகிழ்ச்சியடையச் செய்தல் வேண்டும்.

தற்போது கல்விக் கல்லூரிகளுக்கு மாணவர்களை உள்வாங்குவதிலும் கற்றல் கற்பித்தல் செயன்முறை ஒழுங்கமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வருவதிலும் கவனம் செலுத்தப்படுகிறது. இதன் காரணமாக எதிர்காலத்தில் கல்விக் கல்லூரிகளின் கல்வி சார் நடைமுறைகள் வளந்தோர் கல்விக் கோட்பாடுகளுக்கமைய முற்றாக மாற்றியமைக்கப்படுவதற்குரிய சாத்தியக்கூறுகள் மிக அதிகமாகக் காணப்படுகின்றன. இதனால் கல்விக் கல்லூரிகள் இதுவரை காலமும் இருந்ததைவிட இனிவரும் காலங்களில் அதிக வகைகூறும் தன்மை கொண்டவைகளாகத் தம்மை மாற்றியமைத்துக் கொள்வது மிகவும் இன்றியமையாததாகும்.






**சபா.ஜெயராசா,**

முன்னாள் பேராசிரியர்,
கல்வியியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.


சிறப்புப் கட்டுரை

குறிப்பிட்ட சமூகத்தில் வாழும் மக்களின் பழக்க வழக்கங்களின் கூட்டுமொத்தத் திரட்டலாகப் பண்பாடு அமைகின்றது. அதனை அடியொற்றியே மனித நடத்தைகள் நெறிப்படுத்தப்படுகின்றன.

# பண்பாடும் சீர்மியமும்

பண்பாட்டுக்கும் சீர்மியத்துக்குமிடையே நேரடியான இணைப்புக்கள் உள்ளன. பண்பாட்டு விசைகளோடு இசைவு படாத நிலை ஒருவரின் உளச்சமநிலையிலே தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. சமூகவாழ்வின் பொருண்மியத்தளத்தின் மீது பண்பாடு மனிதரால் உருவாக்கம் பெறுகின்றது. "குறிப்பிட்ட சமூகக் குழுவினரது வாழ்க்கை முறைமை" என்றும் பண்பாடு குறிப்பிடப்படும். அது மரபணுக்கள் வழியாகக் கையளிக்கப்படுதல் இல்லை கற்றலின் வழியாக முன்னெடுக்கப்படுகின்றது. கற்றுக் கொள்ளப்படுகின்றது. அதன் வழி இசைந்து செல்ல முடியாதவிடத்து ஏற்படும் நெருக்கடிகள் சீர்மியத்தின் தேவையை வலியுறுத்துகின்றன.

பொதுப்பண்பாடு, தனித்துவமான பண்பாடு (Unique Culture) என்ற இரு பிரிவுகளை ஆய்வாளர் முன்மொழிகின்றனர். பொதுப்பண்பாடு என்பது மனிதர் அனைவருக்கும் பொதுவான அகிலப் பண்புகொண்டது. குறித்த சமூகத்துக்கு மட்டுமுரிய இயல்புகளைக் கொண்டது தனித்துவமான பண்பாடு. வேலைப்புல ஆய்வாளரினால் பண்பாட்டுக்குத்தரப்படும் பொதுவான விளக்கங்கள் பின்வருமாறு அமையும்.

1. குறிப்பிட்ட சமூகத்தில் வாழும் மக்களின் பழக்க வழக்கங்களின் கூட்டுமொத்தத் திரட்டலாகப் பண்பாடு அமைகின்றது. அதனை அடியொற்றியே மனித நடத்தைகள் நெறிப்படுத்தப்படுகின்றன.
2. சமூகச் செயல்முறையின் வழியாகக் காலங்காலமாகக் கையளிக்கப்பட்டுவரும் பெறுமானங்கள் பண்பாடாகத் திரண்டுள்ளன. அவற்றோடு இணங்க முடியாமை பண்பாடு சார்ந்த நெருக்கீடு (Cultural stress) ஆகின்றது.
3. பண்பாடு என்பது வாழ்க்கை முறைமையாகவும் வாழ்க்கைகுரிய வடிவமைப்பாகவும். (Design for Living) வரையறை செய்யப்படுகின்றது. குறிப்பிட்ட வடிவமைப்பில் உள்ளமைந்த எதிர்விசைகளின் தாக்கங்களைச் சந்திக்க நேரிடும் பொழுது ஆற்றுப்படுத்தலும், சீர்மியமும் வேண்டப்படுகின்றன.
4. பண்பாட்டைக் குறிப்பிட்ட சமூகத்தின் சிந்தனை முறைமை, மொழியாட்சி, கருவிக்கையாட்சி முதலியவற்றுடன் தொடர்புபடுத்தி விளக்கும் அணுகுமுறைகளும் உள்ளன. சமூகத்தின் பொதுச்சிந்தனை முறைமையிலிருந்து ஒருவர்

விலகிச் செல்லும் போது சீர்மியத்தின் தேவை உணரப்படுகின்றது அல்லது உணர்த்தப்படுகின்றது.

5. பண்பாடு என்பதைப் பண்டங்களின் தொகுதியாகவும், அறிவின் தொகுதியாகவும் கருதும் வரைவிலங்கணங்களும் உள. அதன் அடிப்படையாக உயிரியல் தேவைகளும் சமூகத் தேவைகளும் நிறைவேற்றப்படுகின்றன. அவற்றை நிறைவேற்றிக் கொள்ள முடியாதவிடத்துத் தோற்றம் பெறும் நெருக்கீடுகள் உளவியல் ஆதரவை வேண்டிநிற்கின்றன.

6. ஒன்றுக்கு ஒன்று தொடர்புடைய தொழிற்பாடுகளினதும், மரபுகளினதும் ஒழுங்கமைப்பாகப் பண்பாட்டைக் கருதும் வரைவிலக்கணங்களும் உள. அதன் வழியாக மனித இடைவினைகளின் (Interactions) தொகுதியாகப் பண்பாடு இனங்காணப்படுகின்றது. இடைவினைகளின் முரண்விசைகளைச் சீராக்கிக் கொள்வதற்குச் சீர்மியத்தால் உதவமுடியும் என்று கருதப்படுகின்றது.

7. பண்பாடு என்பதை மக்களின் அறிவுத்தொகுதி, கலை இலக்கியங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், சட்டங்கள், பழக்கவழக்கங்கள் அறவொழுங்குகள், நடை உடை பாவனை முதலிய அனைத்தினதும் கூட்டுமொத்தமாக விளக்கும் பொழுது இப்பெருந்தொகுதியின் எதிர் மறைப்பாங்குகள் சமூகப் பிணியையும் தோற்றுவிக்கலாம். அந்நிலையில் சமூகச் சீர்மியமும், தனிமனித சீர்மியமும் தேவையென எழுச்சி கொள்ளுகின்றன.

பொருள் சார் இணைப்புக்கள், அறிகை சார் இணைப்புக்கள் மற்றும் நெறியமைவு இணைப்புக்கள் (Normative Components) ஆகியவற்றின் தொகுதியாகப் பண்பாடு கட்டமைப்புச் செய்யப்பட்டிருக்கும் மனிதரால் உருவாக்கப்பட்ட அனைத்துப் பொருள்களும், சாதனங்களும் பொருள்சார் இணைப்பில் உள்ளடங்கும். மக்களின் அனைத்து அறிவுகளினதும், கருத்தியலினதும் தொகுதியாக அறிகை சார் இணைப்புக்கள் விளங்கும். வரன்முறைப்படுத்தல்கள், விழுமியங்கள், வழக்காறுகள், மரபுகள், ஒழுக்க நியமங்கள் முதலியவை நெறியமைவு இணைப்புக்களில் இடம் பெறும்.

இலட்சிய நிலைப்பண்பாடு (Ideal Culture) உறுநேர்வுப் பண்பாடு (Real Culture) என்றவாறு பண்பாடுவகைப்படுத்தப்படுதல் உண்டு. எதிர்பார்ப்பு உன்னதங்களுடன் இணைந்ததாக இலட்சியநிலை பண்பாடு இயங்கும். இலட்சியங்கள் அடையப்படாதவிடத்து ஏற்படும் உள விரிசல் சீர்மியத்தின் தேவையையும் புலப்படுத்தி நிற்கும் நடைமுறை வாழ்வுடன் அல்லது யதார்த்த வாழ்வுடன் இணைந்ததாக உறுநேர்வுப் பண்பாடு அமையும். நடைமுறை வாழ்வு நேர்விசைகளினதும் எதிர்விசைகளினதும் தொகுதியாதலால், அவற்றின் இணக்கமும் பிறழ்வும் மனிதமங்களைத் தாக்கிய வண்ணமிருக்கும் நெருக்கீடுகளை உருவாக்கும் விசைகள் அவற்றிலே உட்பொதிந்திருக்கும்.

பண்பாட்டை அகத்துறைப்பண்பாடு (Covert Culture) புறத்தெழும்பண்பாடு (Overt Culture) என்று பகுத்தாரயும் மரபுகளும் காணப்படுகின்றன. வெளிப்படையாகத் தோன்றாத அகத்தின் சிந்தனைகளோடும் நெறிப்படுத்தலோடும் இயங்கிக் கொண்டிருப்பது அகத்துறைப் பண்பாடாகும். இந்தத் தளத்தில் நிகழும் உராய்வுகளும், உசாவல்களும் சிந்தனைவயப்பட்ட ஆனால் நடத்தைகள் வழியாக வெளிப்படாத உளமுரண்பாடுகளின் இருப்பிடமாக அமையும். நடத்தைகள் வாயிலாகவும், குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் மேலெழும் துலங்கல் வாயிலாகவும் காணக்கூடியதாக இருப்பது புறத்தெழும் பண்பாடாகும். சிலவேளைகளில் அகத்தில் விருப்பமற்ற ஒன்றை வெளித்துலங்கலிலே விரும்பும் நடத்தையாகக் காண்பிக்க வேண்டிய நிலையும் ஏற்படலாம். ஆனால் அந்த முரண்பாடு இறுக்கமடைந்து தீவிரமாகும் பொழுது உளவியற் பிரச்சினைகளுக்கு இட்டுச்செல்லும்.

பண்பாட்டின் ஒரு சிறப்பார்ந்த கூறாக அமைவது துணைப் பண்பாடு (Subculture) ஆகும். சீர்மிய உளவியலில் துணைப்பண்பாடு கூர்ந்த ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படுகின்றது. இன்று கட்டிளமைப் பருவத்துக்குரிய துணைப்பண்பாடு பெரும் பண்பாட்டோடு அல்லது ஆதிக்க நிலைப்பண்பாட்டோடு முரண்படும் போக்குகளும் காணப்படுகின்றன. இந்நிலையில் எதிர்ப்பண்பாடும் அதற்குரிய நடத்தைக் கோலங்களும் தோற்றம் பெறுகின்றன. இது இருமுனைத் தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. அதாவது பெற்றோரும் உளத்தாக்களுக்கு உட்படுகின்றனர் - கட்டிளைஞரும் உளத்தாக்கங்களுக்கு உட்படுகின்றனர்.

கல்விச் செயற்பாடுகள் சிறார்களை பண்பாட்டு மயமாயமாக்கலுக்கு (Enculturation) உட்படுத்தி வருகின்றது. ஆதிக்க நிலைப்பண்பாட்டுக்கு உகந்தவாறு சிறாரை நெறிப்படுத்திச் செல்லும் வேளை ஏற்படும் உராய்வுகள் உளவியற் பிரச்சினைகளாக வளர்ந்து மேலெழுதல் உண்டு. வளர்ந்தோருக்கும் சிறாருக்குமிடையே "உள ஒன்றிப்பு (Psychic Unity) இல்லாவிடில் குறிப்பிட்ட சமூகத்திலே பலவித நெருக்கடிகள் தோன்றும் நிலை ஏற்படும்.

பண்பாட்டை உளவியலடிப்படையில் நோக்கும் ஆய்வுகளின் வழியாக "உளமானிடவியல்" (Psycho-An thropology) என்ற அறிவுப்பரப்பு தோற்றம் பெற்றது. பண்பாடு தனி மனிதரது செயற்பாங்களிலும் ஆளுமையிலும் எத்தகைய தாக்கங்களைப் புரிகின்றது என்பவை தொடர்பான களஆய்வுகளும் பண்பாட்டிடை நிலை ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒரே பண்பாட்டில் வாழும் மக்களிடத்து ஏன் வேறு வேறுபட்ட ஆளுமைக் கோலங்கள் தோற்றம் பெறுகின்றன என்ற வினா நுண்பாக நிலை ஆய்வுகளை முன்னெடுப்பதற்குத் தூண்டுதலளித்தது. ஒரே பண்பாட்டில் வாழ்பவர்களுக்கிடையே புறநிலை வேறுபாடுகள் தோற்றம் பெறுகின்றன. தனியொருவர் மேற்கொள்ளும் இடைவினைகள், அவருக்குக்கிடைக்கப் பெறும் தனித்துவமான அனுபவங்கள், அவர்களிற்கும் கல்வி நிலையத்தின் இயல்பு, ஆசிரியரின் இயல்பு சொந்த வாழ்க்கையில் ஏற்படுத்தாக்கங்கள் முதலியவை தனியாள் ஆளுமையிலே செல்வாக்குச் செலுத்துகின்றன.

ஒவ்வொருவருக்கும் கிடைக்கப் பெறும் தனித்துவமான தூண்டிகள் அவர்களுக்குரிய ஏற்புத்தன்மையிலே செல்வாக்கை விளைவிப்பதால் ஆளுமைத் தனித்துவம் மேலெழத்தொடங்குகின்றது. இவ்வாறாகத் தனித்துவம் பெறும் ஆளுமை குறிப்பிட்ட பண்பாட்டின் அடிப்படை ஆளுமைக் கட்டமைப்புடன் தொடர்புபட்டு நிற்றல் குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒரு ஆளுமையின் தனித்துவத்தையும் அடிப்படை ஆளுமைக் கட்டமைப்பையும் விளங்கிக் கொள்வதற்கு இனவரைபியல் (Ethnography) ஆய்வுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

குறிப்பிட்ட பண்பாடு இயக்கம் பெறும் வாழ்விடத்தின் புவியியல் இயல்புகள்; சூழலின் இயல்புகள், பேசும் மொழி, தொழிற் கோலங்கள், உறவுமுறைகள், பழக்கவழக்கங்கள் முதலியவை இனக் குழுமத்தை வரையறை செய்வதற்குத்துணை செய்கின்றன. அவற்றை அடியொற்றியே அடிப்படை ஆளுமைக்கட்டமைப்பு உருவாக்கம் பெறுகின்றது. இந்த அடிப்படை ஆளுமைக் கட்டமைப்பின் நீட்சியாகவே தனித்துவ ஆளுமை தோற்றம் பெறுகின்றது.

பண்பாட்டில் மாற்றம் என்பது தொடர்ச்சியாக நிகழும் ஒரு செயல் முறையாகும், பொருண்மிய உற்பத்திமுறைகள் மாற்றமடையும் பொழுது பண்பாட்டு மாற்றம் நிகழ்தல் தவிர்க்க முடியாததாகும். புதிய கண்டுபிடிப்புக்கள், புலப்பெயர்வு, மரபுவழிப் பிரதேசங்களை விட்டு இடம் பெயர்தல், நவீனமயப்பாடு, நகர மயமாதல், தொடர்பாடலில் நிகழும் மாற்றங்கள் முதலியவை பண்பாட்டு மாற்றங்களை ஏற்படுத்தும். இவ்வாறாக நிகழும் பண்பாட்டு மாற்றம், சடுதியாக நிகழும் பொழுது அவற்றைத் தன் மயமாக்க முடியாத நிலையில் உளநெருக்கீடு தோற்றம் பெறுதலும், சீர்மியத்தின் தேவையும் மேலெழுகின்றன.

உள்நாட்டு யுத்தத்தின் தொடர்ச்சியால் புலம் பெயர்ந்து வேறு நாடுகளுக்குச் செல்வோர், அங்குள்ள பண்பாட்டுடன் இணங்கிச் செல்ல முடியாத நிலையில் உளநெருக்கீடுகளை அனுபவிக்கின்றனர். புலம் பெயர்ந்து செல்லும் சிறார் புதிய பண்பாட்டை உள்வாங்குமளவுக்கு வளர்ந்தோராலும் முதியோராலும் அவற்றை உள்வாங்கி இணங்கிச் செல்ல முடியாத நிலையில் குடும்ப நிலையை அடியொற்றிய உள நெருக்கீடுகள் தோற்றம் பெறுகின்றன.

மானிடவியலாய்வாளர் பண்பாட்டின் இயல்பைப் பல்வேறு கண்ணோட்டங்களில் விளக்க முயற்படுகின்றனர். அவை வருமாறு:

1. பண்பாட்டை ஒரு தொழிற்பாட்டு முறையாக (Functional System) விளக்குதல் - இதனடிப்படையில் சமூகத்தினால் உருவாக்கப்பட்ட பாத்திரங்களை (Roles) ஒழுங்குறநிறைவேற்றி வைக்க முடியாதநிலை உளப்பிரச்சினைகளுக்கு இட்டுச் செல்லும் அல்லது உள நெருக்கீடுகளால் குறிப்பிட்ட சமூகப்பாத்திரத்தை ஒருவரால் நிறைவேற்ற முடியாதிருக்கும். மேலும் சமூகத்தின் எதிர்விசைத் தொழிற்பாடுகள் உறுப்பினர்களிடத்து உளத்தாக்கங்களை ஏற்படுத்திவிடும்.

> உள்நாட்டு யுத்தத்தின் தொடர்ச்சியால் புலம் பெயர்ந்து வேறு நாடுகளுக்குச் செல்வோர், அங்குள்ள பண்பாட்டுடன் இணங்கிச் செல்ல முடியாத நிலையில் உளநெருக்கீடுகளை அனுபவிக்கின்றனர்.

2. பண்பாட்டை ஓர் அமைப்பியல் முறைமை (Structural System) யாக விளக்குதல். பண்பாட்டின் அடித்தளமாகிய பொருண்மிய அமைப்பானது சுரண்டலும் பறிப்பும் கொண்டதாக இருப்பின் அது அனைத்து அமைப்புக்களிலும் தாக்கங்களை விளைவிப்பதுடன் மனித நடத்தைகளையும் உணர்வுகளையும் தொடர்ந்து பாதிப்புக்குள்ளக்கிய வண்ணமிருக்கும்.

3. பண்பாட்டை ஓர் அறிகை முறைமையாக (Cognitive System) விளக்குதல்.

பண்பாட்டின் வழி ஒழுகுதலும், இணங்கி நடத்தலும், மரபுகளுக்கு மதிப்பளித்தலும், மொழியைப் பொருத்தமான முறையிவே பயன்படுத்தலும் உள்ளத்தின் அறிகைச் செயற்பாட்டோடு இணைந்த நடவடிக்கைகளாகின்றன. பண்பாடு பற்றிய சரியான புலக்காட்சியும் அறிகைக்கட்டமைப்பும் ஒருவரால் உருவாக்கிக் கொள்ளப்படாதவிடத்து இசைவாக்க பிரச்சினைகளும் உளத்தாக்கங்களும் ஏற்படக்கூடிய நிலை தோற்றம் பெறும்.

4. பண்பாட்டை ஒரு குறியீட்டு முறைமையாகக் (Symbolic System) காணல். மக்கள் குறியீடுகளின் பிரபஞ்சத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். பேசும் மொழி, மற்றும் நடை, உடை பாவனைகள், பழக்கவழக்கங்கள், சமயம், சடங்குகள் கல்விக்கையளிப்பு, சமூகப்பாத்திரம் என்றவாறு அனைத்துச் செயற்பாடுகளும் குறியீட்டுவயப்பட்டன. அக்குறியீடுகளைச் சரிவர அறியாதவிடத்தும், பயன்படுத்த முடியாத விடத்தும் உளவியல் சார்ந்த நெருக்கடிகள் தோற்றம் பெறுவதாகக் கொள்ளப்படுகின்றது.

5. பண்பாட்டை ஒரு நடத்தை நிலைமுறைமை (Behavioural System) யாகக் கொள்ளல்.

சமூகத்தின் வழியாக எழும் தூண்டிகளை விளங்கிக்கொள்ளலும் தூண்டிகளுக்குப் பொருத்தமான துலங்கலை வெளிப்படுத்தலும், பொதுமையாக்குதலும் நடத்தை உருவாக்கத்தை மேற்கொள்ளலும், என்றவாறு பண்பாட்டை முற்றிலும் நடத்தைக் கண்ணோட்டத்தில் விளக்குவதாக இந்த அணுகுமுறை அமைகின்றது. நியம நடத்தைகளில் நின்று பிறழ்வடையும் பொழுதும், அன்னியமாகும் பொழுதும் அவை உளப்பிரச்சினைகளுக்கு இட்டுச் செல்லும்.

பண்பாடு சிக்கலடையும் பொழுது, பறிப்பு நிலைகள் (Exploitation) அதிகரிக்கும் பொழுது, பண்பாட்டின் வழியான உளத்தாக்கங்கள் மேலெழும் வாய்ப்புக்கள் அதிகரித்துச் செல்லும். பறிப்பு நிலைகள் தீவரமாகக் காணப்படும் நாடுகளில் சீர்மியத்தின் தேவையும் அதிகரித்துக் கொண்டு செல்லும். எளிமையான தொன்மையான, சிக்கற்பாடுகள் குறைவான பண்பாடுகளில் சீர்மியத்தின் தேவை அத்துணை பெரிதாக இருந்ததாகத் தெரியவில்லை. சடங்குகளும், மாய வித்தைகளும் வழிபாடுகளும் உளச்சுகம் வழங்குவதற்குப் போதுமானவையாக இருந்தன.

சமூகம் சிக்கலடைய பண்பாட்டுக் கோலங்கள் சிக்கலடைந்து செல்ல, மனிதருக்குரிய பிரச்சனைகளும் அதிகரிக்கலாயின. இந்நிலையில் உளவியற் பிரச்சினைகளையும், உளத்தாக்கங்களையும் தனி மனிதரை அடிப்படையாகக் கொண்ட ஒற்றைப் பரிமாணநோக்கில் ஆராய்ந்து முடிவுகளை எடுப்பது அபத்தமானதாயும் பிரச்சினைகளுக்குரிய மேலோட்டமான அணுகுறையாகியும் விடும். மேலைப்புலத்துச் சீர்மியச் செயற்பாடுகள் பெரும்பாலும் இவ்வாறான ஒற்றை நிலைத்தளத்திலே தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன.


இந்நிலையில் சமூக இயங்கியலை அடியொற்றிய அணுகு முறைகளைப் பயன்படுத்தாவிடத்துச் சீர்மிய நடவடிக்கைகள் ஒரு குறிப்பிட்ட புள்ளிக்குமேல் நகர முடியாத மட்டுப்பாடுகளைக் கொண்டவையாக மாறிவிடும்.

---

தொலைக்காட்சியில் வேற்றுப் பண்பாடு வேற்று முகங்கள் தளங்களின் தொடர்பற்ற வாயசைப்பு வழியாக நம்மொழி வழியாகச் சந்தைப் பொருள்கள் நமக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன. தொலைக்காட்சி வழியாக நமக்குத் தரப்படும் அனுபங்கள் முற்றிலும் வேறாக அமையும்போது நம்மை அவற்றோடு இணையச் செய்வது மொழிதான். பிற பண்பாடு, உணவு, உடை, பழக்கவழங்கங்கள் யாவும் மொழி மாற்றம் செய்யப்பட்டுத் தமிழுக்கு வருகின்றன. நவீனத் தொழில் நுட்ப உத்திகள் இத்தகைய பண்பாட்டை ஏற்றுக்கொள்ளும் சகிப்புத் தன்மையை நமக்கு வழங்கியுள்ளன. சமய நம்பிக்கைகள் சாதியப் படிநிலைகள் வழி மேம்பட்டிருந்த வடமொழிப் பண்பாடு, பகுத்தறிவு, சமத்துவம் பொருளாதார முன்னேற்றம் என்ற ஆங்கிலப் பண்பாடாக மாறித் தற்போது பொருளாதார மேம்பாடு ஒன்றையே நோக்கமாகக் கொண்ட உலகப் பண்பாட்டிற்கு வந்துள்ளது.

உலகச் சந்தைப் பொருட்களின் வியாபாரம், மொழி வழியாகவே நடைபெற வேண்டிய சூழலில் வியாபாரிகள் தங்களின் பொருட்களை விளம்பரப்படுத்த மொழி அவசியமாகிறது. தமிழ்மொழி வழியாகவே நம் பண்பாடு பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது. இந்தக் காலகட்டத்தில் மொழித் தூய்மை என்பதைவிடப் பண்பாட்டுத் தூய்மை முன்னிறுத்தப்பட வேண்டியது அவசியமாகிறது. பண்பாடு சிதையும் போது பண்பாட்டின் ஒரு கூறான மொழியும் சிதைந்து அழியும். மொழி மரபுகளும், பண்பாட்டு மரபுகளும் காக்கப்பட வேண்டுமெனின், தனித்தனி அமைப்புகளின் செயல்பாடு பயன்தராது. ஒரு சமுதாய இயக்கமே, அல்லது ஒரு சமுதாயத் தூய்மையாக்கமே தமிழையும் பண்பாட்டையும் காக்கும்.

முனைவர் எல். இராமமூர்த்தி





**ஆ.நித்திலவர்ணன்,**
முன்னாள் உதவி விரிவுரையாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

அலசல்

இலங்கையைப் பொறுத்தவரை பெரும்பாலான ஆசிரியர்கள் எதுவித ஆசிரியப்பயிற்சியும் பெறாது பல வருடங்கள் வகுப்பறைக்கற்பித்தலில் ஈடுபட்ட பின்னரே ஆசிரியப்பயிற்சியை பெற்றுக்கொள்கின்றனர்.

# இலங்கையில் ஆசிரிய பயிற்சிகளில் எதிர்நோக்கப்படும் சவால்கள்

ஏனைய தொழிற்துறைகளில் இருந்து மாறுபட்டது ஆசிரியத்தொழில். பலர் தமது சுய விருப்பத்துடனும் இன்னும் சிலர் விருப்பமின்றியும் இவ் ஆசிரியர் சேவையினுள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இலங்கையைப் பொறுத்தவரை அரச தொழில்களில் ஆசிரியத்தொழில் புரிவோரே அதிகம் எனலாம். மற்றைய அரச தொழில்களுடன் ஒப்பிடுகையில் அதிக ஊதியம் கிடைக்கின்றது. இவர்களுக்கென வலிமையான தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. சமுதாயத்தில் வல்லமை படைத்தவர்களாகவும் விளங்குகின்றார்கள். இப்படிப்பட்ட நன்மைகள் பல ஆசிரியத்தொழில் கொண்டிருந்தாலும் அது இன்று பல சவால்களை எதிர்நோக்குகின்றது. அதில் ஒன்றுதான் வழங்கப்பட்ட பட்டதாரி நியமனங்களில் மிக அதிகளவானோருக்கு கல்வி அமைச்சினூடாக ஆசிரிய நியமனங்களே வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு நியமனம் பெற்றவர்களில் பலர் முழுமையாக ஆசிரியத்தொழிலுடன் ஒன்றித்து போக முடியாதவர்களாக இன்றும் இருக்கின்றார்கள். பட்டதாரிஆசிரியர்கள் மட்டுமன்றி ஏனைய வகை ஆசிரியர்களிடமும் இக்குறைபாடு காணப்படுகின்றது. இதற்கான காரணம் இவர்களுக்கு முறையான ஆசிரியர் பயிற்சி வழங்கப்படாமையாகும். இதற்கான தீர்வுகளை கண்டறிவதனூடாக எமது ஆசிரியர்களின் வாண்மை விருத்தியை அதிகரிப்பதுடன் அவர்களின் தொழிற்பற்றையும் வளர்த்தெடுக்க முடியும். ஆசிரியர்களுக்கான பயிற்சி வாய்ப்புக்கள் பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது.

"ஆசிரியப்பயிற்சி பெறாத எவரும் வகுப்பறைக்கு சென்று மாணவர்களுக்கு கற்பிக்க தகுதியற்றவர்கள்" என்பது நவீன கல்வியியலாளர்களின் கருத்தாகும். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை பெரும்பாலான ஆசிரியர்கள் எதுவித ஆசிரியப்பயிற்சியும் பெறாது பல வருடங்கள் வகுப்பறைக்கற்பித்தலில் ஈடுபட்ட பின்னரே ஆசிரியப்பயிற்சியை பெற்றுக்கொள்கின்றனர். இன்னும் சிலர் எதுவித ஆசிரியப்பயிற்சியையும் பெற்றுக் கொள்ளாமலே தமது ஆசிரிய சேவைக்காலத்தை நிறைவுசெய்தும் வருகின்றனர். எதுவித ஆசிரியப்பயிற்சியையும் பெற்றுக்கொள்ளாத மீத்திறன் மிக்க ஆசிரியர்கள் பலரும் எமது சமுதாயத்தில் உள்ளனர். தனியார் கல்விநிலைய ஆசிரியர்கள் பலரும் இந்த வகைக்குள் உள்ளடக்கப்படலாம். ஆனால் இத்தகையவர்களால் பரீட்சை நோக்கில் மட்டும் மாணவர்களுக்கு உதவமுடியுமேயொழிய

மாணவரின் முழுமையான வளர்ச்சியில் பங்களிக்க முடியாது. மறுபக்கம் பல்வேறு ஆசிரியப்பயிற்சிகளையும் பெற்றுக்கொண்ட ஆசிரியர்கள் பலர் தமது கற்பித்தல் நடவடிக்கையில் முழுமையாக ஈடுபடாது ஏமாற்றும் போக்கில் செயற்பட்டு வருவது எமது ஆசிரியர்களின் பொறுப்பற்ற தன்மையையே எடுத்துக்காட்டுகிறது.

எமது நாட்டில் பிரதானமாக இரண்டுவகையான ஆசிரியப்பயிற்சிகள் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்றன.

1. ஆசிரியசேவை முன் பயிற்சி (Pre Service Training)

2. ஆசிரிய சேவைக்காலப் பயிற்சி (In Service Training)

உலகளாவியரீதியில் தற்காலத்தில் ஆசிரியசேவை முன்பயிற்சி அதிகளவில் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. இத்தகைய பயிற்சி வழங்கும் நிறுவனங்களாக பல்கலைக்கழகங்கள், கல்வியியல் கல்லூரிகள் (Colleges of Education) என்பன விளங்குகின்றன.

**கல்விமாணி கற்கைநெறி**

பட்டதாரிகளைப்பொறுத்தவரை அவர்கள் கல்விமாணிக்கற்கைநெறிக்கூடாக ஒரு முழுமையான ஆசிரியராக செதுக்கப்படுகின்றனர். இலங்கையில் கொழும்பு பல்கலைக்கழகம். இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் என்பன கல்விமாணி கற்கைநெறியை (B.Ed) நடாத்துகின்றன. யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் இக்கற்கைநெறியை B.Sc with Education என்ற பெயரில் நடாத்துகின்றது. தேசிய கல்வி நிறுவனத்தினாலும் (N.I.E) இக்கற்கைநெறி பல்வேறு பிராந்திய நிலையங்களினூடாக நடத்தப்படுகின்றது. கல்விமாணி கற்கைநெறியைப்பூர்த்தி செய்த பட்டாதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதில் கல்வியமைச்சு முன்னுரிமை அளிக்கின்றது. யாழ்.பல்கலைக்கழகத்தில் முதல் அணியில் B.S.c with Education பட்டம் பெற்ற பட்டதாரிகள் நாட்டின் பல்வேறு தேசிய பாடசாலைகளிலும், பிரபல்யம் மிக்க பாடசாலைகளிலும் ஆசிரிய நியமனம் பெற்றுள்ளனர்.

அண்மையில் வழங்கப்பட்ட பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பில் அதிகளவில் ஆசிரியர் நியமனங்களே வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஆசிரியநியமனம் பெற்றோர் எதுவித கற்பித்தல் பயிற்சிகளையும் பெறாது அல்லது சிலநாள் பயிற்சிபெற்று இன்று பாடசாலைகளில் கற்பித்துக்கொண்டிருக்கின்றனர். இது நீண்டநாள் நோக்கில் மாணவர்களின் அடைவுமட்டத்தை பெருமளவில் பாதிக்கும். இந்த ஆபத்தை உணர்ந்து அரசாங்கம் அனைத்துப்பல்கலைக்கழகங்களிலும் அனைத்துப்பாடத்துறைகளுக்குமான (கலைத்துறை, விஞ்ஞானத்துறை, வணிகத்துறை) கல்விமாணி பாடநெறிகளை ஆரம்பிக்க வேண்டும். தற்கால உடனடி நிவாரணமாக பல்கலைக்கழகங்கள் அனைத்து இளமாணிப்பட்டதாரிகளுக்கும் அவர்களின் பாடத்துறைகளுடன் சேர்த்து கல்வியியல் பாடங்களையும் போதிக்க வேண்டும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதிக்காக காத்திருக்காது பல்கலைக்கழகங்கள் குறுகியகால கற்பித்தல் பயிற்சிகளையாவது வழங்க முன்வரவேண்டும்.

**கல்வியியல் கல்லூரிகளின் தோற்றமும் ஆசிரிய பயிற்சியின் புதிய பரிமாணமும**

உலகமயமாக்கலின் விளைவாக உலகத்தரத்திற்கு இணையாக எமது நாட்டிலும் ஆசிரியவளத்தினை உயர்த்திக் கொள்ளவென தோற்றம் பெற்றவைதான் கல்வியியல் கல்லூரிகள். இங்கு மூன்றாண்டு வதிவிடப்பயிற்சி பெற்ற ஆசிரிய மாணவர்கள் பலதிறன்படைத்த ஆசிரியர்களாக உருவாக்கப்படுகின்றார்கள். இன்று நாட்டின் பிரபலமான ஆரம்பக்கல்வி இடைநிலைக்கல்வி பாடசாலைகள். கல்வியியல் கல்லூரிகளில் பயின்ற ஆசிரியர்களை போட்டிபோட்டு உள்வாங்குகின்றன. அண்மைக்காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட கல்வி முன்னேற்றத்தில் கல்வியில் கல்லூரிகளின் வகிபங்கு காத்திரமானது.

**ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைகள**

எமது நாட்டின் மிகவும் பாரம்பரிய மிக்க ஆசிரியப்பயிற்சி நிறுவனங்களாகும். இவை ஆசிரியத்தொழிலுக்கு உள்வாங்கப்பட்டபின் ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கும் பணியைப்புரிகின்றன. கல்வியியல் கல்லூரிகளின் தோற்றத்தின் பின்னர் இவற்றின் முக்கியத்துவம் குறையத்தொடங்கியுள்ளது. குறிப்பிட்டகாலத்தின் பின்னர் இவற்றின் முக்கியத்துவம் குறையத்தொடங்கியுள்ளது குறிப்பிட்டகாலத்தின்பின் இவற்றை மூடிவிடவும் அரசாங்கம் தீர்மானித்தது. ஆனாலும் இவற்றின் பணியை முற்றாக புறந்தள்ளிவிடமுடியாது. க.பொ.த (உயர்தர) தகுதியுடன் போட்டிப்பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கும், தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி நிரந்தர ஆசிரியர் நியமனம் பெற்றவர்களுக்கும் ஆசிரியப் பயிற்சியளிக்கும் பெருங்கடமையை இவை புரிகின்றன. இவற்றின் பணியை புறந்தள்ளிவிடமுடியாத அரசு இவற்றை மூடும் எண்ணத்தை கைவிட்டுள்ளது.

**பட்டதாரி ஆசிரியர்களுக்கான ஆசிரியபயிற்சி வாய்ப்புக்கள்**

பட்டதாரி ஆசிரியர்கள் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்தி செய்வதனூடாக அவர்கள் ஆசிரியவாண்மை விருத்தியைப் பெற்றுக்கொள்கின்றார்கள். அனைத்து பட்டதாரி ஆசிரியர்களும் மிக விரைவாக இக்கற்கைநெறியைப் பூர்த்தி செய்ய விரும்பினாலும், பல்கலைக்கழகங்கள் அவற்றின் பௌதீக, மனித வளங்களிற்கு ஏற்ப குறிப்-

பிட்ட எண்ணிக்கையானோரை மட்டும் இக்கற்கை-நெறிக்கு அனுமதிக்கின்றன. இலங்கை திறந்த பல்கலைக்கழகம் அதிகளவானோரை அனுமதித்-தாலும் இதிலும் வரையறை உண்டு.

எமது நாட்டின் பல்கலைக்கழகம் கல்வியியற்-துறையில் பின்வரும் உயர் பட்டங்களையும் வழங்கு-கின்றன.

1. Master of Education
2. Master of Philosophy in Education
3. Doctor of Philosophy in Education

### ஆசிரிய நிலையங்கள (Teacher Centers)

ஆசிரியர்களுக்கு அவர்களின் ஆசிரியவாண்மையை மேம்படுத்துவதற்காக, அவர்கள் சேவைக்காலத்தில் பயிற்சியளிக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டவை-தான் ஆசிரிய நிலையங்களாகும். கல்வி அமைச்-சினால் ஒவ்வொரு கல்விவலயங்கள் தோறும் ஒவ்வொரு ஆசிரிய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்-ளது. அரசுசாரா நிறுவனங்களின் நிதியுதவியுடன் மிகநவீன வடிவமைப்பில் அமைக்கப்பட்டுள்ளன. வசதியான பயிற்சி மண்டபம், நூல்நிலையம், கணிணிப்பயிற்சிக்கூடம் என்பன அமைக்கப்பட்டுள்-ளன. இந்நிலையங்கள் பல்வேறு ஆசிரிய தரத்-திலானவர்களுக்கும் பல்வேறுபட்ட ஆசிரிய பயிற்சி-களை அளிக்கின்றன. அண்மையில் ஆசிரிய-சேவைக்கு உள்வாங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்-களுக்கு குறுகிய காலப்பயிற்சிகளை திறம்பட வழங்கி இருந்தன. ஆனாலும் பயிற்சி தேவையான அனைத்து ஆசிரியர்களுக்கும் ஆசிரிய பயிற்சி வழங்கக்கூடிய பௌதீகவளம், மனிதவளம், நிதிவளம் என்பவற்றை இவையும் கொண்டிருக்கவில்லை.

### தேசிய கல்வி நிறுவனம (National Instiute of Education)

ஆசிரியர் பயிற்சி வழங்கும் மற்றொரு முக்கிய நிறுவனம் தேசிய கல்வி நிறுவனமாகும். இது இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் பிராந்திய நிலையங்களினூடாக கல்விமாணி(B.Ed), பட்-டப்பின்படிப்பு டிப்ளோமா கற்கைநெறி என்பன-வற்றை நடாத்துகின்றது. கொழும்பு தலைமை கற்கை நிலையத்தினூடாக மேலும்பல ஆசிரியர் கற்கை நெறிகளை நடாத்துகின்றது.

### பாடசாலையை மையப்படுத்தி ஆசிரியப்பயிற்சி (School Based Teacher Training)

தற்காலத்தில் ஆசிரியப்பயிற்சியின் நவீனபரி-மாணமாக பாடசாலையை மையப்படுத்திய ஆசிரி-யப்பயிற்சி விளங்குகின்றது. ஒரு பாடசாலையில் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்குமாக பயிற்சி-பட்டறையை அதிபர், பாடசாலையில் ஒழுங்குசெய்து ஆசிரியவாண்மையை விருத்திசெய்தலாகும். தமது பாடசாலையின் திறமைமிக்க வளஆளணியினருடன், பாடசாலைக்கு வெளியில் இருந்தும் திறமையான வளஆளணியினரை அழைத்து இப்பயிற்சிநெறியை ஒழுங்குசெய்ய முடியும். மாணவர் கற்றல்செயற்பாடு பாதிக்காத வகையில் குறிப்பிட்ட கால ஒழுங்கில் இப்பயிற்சிநெறியை ஒழுங்குசெய்தல் வேண்டும்.

### ஆசிரியர் பயிற்சியில் தனியார்துறை

அண்மைக்காலங்களில் நகர்ப்புறங்களில் பல தனியார் நிறுவனங்கள் ஆசிரியர் பயிற்சிநெறிகளை அறிமுகம் செய்துள்ளன. இவற்றின் சான்றிதழ் பற்றி இன்று பல ஐயப்பாடுகள் இருக்கலாம். ஆனால் நடைமுறையில் பல தனியார் கணிணிக்கல்வி நிறுவனங்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதைப்போன்று எதிர்வரும் காலத்தில் தனியார் துறையினரால் வழங்கப்படும் தரமான ஆசிரியர் பயிற்சி சான்றிதழ்களை அரசாங்-கம் அங்கீகரிக்கும் என நம்பலாம்.

### ஆசிரியர்கள் சுயதேடல்கள் மூலம் தமது தொழில் திறன்களை வளர்த்துக்கொள்ளல்

எந்த ஒரு ஆசிரியர் தனது வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொண்டிருக்கிறாரோ அவரால் தான் திறம்பட தமது தொழிலை செய்யமுடியும். நாளுக்குநாள் உலகில் பல மாற்றங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. தொடர்மாற்றங்களை உள்வாங்கி அதற்கேற்ப கற்பித்தல் செய்யவேண்டியதேவை இன்றைய ஆசிரியர்களுக்கு இருக்கின்றது. ஆசிரியர் சிறந்த தொடர் வாசகனாக இருக்க வேண்டும். தனது ஆசிரிய தொழில்வாண்மையை விருத்தி செய்ய அத்துறைசார்ந்த நூல்களை வாசிக்க வேண்டும்.

இணையத்தளத்தில் பல புதிய நவீன ஆசிரியத்-தொழில்விருத்தி பற்றிய தகவல்கள் புதைந்துள்ளன. உலகத்தின் பல மூலைகளிலும் பின்பற்றப்படும் சிறந்த பயிற்சிவிருத்தி உத்திகள் பரந்து கிடக்கின்றன. இவற்றின் பயனை எமது ஆசிரியர்கள் முழுமையாக பயன்படுத்தி தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும். Online Learning முறையில் இணையத்தளங்களி-னூடாக பல நவீன ஆசிரியர்கள் பயிற்சிநெறிகளினை பின்பற்றி தமதுபட்டங்கள், உயர்பட்டங்களை பெற்றுக்கொள்ளவேண்டும்.

### முடிவுரை

எமது நாட்டின் மாணவர்களின் கல்விஅபிவிருத்தி ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. ஆசிரியர்கள் தமது தொழில்திறன்களை மேம்படுத்திக் கொள்வதனூடாக தரமான கல்வியை மாணவர்-களுக்கு வழங்கமுடியும். பல்வேறுபட்ட ஆசிரிய பயிற்சிகளையும் பெற்றுக்கொள்வதனூடாகவும், அதன்படி மாணவர்களுக்கு கற்பிப்பதனுடாகவும் ஒரு ஆசிரியர் இலட்சிய ஆசிரியராக திகழமுடியும்.

# கற்றல் கற்பித்தலில் செயல்முறைக் கல்வியின் அவசியம்



**ம.நிரேஸ்குமார்**
விரிவுரையாளர்,
தொழில்நுட்பக் கல்லூரி, வவுனியா.

**அலசல**

எந்தவொரு பாடமாக இருந்தாலும் கூட அவற்றைக் கற்பிக்கின்ற போது, மாணவர்கள் அவ்வவ் பாடங்களின் மூலம் அடைய எதிர்பார்க்கப்படும் திறன்களை அடைந்துள்ளார்களா? என்பதை ஒவ்வொரு ஆசிரியரும், ஒவ்வொரு கட்டத்திலும் பரீட்சித்துப் பார்க்க வேண்டும்.



**சம்பவம் ஒன்று:**

தைப்பொங்கல் அது ஒரு ஏழை விவசாயக் குடும்பம் குடும்பத்தின் மொத்த வருமானமும் வயல், தோட்டம் என்பவற்றிலிருந்துதான் பெறப்படுகின்றது.

மூன்று பிள்ளைகள் பத்தாம் ஒன்பதாம் எட்டாம் தரத்தில் படிக்கிறார்கள். இவர்களின் தகப்பன் குடும்பத்தில் எட்டாவது பிள்ளை கடைக்குட்டி செல்லப்பிள்ளையென்று படிப்பில் கவனம் செலுத்தாமல் விட்டதால் இன்று வயலைமட்டும் நம்பி வாழ்க்கை நடத்துகிறார். தன்னைப் போல தன் பிள்ளைகள் ஆகிவிடக்கூடாதெண்ட வைராக்கியத்துடன் பிள்ளைகளைப் படிப்பிக்கின்றார்.

தமிழர் திருநாள் தமிழர் மரபு வழிவந்த நன்றி செலுத்தும் பண்பாட்டை உலகறிய வைக்கும் நாள். அந்த வீட்டின் பொங்கலைப் பார்த்தால் அது ஒரு சாதாரண ஏழை விவசாயக் குடும்பம் என்று யாரும் கணித்து விட முடியாது. அவ்வளவு சிறப்பு.

"ஆ பிள்ளையள் தேவாரம் பாடுங்கோ"

"அக்கா பாடட்டும்"

"இல்லையில்லைத் தம்பி பாடட்டும்"

"தங்கச்சி பாடட்டும்"

பெறுமையிழந்த தகப்பன் தானே பாடத்தொடங்குகின்றார்.

**சம்பவம் இரண்டு:**

வாணிவிழா வெகுசிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு பிரபல்யமான கல்வி நிறுவனம். மூன்றாம் நாள் பூசையின்போது அர்ச்சகர் ஒரு ஆசிரியரைக் கூப்பிட்டுச் சொன்னார். "சேர்! இண்டைக்கு நீங்கள் நவராத்திரிப் பாமாலையைப் பாடுங்கோ பிள்ளையள் ராகம் தப்பிப் பாடீனம்"

**சம்பவம் மூன்று:**

வவுனியா தொழினுட்பக் கல்லூரியில் ஆசிரியர்தினம் வெகு சிறப்பாக, ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது ஒரு மாணவி ஆங்கிலத்தில் உரையாற்றினார். அடிக்கடி தன்கையில் இருந்த குறிப்பை பார்ப்பதை அவதானித்துப் பின்னர் வாங்கிப் பார்த்தேன்.

"ஐ வெல்கம் ரூ அவ சீப் கெஸ்ட் மிஸ்டர்..." என்ற-வாறாக அப்படியே தமிழில் மொழிபெயர்த்து எழுதப்பட்டிருந்தது. அவர் ஒரு பிரபல பாடசாலை-யில் கல்வி கற்றவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயம்.

**பட்டதாரிகளுக்கான பயிற்சி வகுப்பின்போது ஒரு பட்டதாரி இளைஞன்:**

எனது இலட்சியம் இலங்கைக் கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதாகும். எமது நாட்டில் காணப்படுகின்ற எழுத்து மூலமான கற்பித்தலையும் எழுத்து மூலமான பரீட்சை நடைமுறைகளையும் முதலில் மாற்றியமைக்க வேண்டும்.

தேவாரம் பாடத்தெரியாத,

ஆங்கிலத்தில் வசனம் கதைக்கத் தெரியாத,
சமைக்கத்தெரியாத,

ஆனால் இப்பாடங்களில் அதிவிசேட சித்தி பெற்ற எத்தனையோ மாணவர்களை நான் பார்த்திருக்-கின்றேன். நான் கூட பௌதீகவியலில் மின்னியல் என்ற பாடத்தில் ஒரு expert. ஆனால் ஒரு Simple Circuit ஐக்கூட என்னால் சரியாக இணைக்க-முடியாது. செயல்முறை ரீதியான கற்பித்தல் நிகழா-மையே இதற்குக் காரணம் என்பதை மிகவும் மனவருத்தத்துடன் தெரிவிக்க விரும்புகின்றேன்.

**ஒரு ஆங்கில ஆசிரியரின் கூற்று:**

O/L இல் A grade எடுத்திருக்கிறாங்கள். ஆனால் ஒரு வசனம் சரியாக எழுதத் தெரியாது.

**பட்டப்பின் கல்வி டிப்ளோமா வகுப்பில் ஒரு ஆசிரி-யரின் ஆதங்கம்:**

வாழ்க்கைத் தேர்ச்சிக் கல்வியை Black Board இல் கற்பிக்கிறார்கள் எப்படி மாணவர்கள் வாழ்க்கைத் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளமுடியும்?

**ஒரு அம்மாவின் கூற்று:**

"என்ர பிள்ளை சரியான கெட்டிக்காரி. ஆனால் வீட்டு வேலை ஒண்டும் செய்யமாட்டாள். தேத்தண்ணி கூட வைக்கத்தெரியாது."

குறிப்பு: இம்மாணவி க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் மனைப்பொருளியல் பாடத்தில் "A" சித்தி பெற்றவர்.

இந்த சம்பவங்களினூடாக மாணவர்கள் தாம் கற்றுக்கொண்ட விடயங்களை பிரயோகிக்க முடியாத நிலைமையில் உள்ளதையும், சமுதாயமானது உடனடி விளைவுகளை திறன்களை மாணவர்கள் வெளிக்காட்ட வேண்டுமென எதிர்பார்ப்பதையும் தெளிவாக புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

இச்சம்பவங்களினூடாக ஆசிரியர்கள் பின்வரும் விடயங்களை கருத்தில் கொண்டு தமது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல் அவசியமானது என்பதையும் இனம் காணக்கூடிய-தாக உள்ளது.

1. செயல்முறைக்ளினூடான கற்றல் கற்பித்தலின் அவசியம்.
2. கற்றல் கற்பித்தல் நிகழும் பொழுது அவற்றை வாழ்க்கையில் பிரயோகிக்கும் திறனும் மாணவர்-களிடம் வளர்க்கப்படல் வேண்டும்.
3. பாடத்திட்டங்களை கற்பிக்கும் பொழுது அவற்-றை மாணவர்களின் வாழ்க்கை அனுபவங்களு-டன் பொருத்தி கற்பிக்க வேண்டும்.
4. மாணவர்கள் பாடங்களைக் கற்கும்போது அவற்-றை வாழ்க்கை அனுபவங்களுடன் பொருத்திப்-பார்த்துக் கற்கவேண்டும்.
5. கற்ற விடயங்களை பொருத்தமான இடங்களில் மாணவர்கள் பிரயோகிக்கவேண்டும்.

பெரும்பாலான ஆசிரியர்களும், மாணவர்களும் செயல்முறையினூடான கற்றல் கற்பித்தல் என்றதும் விஞ்ஞான பாடங்களையோ அல்லது வாழ்க்கைத் திறன் கல்வியையோதான் எண்ணத் தலைப்படு-கிறார்கள். இது முற்றிலும் தவறான ஒரு கருத்தாகும். கல்வித்திட்டத்தில் காணப்படுகின்ற ஒவ்வொரு பாடமும் ஏதோவொரு திறனை வளர்க்கும் நோக்குட-னேயே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்பதை ஒவ்-வொருவரும், முக்கியமாக ஆசிரியர்கள் மனங்கொள்-ளல் வேண்டும்.

எந்தவொரு பாடமாக இருந்தாலும் கூட அவற்றைக் கற்பிக்கின்ற போது, மாணவர்கள் அவ்வவ் பாடங்-களின் மூலம் அடைய எதிர்பார்க்கப்படும் திறன்-களை அடைந்துள்ளார்களா? என்பதை ஒவ்வொரு ஆசிரியரும், ஒவ்வொரு கட்டத்திலும் பரீட்சித்துப் பார்க்க வேண்டும். இத்திறன்களை வளர்ப்பதற்கான ஒரு சிறந்த கற்பித்தல் முறையாக செயல்முறைகளி-னூடான கற்பித்தலை தெரிவு செய்யலாம்.

கல்வித்திட்டத்தில் அமைந்துள்ள சில பாடங்களையும் அவற்றினூடாக மாணவர்கள் அடைய வேண்டும் என எதிர்பார்க்கப்படும் சில திறன்களையும் இப்-பொழுது நோக்குவோம்.

**1. சமயம்**

- ஒழுக்கம், மனிதவிழுமியம், பண்பாடு ஆகிய-வற்றை பேணுதலும் மதித்தலும்.
- சமயப் பழக்கவழக்கங்கள், சமய ஆசாரங்களை மதித்தலும், பின்பற்றலும்.
- சமய ஆசாரங்களுக்கான உள்ளார்ந்த அர்த்தங்-களைப் புரிந்து கொள்ளுதல்.

**2. தமிழ்**

- மொழியின் பயன்பாட்டை அறிந்து கொள்ளல்
- வாசித்து விளங்கிக் கொள்ளுதல்
- அவதானம்

- கிரகிப்பு
- தெளிவாகப்பேசுதல், எழுதுதல், வசனம் அமைத்தல்
- கருத்துக்களை வெளிப்படுத்துதல்
- சமூக இடைத் தொடர்புகளைப் பேணுதல்.
- தொடர்பாடல் திறன்கள்.

3. கணிதம்
- அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான கணித அறிவைப் பெற்றுக்கொள்ளுதல்.
- தர்க்கிக்கும் திறனை வளர்த்தல்.
- ஆராய்ந்தறியும் திறனை வளர்த்தல்.
- முடிவுகளை மேற்கொள்ளல்.
- உய்த்தறிதல்.

4. ஆங்கிலம்
- ஆங்கில மொழியைப் பயன்படுத்தல்.
- ஆங்கில மொழியில் எழுதவும் பேசவும் கற்றுக்கொள்ளல்.
- உலக விடயங்களைத் தெரிந்து கொள்வதற்கான ஊடகமாக ஆங்கிலத்தைப் பயன்படுத்தல்.
- தகவல் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தல்.

5. விஞ்ஞானம்
- அன்றாட வாழ்க்கையில் விஞ்ஞானம் சார்ந்த விடயங்களை தெரிந்து கொள்ளல்.
- ஒவ்வொரு செயல்களுக்குமான விஞ்ஞானக் காரணங்களை அறிந்து கொள்ளல்.
- விஞ்ஞான, தொழினுட்ப அறிவை நாளாந்த வாழ்க்கையில் பிரயோகித்தல்.

பெற்றோரினதும் சமூகத்தினதும் எதிர்பார்ப்பானது வேறுமாதிரியாக இருக்கின்றது. மாணவர்கள் பின்வரும் விடயங்களில் எவ்வித தயக்கமுமின்றி உடனடியாக ஈடுபடல் வேண்டுமென்பதை அவர்களின் எதிர்பார்ப்பாகும்.

1. தேவையான போது தயக்கமின்றித் தேவாரம் பாடுதல்.
2. மேடைக்கூச்சமின்றி உரையாடுதல் நடித்தல்
3. ஆங்கிலத்தில் பேசுதல், எழுதுதல், கடிதம் எழுதுதல்.
4. இசையுடன் பாடுதல்.
5. நாட்டியத்தில் தேர்ச்சி பெற்றவராக இருத்தல்.
6. உலக வரலாறுகளைக் கற்றுத்தேர்ந்தவராக இருத்தல்.
7. கற்ற கல்வியை நாளாந்த வாழ்க்கையில் பிரயோகிக்கக்கூடியவராக இருத்தல் உதாரணமாக மனைப்பொருளியல் கற்ற மாணவி சமையலில் கெட்டிக்காரியாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு.
8. மற்றவர்களுடன் உரையாடி தனதும் தான்சார்ந்த சமூகத்தினதும் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவராக இருத்தல்.
9. எல்லா விடங்களிலும் தெளிவும் அறிவும் மிக்கவராக இருத்தல்.
10. சமூக முன்மாதிரியாக இருத்தல்.

இவ்வாறான உடனடி விளைவுகளையே பெற்றோரும் சமூகமும் எதிர்பார்க்கின்றனர். கல்வியின் நோக்கமாகட்டும், அல்லது சமூகத்தின் எதிர்பார்ப்பாகட்டும், இவற்றை விரைவாக எட்டுவதற்கு செயல்முறை ரீதியிலான கற்றல் கற்பித்தல் வழிவகை செய்யும் என்பதில் எவ்விதமான ஐயப்பாடுகளும் இல்லை.

பெற்றோராலும் சமூகத்தாலும் மாணவர்களின் குறைபாடுகளென இனங்காணப்படுகின்ற விடயங்கள் உண்மையில் அவர்களின் குறைபாடுகள் அல்ல. அவர்களின் 'பின்னிற்கும்' அல்லது 'முன்வராமை' என்ற இயல்பே இதுவாகும். இவ்வியல்பிலிருந்து மாணவர்களை வெளிக்கொணரும் பொறுப்பு முற்றுமுழுதாக ஆசிரியர்களையே சாரும் இப்பொறுப்பை ஏற்க வேண்டிய கடப்பாட்டிலிருந்து ஆசிரியர்களால் இலகுவில் விலகிக் கொள்ளவும் முடியாது.

செயல்முறைகள் அல்லது செயற்பாட்டு முறைகளினூடான கற்பித்தல் மாணவர்களை இக்குறைபாட்டிலிருந்து மீட்டெடுக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆசிரியர்கள் செயற்பாடுகளை வழங்கி மாணவர்களைச் செயற்பட வைப்பதன் மூலமும் செய்துகாட்டுவதன் மூலமும் அவர்களை வளர்த்தெடுக்க முடியும்.

முற்று முழுதாக செயல்முறை ரீதியிலான கற்றல் கற்பித்தலை நடைமுறைப்படுத்துவதற்கும் போதியளவிலான வசதி வாய்ப்புகளும், நிதிவசதிகளும் வழங்கப்படாமையும் ஒரு காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் இதனையே ஒரு சாட்டாகச் சொல்லிக்கொண்டிருக்காமல் கிடைக்கின்ற வளங்களை உச்சமாகப் பயன்படுத்தி ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தலில் ஈடுபடுதல் வேண்டும். ஆசிரியர்கள் முழுமனதுடன் ஈடுபாட்டுடன் தமது பணிகளில் ஈடுபடுவார்களெனின் மாணவர்களை இச்சமுதாயத்திற்கு ஏற்றவர்களாக மாற்றமுடியும் என்பதில் அணுவளவும் சந்தேகமில்லை.

# ஒரு அதிபரின் டயரியிலிருந்து....



நிஷா

பாடசாலையின் வருடாந்த பரிசளிப்புவிழா. பாடசாலை வளாகமே களை கட்டி நிற்கிறது அதுவும் இம்முறை 2005 ஆம் ஆண்டு O/L, A/L, புலமைப் பரிசில் இரண்டையும் சேர்த்து ஒன்றாக ஏற்பாடு செய்த விழா. விழாவிற்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் வருகை தரவிருப்பதனால் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் பாடசாலையின் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், அனைவரும் பகலிரவாக வகுப்பறைகள், கட்டிடங்களை வெள்ளையடிப்பதிலும், சுற்றாடலை அழகுபடுத்துவதிலும் ஈடுபட்டிருக்கின்றனர்.

பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினருடன் ஆசிரியர்களும் சேர்ந்து மாணவர்களுக்கான பரிசுகளைத் தீர்மானிக்கின்றனர். ஆசிரியர்களுக்குத் தெரியாமல் கற்றலில் சாதனையை ஏற்படுத்திய ஆசிரியர்களுக்கும் பரிசுகள் தெரிவு செய்யப்படுகின்றது. பழைய மாணவர்கள் கல்யாண வீட்டின் குதுகலத்துடன் நிகழ்ந்து கொண்டிருந்த வேலைகளை மேற்பார்வை செய்துகொண்டிருந்தனர்.

"என் மனதிலே சந்தோசத்திற்கு பதிலாக கலவரமும் என்ன பிரச்சினைகளுக்கு இந்த விழா வழிவகுக்க போகின்றதோ" என்ற பயமும் தோன்ற "ஆண்டவனே இந்த விழா நல்லபடியாக பிரச்சினையின்றி நடந்தேற வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்கிறேன்".

என் பயத்திற்கும் கலவரத்திற்கும் காரணங்கள் இல்லாமலில்லை. இப்படித்தான் இதற்கு முந்திய பரிசளிப்பு விழாவையும் கோலாகலமாக ஏற்பாடு செய்திருந்தோம். 05ம் தரத்தில் 10மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்திருந்தனர். அதனால் அமைச்சர் ஒருவர் தலைமை தாங்குவதாக ஏற்பாடு. ஆனால் துரதிர்ஸ்டவசமாக புலமைப் பரிசில் சித்தியடைந்த மாணவர்களில் நால்வருக்குத்தான் அந்த புலமைப்பரிசில் பணம்.

பாவம்! மற்ற அனைவரும் உத்தியோகம் பார்ப்பவர்களின் பிள்ளைகள். இந்த உத்தியோக முத்திரை தங்கள் விளையாட்டை, நித்திரையை, சுற்றுலாவை, விரும்பியபோது உறவினர் வீட்டிற்கு செல்வதை, எதையெதையெல்லாமோ பணயம் வைத்து படிக்கும் இம்மாணவருக்கும் பெற்றோருக்கும் பாடசாலைக்கும் பெருமை எடுத்துக் கொடுப்பதைத் தவிர வேற என்ன லாபம்?

என்னைப் பொறுத்த வரையில் இந்த உத்தியோக முத்திரையைக் காட்டி அதிகம் பாடசாலை சிற்றூழியர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இன்னும் பல குறைவான சம்பளம் பெறும் அரச ஊழியர்களின் பிள்ளைகளுக்கு இவ்வரச புலமைப்பரிசில் மறுக்கப்படுவது மனித உரிமை மீறல் என்பேன்.

"பிள்ளை ஒரு பிள்ளை அது ஒரு அளவிற் சிறிய ஆள் அல்ல" என்ற யுனிசேப்பின் பிரகடனப்படி பார்த்தால் இந்த புலமைப் பரிசிலுக்கு தோற்றும் பிள்ளைகள் ஒரு அளவில் சிறிய ஆளாக மாத்திரம் இல்லாமல் ஒரு முழு ஆளாகவே இங்கு கணிக்கப்பட்டு அவர்களுக்கக்குப் பாடத்தின் சுமைகள் நிமிர முடியாத படி முதுகின் மேல் சுமத்தப்படுகின்றன. புலமைப்பரிசில் என்பது ஒரு சுயமான, மாணவர்களின் அறிவைப் பரீட்சித்து புள்ளி வழங்கி கௌரவிக்கும் ஒரு பரீட்சை ஆனால் இது பாடசாலை மட்டத்தில், பிள்ளைகளுக்கிடையில், தனியார் நிறுவனங்களுக்கிடையில், ஏற்படுத்தியிருக்கின்ற போட்டியை பற்றி யோசித்தால் எம் இலங்கைத் தீவில் 05ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையைத் தவிர வேறு அதிக இலாபம் ஈட்டக்கூடிய ஒரு தொழில் இல்லையென்றுதான் கூறுவேன்.

இந்தச் சிறுசுகளை முதலீடுகளாகப் பயன்படுத்தி எத்தனை பெரிய விற்பனைப்பேட்டை? நினைத்தாலே நெஞ்சு நடுங்குகின்றது எனக்கு. என்றாலும் இந்த மாயவலையில் நானும் விழ வேண்டிய நிர்ப்பந்தம். என் மனசுக்கு உடன்பாடில்லாத ஒன்றுதான் இந்தப் பிஞ்சுகளை இயந்திரமாக்கிப் பெறப்படும் பெறுபேறு. ஒரு பாடசாலையின் தரத்தை நிர்ணயிப்பதில் முதலிடத்தை வகிப்பது இந்த 05 ஆந் தரப் புலமைப்பரிசில் தானே. இயற்கையிலேயே இரக்க சுபாவம் உள்ள எனக்கு அந்தப் பத்து மாணவர்களையும் மட்டுமல்ல அத்தனை 05ஆந்தர மாணவர்களையும் கண்ணீர் மல்கக் கட்டித் தழுவி புலமைப்பரிசில் பரீட்சை சிறையில் இருந்து மீண்டு விட்டதற்கு வாழ்த்துச் சொல்ல வேண்டும் போலிருந்தது. என்றாலும், சில பதவிகள்

ஆசாபாசங்களுக்கு அப்பாற்பட்டது. கடமைகளுக்காக உணர்வுகளைப் புதைத்து விட்டு இருக்க வேண்டியது சொந்த பந்தங்களை தூரத்தில் நிறுத்தி பாராமுகமாய் நடக்க வைப்பது. மகிழ்சியையும் நன்றியுணர்வையும் காட்டுவதற்கு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுள் 100க்கு மேல் புள்ளியெடுத்த மாணவர்கள், பரீட்சை-யெழுதிய மாணவர்கள் என பிரித்து எல்லோருக்கும் பரிசு வழங்கத் தீர்மானித்தோம்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு விஷேடமாக என் சொந்தக் காசில் ஒரு பரிசு வழங்கப்படுகின்றது. மற்றும் கற்பித்த ஆசிரியர்கள் தொகுதியினருக்கு ஒரு பரிசு நலன் விரும்பிகள் மற்றும் பெற்றார் சார்பில் சற்று ஏறக் குறைய 10க்கு மேற் பட்ட பரிசுகள் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், தலா ஒவ்வொரு பரிசுகள் மற்றும் அனைவருக்கும் என தீர்மானிக்கப்பட்டது. இரவிரவாகப் பரிசுகள மடிக்கப்படுகின்றன.

அந்நேரத்தில் தான் பழைய மாணவரும் அந் நகரத்தின் பெரியதொரு செருப்புக் கடைக்குச் சொந்தமான வருமான ஜீவன் ஓடிவருகிறார். "மெடம் இந்த ஸ்கொலர்சிப் பாஸ்பன்னுன பிள்ளைகளுக்கு நானும் பரிசு தர விரும்புகிறேன். என்கிட்ட நல்ல அழகான விலை கூடின வெள்ளைச் சப்பாத்துக்கள் இருக்குது. அதைத் தரலாமா எனத் தயங்கித்தயங்கி கேட்கிறார். கட்டாயம் தாருங்கள். மாணவர்களுக்கு மிகவும் உபயோகப்படும் தானே அது எனக் கூறி நாளை அந்தப் பத்து மாணவர்களையும் கடைக்கு அனுப்பி அவர்களின் கால் அளவுகளுக்கு ஏற்ப செருப்புகளை தெரிவு செய்து கொள்கிறேன்.

அழைப்பிதழ் வேலைகளை பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினரே பொறுப்பெடுத்துக் கொள்கின்றனர். சிறப்பு விருந்தினராக பிரதேச செயலாளரும் சமூக நிறுவனங்களின் தலைவர்களில் ஒரு சிலரும் கலந்து சிறப்பிப்பதாக அழைப்பிதழ்கள் அச்சிடப்பட்டு அனுப்பப்படுகின்றன. பாடசாலை மாணவர்களின் அத்தனை பெற்றோருக்கும் பகிரங்க அழைப்பு விடுக்கப்படுகின்றது. பரிசளிப்பு விழாவின் நாள் நெருங்கியது. அன்றைய நாளின் சந்தோசத்திற்காய் பிரார்த்தித்துக் கொண்டே குட்டி போட்ட பூனையின் குறுகுறுப்புடன் மேலும் கீழும் நடக்கிறேன் நான்.

மண்டப அலங்காரம் வரவேற்பு, ஒலி பெருக்கி ஒழுங்கு, நிகழ்ச்சி ஒத்திகை, பரிசுகளை ஒழுங்கு செய்தல், என ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட நிகழ்ச்சி பொறுப்புக்களை மேற்பார்வை செய்கிறேன். புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஒரு மாணவியின் தந்தை கொடுத்ததாக ஒரு கடிதத்தை என் கையில் திணிக்கிறார் பிரதி அதிபர்.

கடிதம் எனது பெயருக்கு விலாசம் இடப்பட்டதால் அவர் பிரித்துப் பார்க்கவில்லை. கடிதத்தை பிரித்த எனக்கு சிரிப்பு வருகிறது. தான் ஒரு பொறுப்பான உத்தியோகத்தர் எனவும், தான் இப்பாடசாலைக்கு பல வகைகளில் சேவைகள் வழங்கியவர் என்றும் என்றாலும், தன் பெயரை அழைப்பிதழில் சேர்க்கப்பட வில்லையென்றும், பிச்சு வாங்கியிருந்தார் அவர். வழமையான வாழ்த்துரைகள் என்பதினால் சிறு புன்னகையுடன் ஏற்றுக் கொள்கிறேன். தாளமாட்டாத மகிழ்ச்சியுடன் பரிசுகளை சுமந்து செல்லும் மாணவர்களைப் பார்க்க பெற்றோருக்கும் எனக்கும் ஆசிரியர்களுக்கும் மன நிறைவாக இருக்கிறது.

அந்தப் பரிசளிப்பு விழா தந்த உற்சாகத்தில் கடந்து போகின்றன சில நாட்கள்.

அப்போது தான் இலங்கையின் பிரபல பத்திரிகையை கையில் பிடித்தபடி ஓடி வருகிறார் எமது கல்லூரியின் நூலகர் திருமதி ஜோசப். வழமையாகவே அன்றாடப் பத்திரிகைகளில் வரும் முக்கிய விடயங்களை கோடிட்டு எனது காரியாலயத்திற்கு என் பார்வைக்காக அனுப்புவது அவர் பழக்கம். மெடம் இந்தச் "செய்தியைப் பாருங்கள் என பத்திரிகையை என் மேசையில் வைக்கிறார். என் முன்னால் விரித்திருந்த தர உள்ளீட்டுக் கோவையை சற்று நகர்த்தி வைத்து விட்டு பத்திரிகையை மேய்கின்றன என் கண்கள். "பிரபல மகளிர் கல்லூரி ஒன்றின் புலமைப் பரிசில் விழா" எனத் தலைப்பிட்டு வந்திருந்த செய்தி இப்படிச் சொல்கின்றது. பிரபல மகளிர் கல்லூரி ஒன்றில் நடைபெற்ற புலமைப் பரிசில் விழாவில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு செருப்பை பரிசாக வழங்கியிருக்கிறார்கள். இது நியாயமா? மாணவர்களும் பெற்றோர்களும் இது குறித்து ஆழ்ந்த அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

எனக்கு மின்னல் என பளிச்சிடுகிறது. விழா அன்று காலையில் வந்த கடிதம் ஆ? அவரின் கைங்கரியம் தான் இது. இந்தப் பத்திரிகைக்கு செய்திகள் அனுப்புவதாய் சொல்லி எமது கல்லூரிச் செய்தியொன்றை அவர் வாங்கிச் சென்ற ஞாபகம். அவருக்குத் தான் தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி. அவரின் பெயரை அழைப்பிதழில் அச்சடிக்காத ஆதங்கம். பத்திரிகை ஆசிரியருக்கு. மூளை எங்கே போயிற்று?

"செருப்பு" பரிசு கொடுக்க முடியாத பொருள் என்று தீர்மானித்தது யார்? சித்தியெய்திய மாணவர்களுக்குப் பரிசு கொடுத்து கௌரவித்த அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினருக்கும் கிடைத்த ஊக்குவிப்பு இது தானா? என்னுள் ஒன்றன் பின் ஒன்றாய் எழுந்த கேள்விகளுக்கு விடை தேடுவதை விட அன்றைய நாளை குழப்பமில்லாமல் கொண்டு போக வேண்டுமே என்ற கவலை என்னுள் மிகைக்கிறது.

பத்திரிகை இங்கேயே இருக்கட்டும் "யாருக்கும் செய்தியை இப்போது சொல்ல வேண்டாம் என திருமதி ஜோசப்பை கேட்டுக் கொண்டே என் மேசையில் இருக்கும் தொலைபேசி எண்களை சுழற்றுகிறேன். இச் செய்திக்கு மறுப்புச் செய்தி போட வேண்டுமென பத்திரிகை ஆசிரியரை வேண்டுகோள் விடுப்பதற்காய்.

# பல்துறை நிபுணத்துவமே இன்றைய ஆசிரியர்க்கு அவசியம்;



அ. பஞ்சலிங்கம்
முன்னாள் அதிபர்
யாழ்ப்பாணம்

இரண்டு தலைமுறைக்களுக்கு முன்னைய எமது சமுதாயத்தில் கல்வி அறிவுடையோர் அதிகம் பேர் இல்லை. எட்டாம் தரம் சித்தியடைந்தால் அரசாங்கத்தில் அல்லது தனியார் துறையில் தொழில் பெற வாய்ப்பிருந்தது. ஆசிரியத் தொழில் கூடப் பலருக்குக் கிடைத்தது. ஆனால் சமுதாயத்தில் கற்றோர் தரமும் எண்ணிக்கையும், பல காரணங்களினால் அதிகரிக்க ஆசிரிய தொழிலுக்கு வேண்டிய கல்வித் தகைமைகளும் உயரத்தொடங்கின.

இன்று ஆசிரியராக வரவேண்டுமாயின் அடிப்படைத் தகைமை க.பொ.த. உயர்தரமாகும். ஆனால் சமுதாயத்தில் ஏராளமான பட்டத்தாரிகள் கூட வேலையற்றும் காணப்படுகின்றனர். எனவே இந்த அடிப்படைத்தகைமை விரைவில் பட்டக்கல்வியாக மாறக்கூடிய சாத்தியமுண்டு.

இன்றைய எமது சமுதாயத்தில் மக்களின் கல்வித்தராதரமும் கற்பித்தல் சம்பந்தமான அறிவும் பொது விடயங்களில் அவர்களின் விழிப்பும் மிகவும் உயர் நிலையில் காணப்படுகின்றன.

எனவே சமுதாயத்தில் ஒரு காலத்தில் ஆசிரியருக்கிருந்த மதிப்பினை உயர்த்திக் கொள்ள வேண்டியதாயின் ஆசிரியர்கள் சமூகத்திற்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையில் தம்மை உயர்த்த வேண்டும். இங்கே கருதப்படுவது பட்டத்தின் மேல் பட்டமெடுப்பது மட்டுமல்ல. ஓரளவேனும் ஆழமான பரந்த அறிவுள்ள ஆசிரியர்கள் உருவாக வேண்டும்.


மாணவன் தனது துறையில் நிபுணத்துவமுள்ள ஆசிரியரை மதிக்கின்றான் தான். ஆனால் பரந்த நிபுணத்துவமுள்ள ஒருவரை அவரை விடக் கூட மதிக்கின்றான். இவ்வாசகம் சமுதாயத்திற்கும் பொருந்தும் சமூகமும் பல்துறைத் தொழிற்பாடுள்ள ஒருவரையே மேலானவராக மதிக்கின்றது. எனவே ஆசிரியர்கள் பரந்த அறிவினைப் பெற முயற்சிக்க வேண்டும். வாசிப்புப் பழக்கத்தை வளர்த்தல் அவசியம். ஐம்பது வீத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் தினசரிப் பத்திரிகைகளையேனும் வாசிக்காத நிலையில் இது சாத்தியமாகுமா? இன்றைய அறிவுச் சமுதாயத்தின் சவால்களைச் சந்திக்க முடியுமா?

எமது பிரதேசங்களில் முன்பள்ளிகளின் முக்கியத்துவம் இப்பொழுது உணரப்படுகின்றது. குக்கிராமங்கள் தோறும் முன்பள்ளிகள் ஸ்தாபிக்கப்பட்டு ஐந்து வயதுக்குட்பட்ட சிறார்கள் பலருக்கும் கற்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. முன்பள்ளிகள் இருவகையில் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒன்று மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் அனுபவங்கள் அதன் பேறாக உருவாகும் ஆளுமை அவர்களின் பிற்கால நடத்தையைப் பாதிக்கின்றதென்பதாகும். அடுத்தாக முறைசார் பாடசாலைக் கல்விக்குப் பிள்ளைகளை தயார் செய்கின்றமை.

இவ்வாறு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த முன்பள்ளிக்கல்வியில் அரசாங்கம் கடந்த ஒரு தசாப்தமாகத்தான் சிறிதளவேனும் அக்கறை காண்பிக்கின்றது. உள்ளூர் ஆட்சி மன்றங்களும் கல்வித் திணைக்கங்களும் முன்பள்ளிகளின் வளர்ச்சியில் ஈடுபட அரசாங்கத்தினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

முன்பள்ளிகளை இயக்குகின்றவர்கள் முன்பள்ளி ஆசிரியர்கள். ஆனாலும் அவர்களின் வேதனத்தில் உள்ளூர் ஆட்சி மன்றமோ கல்வி திணைக்களமோ எதுவுமோ செய்யமுடியாத நிலை. ஏதாவது அரச சார்பற்ற நிறுவனத்தின் ஒத்தாசையுடன் சில கருத்தரங்குள் பயிற்சிப் பட்டறைகள் மட்டுமே நடாத்த முடியும். சான்றிதழ்கள் அவர்களின் வயிற்றை நிரப்பாது. பெற்றோர்களும் ஆசியர்களின் வேதனத்தைப் பற்றிப் பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை. சில ஆசிரியர்கள் மாதம் ரூ.250 வரையிலே தான் வேதனமாகப் பெறுகின்றனர். இந்நிலைமை வேதனைக்குரியது. எம்மில் ஒவ்வொருவரதும் மனச்சாட்சியை உறுத்த வேண்டும். சமுதாயத்தில் அக்கறையுள்ள ஒவ்வொருவரும் சிந்தித்து இந்நிலையை மாற்ற முன்வரவேண்டும்.

# நூலகம்




இன்று தமிழில் கல்வியியல் தொடர்பான நூல்கள் அதிகம் வெளிவரத் தொடங்கியுள்ளன. ஈழம், தமிழகம் என்ற ரீதியில் வெளிவரக் கூடிய நூல்களை முழுமையாக கணக்கெடுக்க முடியாதளவிற்கு அவை வெளிவருகின்றன.

ஆனால் நமது ஆசிரியர் சமூகம் மட்டும் இவை பற்றிய அருட்டுணர்வு எதுவுமின்றி இருப்பது தான் வேதனையளிக்கின்றது. புத்தகங்கள் வாசிக்காமலேயே நம்மவர்கள் அறிவைக் கடத்துபவர்களாக உள்ளார்கள். இவர்கள் ஆசிரியர் என்றாலே எல்லாம் தெரியும் என்ற வலுவான நம்பிக்கையில் இருப்பவர்கள். இந்த மரபு எவ்வாறு வாழ்வியல் ஒழுகலாறாக கடைப்பிடிக்கப்படுகிறது என்பது மட்டும் புரியவில்லை.

தமிழ்நாட்டில் 'பாரதி புத்தகாலயம்' குறுகிய காலத்தில் மக்கள் வாங்கும் சக்திக்கேற்ப நூல்களை அதிகம் வெளியிட்டு வருகின்றார்கள். சமீபத்தில் இவர்கள் "மாற்றுக்கல்வி" குறித்து 25 புத்தககங்களை ஒரே தடவையில் வெளியிட்டுள்ளார்கள். சுமார் 3000 பக்கம். இவை இந்திய விலையில் 1500 ரூபாவில் கிடைக்கும். அதே நேரம் ஆரம்பத்தில் முன்வெளியீட்டுத் திட்டத்தில் ரூபா 800/- க்கும் வழங்கினார்கள். இது போன்ற முயற்சிகள் எமது சூழலில் இடம்பெற வேண்டும்.

வெறுமனே புத்தகங்களை வணிகப் பொருளாக மட்டும் நோக்காமல் மக்களிடம் அறிவைக் கையளிக்கும் மற்றும் உயிர்ப்புகள் வாசிப்புச் சூழலை வளர்க்கும் பெரும் பணியில் ஈடுபடக்கூடிய சமூகப் பொறுப்புடன் கூடிய பதிப்பகங்கள் எம்மிடையே உருவாக வேண்டும். எமது வாங்கும் திறனுக்கேற்ப புத்தகங்களுக்கான விலை நிர்ணயம் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

பாரதி புத்தகாலயம் போன்றவை இடதுசாரி சிந்தனை மரபுகளுடன் வருபவர்கள். சமூகத்தில் மாற்றங்களை உருவாக்க விளைபவர்கள். ஆகவே கல்வியில் மாற்றுக் கருத்துகளை விதைக்க விரும்புகிறார்கள். இதன் தொடர்ச்சியான பணிகளில் ஒன்றாகவே இந்த 25 புத்தகங்களது வெளியீடும் கூட.

பெரியார், அம்பேத்கர், பாரதி, காந்தி விவேகானந்தர், தாகூர், பெட்ரண்ட்ரஸல், லெனின் போன்றவர்களது கல்விச் சிந்தனைகள் முறையே தனித்தனி சிறு நூல்களாக வெளிவந்துள்ளன. இவை தவிர கற்க கற்பிக்க, மகிழ்ச்சி தரும் பள்ளி, இன்றைய இந்தியக் கல்வி, எவ்வாறு குழந்தைகள் கற்கின்றனர்?, குழந்தைகளை கொண்டாடுவோம், முதல் ஆசிரியர், கல்வி வளர்ச்சியில் முன்னோடிகள், முரண்பாட்டை முன்வைத்தல், கல்வியில் நாடகம், கதை சொல்லும் கலை, வாசிப்பு மற்றும் தேர்வுமுறையின் அரசியல், காலந்தோறும் கல்வி, தமிழக பள்ளிக்கல்வி, மலர்ந்து மலராத போன்ற தலைப்புகளிலும் நூல்கள் வெளிவந்துள்ளன.

இந்த நூல்கள் நடைமுறையில் உள்ள கல்விமுறைமை குறித்து கேள்விகள் எழுப்பவும் மாற்றுக் கல்விச் செயற்பாடுகளில் ஈடுவதற்கான விமரிசன நோக்கை முன்வைக்கவும் முயலுகின்றன. கல்விசார் கண்ணோட்டங்களில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் எமது உலகக் கண்ணோட்டம் மற்றும் விழுமிய மதிப்பீடுகளில் சமூகச் செயற்பாடுகள் போன்றவற்றிலும் பெரும் தாக்கம் விளைவிக்கும். இந்த நோக்கத்தை அடையும் விதத்தில் தான் "25 புத்தகங்கள்" வெளியிடப்பட்டுள்ளன.

குறைந்த பட்சம் நமக்கு இத்தகு நூல்கள் வெளிவந்திருக்கின்றது என்னும் தகவல் கூட தெரிந்திருப்பதில் தவறு ஒன்றுமில்லை.

-மூர்-

# அகவிழி மாதாந்தக் கருத்தாடல்





மட்டக்களப்பு அகவிழி வாசக வட்டம் மாதந்தோறும் பூரணை விடுமுறை தினத்தில் கல்விசார் கருத்தரங்குகளை சீரான முறையில் நடாத்தி வருகின்றது.

ஒரு வருடத்துக்கும் மேலாக நடைபெற்றுவரும் இந்நிகழ்வுக்கு மட்டக்களப்பிலுள்ள கல்வியதிகாரிகள், பாடசாலை அதிபர் கள், ஆசிரியர்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் விரிவுரையாளர்களும் கலந்து பயன்பெறுகின்றனர்.



சமகால கல்விசார் பிரச்சினைகளை அகவிழி சஞ்சிகை யை மையப்படுத்தி இக்கலந்துரையாடல்கள் நடை பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வரிசையில் செப்டம்பர் மாத நிகழ்வு எதிர்வரும் 14ம் திகதி பி.ப. 3.30 மணிக்கு மட்டக்களப்பு அகவிழி அலுவலக கேட்போர் கூடத்தில் திரு. த. யுவராஜன் அவர்கள் தலைமையில் நடை பெறும். அன்றைய தினத்தில் கல்வியியலாளர் திரு. பார்த்திபன் எழுதிய "தொழில் வழிப்படுத்துதல்" என்னும் கட்டுரை மீதான கருத்தாடல் நடைபெற உள்ளது.

-மீனா-

---

## வாசகர் கவனத்திற்கு...

நாம் கடந்த 2008 ஆகஸ்ட் மாத இதழில் புதிய சந்தாக்களை தற்காலிகமாக இடைநிறுத்த எண்ணியுள்ளோம் என குறிப்பிட்டிருந்தோம். ஆனால் இதற்கு எமது வாசகர்கள் பலர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்கள். அத்துடன் பல்வேறு ஆலோசனைகளையும் முன்வைத்து இருந்தார்கள். இவற்றையெல்லாம் பரிசீலித்தபின்னர் நாம் முன்னர் தற்காலிகமாக இடைநிறுத்துவதென எடுத்திருந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில்லை என வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

தொடர்ந்து வாசகர்கள் அகவிழிக்கான தமது சந்தாக்களை புதுப்பிக்கலாம். இன்னும் புதியவர்கள் சந்தாதாரர்களாக இணையலாம். இதுவரை தபால் செலவு உட்பட ரூபா 800/- ஐ சந்தாவாக செலுத்தி அகவிழியை பெற்று வந்தவர்கள் இனி செப்டெம்பர் மாதத்திலிருந்து சந்தாவாக ரூபா 1000/- ஐ (இதற்குள் தபால் செலவும் அடங்கும்) செலுத்தி அகவிழியின் தொடர் வருகையை மேம்படுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். மேலும் செப்டெம்பர் இதழில் இருந்து அகவிழி தனது பக்கங்களை அதிகரிக்கிறது என்பதையும் வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.

குறிப்பிட்ட பாடசாலை மற்றும் கல்வி நிறுவனம் பத்துக்கு மேற்பட்ட இதழ்களை ஒரே முகவரியில் எடுக்க விரும்பினால் அவர்கள் எம்முடன் தொடர்புகொள்ளலாம். அவர்களுக்கு விசேடமான சலுகைகள் உண்டு. மேலும் அகவிழியை தங்கள் பிரதேசங்களில் விநியோகிக்க விரும்புவர்களும் எம்முடன் நேரடியாக தொடர்பு கொள்ளலாம். அவர்களுக்கும் விசேட சலுகைகள் நிச்சயம் உண்டு.

வாசகர்களே! உங்களது சந்தாவைப் புதுப்பியுங்கள். இன்னும் பலரை அகவிழியுடன் இணைத்து விடுங்கள்.

-ஆசிரியர்-

நன்றி

AHAVILI
3, Torrington avenue, Colombo - 07
Tel : 011-2506272, Fax: 011-2585190
Email:- ahavili2004@yahoo.com,
ahavili2004@gmail.com

## சந்தா விண்ணப்பப் படிவம்

பெயர் (முழுப் பெயர்) : ______________

கற்பிக்கும் பாடசாலை : ______________

பாடசாலை முகவரி : ______________

தொலைபேசி/தொலைநகல் இல. : ______________

மின்அஞ்சல் முகவரி : ______________

கற்பிக்கும் பிரிவு : ஆரம்பம்/இடைநிலை/உயர்தரம்

அகவிழி அனுப்ப வேண்டிய முகவரி : ______________

இத்துடன் ரூபா [ ] க்கான காசோலை/காசுக் கட்டளையை

இல [ ] இணைத்துள்ளேன்.

கையொப்பம் திகதி

காசோலை மூலம் பணம் செலுத்துபவர்கள் AHAVILI எனப் பெயரிட்டு அனுப்புக. காசுக் கட்டளையாயின் AHAVILI எனப் பெயரிட்டு HAVELOCK TOWN தபால் நிலையத்தில் மாற்றக் கூடியவாறு மட்டுமே அனுப்பி வைக்கவும்.

இப்படிவத்தை போட்டோ பிரதி செய்து உபயோகிக்கவும்.

## சந்தா செலுத்த சில எளிய வழிமுறைகள்

அகவிழி சந்தா செலுத்த விரும்புவோர் மற்றும் அகவிழி வெளியீடுகளை நேரடியாகப் பெறப் பணம் செலுத்த விரும்புவோருக்கான சில எளிய வழிமுறைகள்.

அகவிழி, கொமஷல் வங்கி, வெள்ளவத்தை
நடைமுறைக் கணக்கு எண் 1100022581

Commercial வங்கியின் எந்த கிளைகளிலிருந்தும் அகவிழி கணக்கு எண்ணுக்கு சந்தா அல்லது புத்தக விலையை பணமாக வைப்பு செய்யலாம்.

வங்கி கமிஷன் இல்லை

பிற வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் VILUTHU - AHAVILI பெயருக்கு காசோலை எழுதி அகவிழி கணக்கு எண்ணைக் குறிப்பிட்டு உள்ளூர் Commercial வங்கியில் வைப்பு செய்யலாம்.

மேற்படி வழிமுறைகளில் பணம் அனுப்புவர்கள் செலுத்தப்பட்ட தொகை, தேதி, இடம், நாள் மற்றும் தேவைகளைக் குறிப்பிட்டு அகவிழி தலைமை அலுவலக முகவரிக்கு கடிதம் எழுதவேண்டுகிறோம். அல்லது மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

**சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | 50/= |
| ஆண்டு சந்தா (தபால் செலவுடன்) | : | 1000/= |

## அகவிழி விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின் அட்டை | : | 7000/- |
| உள் அட்டை (முன்) | : | 6000/- |
| உள் அட்டை (பின்) | : | 5000/- |
| உள் பக்கம் | : | 4000/- |
| நடு இருபக்கங்கள் | : | 6500/- |

**தொடர்புகட்கு**

**Colombo**
3, Torringto Avenue, Colombo - 07.
Tel: 011-2506272

**Jaffna**
189, Vembadi Road, Jaffna.
Tel: 021-2229866

**Trincomalee**
81 A Rajavarodayam Street, Trincomalee
Tel: 026-2224941

**Batticaloa**
19, Saravana Road, Kallady Batticaloa
Tel: 065-2222814

அன்புடன் அழைக்கிறது

சேமமடு

**சேமமடு பொத்தகசாலை**

**CHEMAMADU BOOK CENTRE**

**Tel: 011-247 2362,232 1905**

**Fax: 011-244 8624**

E-Mail: chemamadu@yahoo.com
UG 49, 50, People's Park,
Colombo 11,
Sri Lanka

**இலக்கியத் தென்றல்**
பேராசிரியர் முனைவர் சு. வித்தியானந்தன்

**அழகியல்**
பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா

**கல்விச் சமூகவியல்**
பேராசிரியர் சபா ஜெயராசா

**இலங்கையில் கல்வி வரலாறு**
பேரசிரியர் சபா ஜெயராசா

**வளிமண்டலவியலும்**
**காலநிலையியலும்**
பேராசிரியர் அன்ரனி நோர்பேட்


**சமகாலக் கல்வி**
**முறைகளின்**
**சில பரிமாணங்கள்**
பேராசிரியர் சோ. சந்திரசேகரன்

**கற்றல் உளவியல்**
பேராசிரியர் சபா ஜெயராசா


**கற்றல் கற்பித்தல்**
முனைவர் மா. கருணாநிதி

**இலங்கைத் தமிழர் வரலாற்றின் சில பக்கங்கள்**
பேராசிரியர் முனைவர் சத்தியசீலன்

**சைவ சித்தாந்தம் ஓர் அறிமுகம்**
ஆ. நோ. கிருஷ்ணவேணி






















# அகவிழி

## கிடைக்குமிடங்கள்

முரளி கொமினிகேஷன்
*185, டன்பார் வீதி,*
*ஹற்றன்*
தொ.பே.இல: *051-2222041/42/43*

குமரன் ரேட் சென்டர்
*18, டெய்லிபயர் கொம்பிலக்ஸ்*
*நுவரெலியா.*
தொ.பே.இல: *052-2223416*

அருணா ஸ்ரோஸ்
*38, கம்பளை வீதி,*
*நாவலப்பிட்டி.*
தொ.பே.இல: *077-4728883*

நியூ கேசவன் புக்ஸ்டோல்,
*56, டன்பார் வீதி,*
*ஹற்றன்.*
தொ.பே.இல: *051-2222504*
*051-2222977*

அபிஷா புத்தகக் கடை
*137, பிரதான வீதி,*
*தலவாக்கல.*
தொ.பே.இல: *052-2258437*

அருள் ரேட் சென்டர்
*19, பிரதான வீதி,*
*தலவாக்கல*
தொ.பே.இல: *052-2258584*

எம்.ஐ.எம். ஷியாட்
*46, கோட்ஸ் வீதி,*
*மாவனெல்ல, 71500*
கை.தொ.இல: *0777-065123*

அகவிழி நிலையம்
*81ஏ, இராஜவரோதயம் வீதி*
*திருகோணமலை.*
தொ.பே.இல: *026-2224941*

அறிவாலயம் புத்தகக்கடை
190B, புகையிரத வீதி,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா.
தொ.இல: *0777-222366*

நூார் மொகமட் நியுஸ் ஏஜன்ஸ்
*132, பிரதான வீதி,*
*கிண்ணியா 03*
தொ.பே.இல: *026-2236266*

அகவிழி நிலையம்
*19, சரவணா வீதி, கல்லடி*
*மட்டக்களப்பு.*
தொ.பே.இல: *065-2222500*

பி. ஜெகதீஸ்வரன்
*அமரசிங்கம் வீதி, ஆரயம்பதி*
*மட்டக்களப்பு .*
தொ.பே.இல: *065-4920925*
கை.தொ.இல: *0777-9028679*

அன்பு ஸ்ரோஸ்
*14, பிரதான வீதி,*
*கல்முனை*
தொ.பே.இல: *067-2229540*

எம். சண்முகராஜா
*56, பதுலுசிறிகம*
*பதுளை*
தொ.பே.இல: *055-2229137/072408521*

புக் லாப்
*172, ராமனாதன் வீதி,*
*திருநெல்வேலி*
*யாழ்ப்பாணம்*
தொ.பே.இல: *021-2227290*
கை.தொ.இல: *0777-840318*

எஸ். ஏ. முஹீர்
*ஆசிரிய நூலகர்*
*மர்க்கஸ் வீதி*
*மூதூர் - 05*
தொ.பே. இல: *060 226 1158,*
*077 991 7758*

கவிதா புத்தகக் கடை
வவுனியா
தொ.பே.இல: 0572223556

பராசக்தி ஏஜன்சீஸ்
*71, பிரதான வீதி*
*பண்டாரவளை*
தொ.பே.இல: *0572223556*

சன் புக் சொப்
*27,1ம் குறுக்கு தெரு*
*சிலாபம்*
*032-2220807*

பூபாலசிங்கம் புத்தகக் கடை
*202, செட்டித் தெரு,*
கொழும்பு *- 11*
தொ.பே.இல: *011-2422321*

பூபாலசிங்கம் புத்தகக் கடை
309- A 2/3, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு.
தொ.பே.இல: *4515775/2504266*

சேமமடு புத்தகக்கடை
UG 50, 52 *பீப்பில்ஸ் பார்க்*
கொழும்பு *11.*
தொ.பே.இல: *011- 2472362*

ஜோதி புக் சென்டர்,
*கிரான் பாஜார்,*
*மன்னார்*
தொ.பே.இல: *023- 2222052*

அகவிழி நிலையம்
*189, வேம்படி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
தொ.பே.இல: *021-2229866*

அகவிழி நிலையம்
*66, பேராதனை வீதி,*
*கண்டி.*
தொ.பே.இல: *081-2224041*
கை.தொ.இல: *077-9148987*